



"தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2017
சிறப்பிதழ்

# பூங்கதிர்

புத்தகம்

"வாசித்தல் சுவாசித்தல் போல
சுவாசித்தல் நின்றாலும் மரணம்
வாசித்தல் இல்லையென்றாலும்
மரணம்."

இதழ் : 05




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




WITH BEST COMPLIMENTS FROM.....!

# KAJAMUGAN HARDWARE

## கஜமுகன் ஹாட்வெயர்

கட்டிடப் பொருட்கள், லங்கா கம்பி, பைப் வகைகள், சீமெந்து
மெச்சன் மெஸ் வலைகள், பெயின்ற் வகைகள் மற்றும்
Pepsi Soda & Accessories, அனைத்தையும்
பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரே இடம்.....





147,149 Stanley Road,
Jaffna.

TEL : 021 222 2833 , 021 222 7144 , FAX : 021 222 2368
E-mail kajamuganhw@hotmail.com


147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கதிர்

**தேசிய வாசிப்பு மாத சிறப்புச் சஞ்சிகை — ஒக்டோபர் 2017**

**இதழ் - 05**



**வெளியீடு**

**பூநகரி பொதுநூலகம்**

**பூநகரி பிரதேச சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரிப் பிரதேசசபையின் பூநகரி பொதுநூலகம், தேசிய வாசிப்பு மாதம் – ஒக்டோபர் 2017 செயற்திட்டத்தினை சிறப்பாக செயற்படுத்தியதுடன் தனது வாசகர்கள் மத்தியில் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பல செயற்பாடுகளை செயற்படுத்தியுள்ளது. இச் செயற்பாடுகளின் பிரதான அம்சமாக பூங்கதிர் சஞ்சிகை வெளியீடு அமைகின்றது. இச்சஞ்சிகையானது தொடர்ச்சியாக ஐந்தாவது தடவை வெளியிடப்படுவது குறிப்பிடத் தக்கது. கடந்த நான்கு ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சஞ்சிகைகளிலும் பார்க்க சற்று மெருகூட்டப்பட்ட நிலையில் வாசிப்பிற்கு முக்கியத்துவம் வழங்கி இச்சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. குறிப்பாக கடந்த காலங்களில் மாணவர்களின் ஆக்கங்கள் அதிகமாக இச்சஞ்சிகையை அலங்கரித்திருந்தது. ஆனால் இம்முறை ஐந்தாவது மலராக வெளிவரவுள்ளதால் வாசகர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் ஆக்கங்கள் கோரப்பட்டன. அதிக ஆக்கங்களை மிகவும் ஆர்வத்துடன் வழங்கியமை காரணமாக சஞ்சிகை மிகவும் சிறப்பாக அமைந்துள்ள துடன் மாணவர்களின் ஆக்கங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதை மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்காலத்தில் அவர்களின் ஆக்கங்களில் சிறந்தவை பிரசுரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கி வழிகாட்டிய தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, எமது பிரதேச சபையின் செயலாளர், சக உத்தியோகத்தர்கள், அனைவருக்கும் எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி யடைகின்றேன் மேலும் இச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய கோட்டக் கல்வி அதிகாரி, அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கிளிநொச்சி மாவட்டத்திலேயே மிகப் பெரிய கட்டிட விஸ்தீரனம் கொண்ட எமது பூநகரி பொதுநூலகம் கடந்த 2012 புதிய கட்டிடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முன்னைய காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிக வாசகர்களை கொண்ட நூலகமாகத் திகழ்ந்த பூநகரி பொதுநூலகமானது மிகக் குறைந்த வாசகர்களுடன் இயங்கி வருகின்றது. இதனை கருத்திற் கொண்டு எமது தலைமைச் செயலகமான பூநகரி பிரதேசசபையின் ஆலோசனைக்கமைய பூநகரி பொதுநூலகம், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் சமூக ஆர்வலர்களுடன் இணைந்து வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும், வாசிப்புத் திறனை மேம்படுத்தவும், நூலகம் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கோடும் இச்சஞ்சிகை வருடந்தோறும் வெளியிட்டு வருகின்றது. எம்மால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பூநகரி பிரதேச வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் நூலகம் தொடர்பான விழிப்புணர்வையும், வாசிப்பின் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என்ற மேலான எண்ணக்கருக்களோடு இம்மலர் வெளியிடப் படுகின்றது.

நூலகர்
திரு ம.பிரபாகரன்.

---

புத்தகங்கள் இல்லாமல்
புரட்சிகள் சாத்தியமில்லை.

புத்தகப் புழுக்களால் பூவும்
பூப்பதில்லை என்பதை
இன்றைய இளைய சமூகம்
உணர வேண்டும்.

வாசிப்பை நேசிப்போம்!.
வாசிக்கத் தூண்டுவோம்!."

"நூல்களின் ஆதிக்கத்தை
அகத்தில் விதைத்து
புத்தக வாசிப்பு
என்னும் ஊக்கத்தை
உழைப்பாய் தருவோம்!
வாழ்வில் உயர்வோம்!
நாளைய தலைமுறை
நல்லுலகம் காணட்டும்
அறிவின் ஆற்றலை
அறிவியலும் காணட்டும்."

"புத்தகங்கள் உறக்கம்
வருவதற்கல்ல உறங்க
விடாமல் செய்வதற்கு...

"புத்தகங்களுக்கு எப்போதும்
மரணம் கிடையாது.
அவை எப்போதும் நம்மை
விழிப்புடன் இருக்க
உதவுகின்றன.


புத்தகம் என்பது உறக்கம்
வராமல் புரட்டுவதற்கல்ல.
நம்மை புரட்டிப் போடுவதற்கு"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகசாலை ...



தனித்தமைந்த வீட்டிற் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளைதன்னில்,
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசைகேட்டேன்! மணம்மோந்தேன்!
சுவைகள் உண்டேன்!
மனித்தரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப்பெரிது கண்டீர்!
மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்வமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள் புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்.
தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்.
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல்வேண்டும்,
அமுதம்போல் செந்தமிழிற் கவிதைநூற்கள்,
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்,
சுமைசுமையாய் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.
நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்,
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்.
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்துவந்து தருதல் வேண்டும்
வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்றதொண் டிழைப்பீர்! சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்!

பாவேந்தர் பாரதிதாசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி
மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்கள்



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
பிரதமர்
மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள்



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
மாகாண சபைகள் உள்ளுராட்சி அமைச்சர்
கௌரவ பைசல் முஸ்தபா அவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாண சபையின்
கௌரவ முதலமைச்சரும்
உள்ளூராட்சி அமைச்சருமான
**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள்**



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்
வடமாகாணத்திற்கான கௌரவ ஆளுநர்
**உயர்திரு றெஜினோல்ட் குரே அவர்கள்**



எமது உள்ளூராட்சி ஆணையாளர்
**உயர்திரு பற்றிக் டிறஞ்சன் அவர்கள்**



எமது உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
**உயர்திரு ந.பிரபாகரன் அவர்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் தலைவர்
கலாநிதி எஸ்.அபேவர்த்தன அவர்கள்




இலங்கை நூலகர் சங்கத்தின் தலைவி
திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பூநகரி பிரதேச சபையின் செயலாளரும்
பூநகரி பொதுநூலக வாசகர் வட்டத்தின் போசகருமான
உயர்திரு முத்துலிங்கம் இராஜகோபால் அவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலிலுள்ள ஆக்கங்களின் எழுத்தாளர்களும் தொகுப்பாளர்களும்



நூலகர் திரு ம.பிரபாகரன்



திரு சி.சுயேந்திரன்



திரு போல் தர்ஷாந்



திரு ந.ஆரூரன்



திரு சி.செல்வக்குமார் (முகிலன்)



திருமதி த.நிருஜா



Dr G.மதியரசி



திருமதி ஞா.தங்கமலர்செல்வி



திருமதி ந.மேதினி



செல்வி சு.பிரதீபா



திருமதி பி.பிரியா



செல்வி ப.ஹரித்தனா



திருமதி ச.பாலரதி



திருமதி க.வக்சலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "எமது செயலாளரின் உள்ளத்திலிருந்து"

### ஐந்தாம் ஆண்டில் பூங்கதிர்...!

திரு மு.இராஜகோபால்
செயலாளர்,
பூநகரி பிரதேச சபை.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச சபையின் பூநகரி பொதுநூலகத்தால் வெளியாகும் இப்பூங்கதிர் சஞ்சிகை எவ்வித தடங்கலுமின்றி தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டில் ஐந்தாவது மலராக வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த காலங்களில் வெளிவந்த இம்மலரானது மாணவர்கள் மத்தியிலும் வாசகர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றதோடு வாசிப்பு தொடர்பாக ஒரு விழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருந்தது. இதன் விளைவாக கடந்த ஆண்டு கல்வி அமைச்சின் தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் சிறந்த நூலகங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் எமது நூலகமும் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்விருதுக்கு இவ்வெளியீடுகள் சிறந்த சான்றாக அமைந்திருந்தமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

பூங்கதிர் இவ்வாண்டில் வழமையான அம்சங்களுடன் மேலும் பல சிறப்பு கட்டுரைகளையும் தாங்கி வந்து வாசிப்பை சுவாசிக்க செய்யவுள்ளது. மாணவர் கல்வி கற்கும் போது தனித்து கல்வியில் மட்டும் ஆர்வம் காட்டாது ஏனைய துறைகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும். குறிப்பாக ஆராய்ச்சிகள், எழுத்தாக்கங்கள் போன்றவற்றையும் வளர்க்க ஊக்குவிக்கப்பட வேண்டும். அந்த வகையில் காலத்திற்கு காலம் சஞ்சிகை வெளியிடுவதன் அவசியத்தன்மையுள்ளது. பூங்கதிர் சஞ்சிகையும் மாணவர்களின் பரந்த அறிவு, மேலதிக வாசிப்பு மற்றும் எழுத்தாக்கம், முற்போக்கு சிந்தனை, விமர்சன நோக்கு போன்றவற்றை வளர்க்க வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் வெளிவர உதவிய நூலகர், மற்றும் பிரதேச சபையின் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் இது தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### உலகின் பழமையான முதல் பத்து நூலகங்கள்

1. கோண்டிஷார்பூர் நூலகம் - ஈரான் - கி.பி 489
2. தேசிய நூலகம் - பாரீஸ், பிரான்ஸ் - கி.பி 1368
3. வத்திக்கான் நகர நூலகம் - ரோம் - கி.பி 1448
4. லெய்டென் பல்கலைக்கழக நூலகம் - நெதர்லாந்து – 1587
5. போட்லியன் நூலகம் - ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம், இலண்டன் - 1602
6. ஆம்ப்ரோசியன் நூலகம் - மிலன், பிரான்ஸ் - 1609
7. கேரிசன் நூலகம் - ஜிப்ரால்டர் - 1793
8. ராயல் நூலகம் - கோப்பென்ஹாகென், டென்மார்க் - 1793
9. ரஷ்சியன் தேசிய நூலகம் - செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், ரஷ்யா – 1795
10. டச் ராயல் நூலகம் - தி ஹேக், நெதர்லாந்து – 1798



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலகம்... வாசிப்பு... நாம்!!!**

திரு ம.பிரபாகரன்,
நூலகர்,
பூநகரி பொதுநூலகம்.

உலகத்திற்கொரு புதுமையாக சோஷலிச புரட்சி நடத்தி சோவியத் ரஷ்யாவின் தந்தையாக மக்களின் மனதில் நிறைந்தவர் மாபெரும் தலைவர் லெனின். அவருடைய பிறந்த நாளை நாடே கொண்டாடியது. அச்சமயம் மக்கள் அவரிடம் பிறந்த நாள் பரிசாக என்ன வேண்டும் என்று கேட்டார்கள். அத்தருணத்தில் புத்தகங்கள் வேண்டுமென லெனின் கூற பல இலட்சம் புத்தகங்கள் அவரிடம் குவிந்தன என்கிறது வரலாறு. புத்தகங்கள் நேசிப்புக்கும் வாசிப்புக்கும் உரியன என்பதைச் சுட்டிக்காட்ட இச் சம்பவத்தைப் பலரும் குறிப்பிடுவது உண்டு.

லெனின் ஆட்சித் தலைவராக இருந்த காலத்தில் இலட்சக் கணக்கில் நூலகங்கள் தோன்றின. சிறுவர்களுக்கென்று இரண்டு இலட்சம் நூலகங்கள் உருவாக்கப்பட்டன. 'நூலகம் உங்களை உயர்த்தும், வாருங்கள் படிப்போம்' என்று லெனின் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

மகாத்மா காந்தியும் நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார். ஒரு பத்திரிகை நிருபர் காந்தியிடம் ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது ஒரு நூலகம் கட்டுவேன் என்று பதிலளித்தாராம். நம் நாட்டிலும் நூலகத்தின் தேவை உணரப்பட்டுள்ளது. பொதுநூலகங்களை அரசு அமைத்து நடாத்தி வருகின்றது. மக்களிடம் நூலக வரி வசூலிக்கப்படுகிறது. ஒரு சாதாரண மனிதன் எல்லா நூல்களையும் வாங்கி விட முடியாத நிலையில் ஆயிரக்கணக்கான நூல்களைப் படிக்கும் வாய்ப்பைப் பொதுநூலகமே வழங்குகிறது.

'உலகத்தைப் புத்தகத்தில் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்' என்று சொல்லப்படுகிற நிலையில் வளரும் குழந்தைகளுக்கு உலகத்தைப் புத்தகங்களே செவ்வையாக அறிமுகப்படுத்துகிறது. குழந்தைகளுக்கென்று புத்தகங்கள் வெளிவந்த போது அவை முதலில் பொதுநூலகத்திலேயே இடம் பெற்றன. பொது நூலகம் பெரியோர்களுக்கானது. அவர்களின் தேவையும் நோக்கமும் வேறுபட்டது. இவ்விடயம் புரிந்து கொள்ளப்பட்ட பின்னரே குழந்தைகளுக்கென்று சிறுவர் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. *1885*-இல் அமெரிக்காவில் தான் முதன் முதலாகச் சிறுவர் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது.

நம் நாட்டில் சிறுவர்களுக்கும் நூலகங்களிற்கும் உள்ள உறவை எண்ணிப் பார்க்கும் போது வேதனையாக உள்ளது. ஒரு குழந்தைக்கு நீங்கள் தரும் மிகச் சிறந்த பரிசு புத்தகமாகத் தான் இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். ஆபரணங்கள், ஆடைகள் என்று விலையுயர்ந்தவைகளைப் பரிசாகத் தரும் பெற்றோர்கள் புத்தகங்கள் தருவதை இன்னும் நினைத்துப் பார்க்கவில்லை. கோவில்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் அறிவுக் கோவிலாக விளங்கும் நூலகத்திற்குக் கூட்டிச் செல்கிறார்களா, என்றால் அதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் குழந்தைகளுக்கு வழங்கும் அளப்பரிய வளர்ச்சிகளை தமிழ்க் குழந்தைகள் பெற முடியாமல் இருப்பதை எண்ணி வருந்துவதைத் தவிர வேறுவழியில்லை. இந்நிலையில் குழந்தைகள் புத்தகங்களோடு வளர பாடசாலை நூலகங்கள் உதவுகின்றன. நம் ஆரம்பப்பாடசாலைகள் பலவற்றில் நூலகமே இல்லை, சிலவற்றில் நூல்கள் இல்லை, சிலவற்றில் நூலக ஆசிரியர் இல்லை. இந்நிலை மாற வேண்டும். குழந்தைகள் பாடப் புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்களை ஏன் படிக்க வேண்டும் என்ற எண்ணமும் நம்மிடையே ஓங்கியிருக்கிறது. குழந்தைகள் புள்ளிகள் பெறும் போட்டியில் உந்தித் தள்ளப்படுகிறார்கள். குழந்தைகள் கதைப் புத்தகங்களைத் தொடுவது என்பது தீண்டத்தகாத ஒன்றாகி விட்டது.

ஆசிரியர்கள், குழந்தைகள் புத்தகங்களை நேசிக்க, வாசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளிடம் வாசிக்கும் ருசியை ஏற்படுத்தி விட்டால் நூலகங்கள் குழந்தைகளால் நிரம்பி வழியும். குழந்தைகளை நூலகத்திற்கு வரவழைத்தல் என்பது முக்கியமான விடயமாகும். கல்வித்துறை சார்ந்தோர், பாடசாலைக்கும் நூலகத்திற்கும் இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

நூலகங்களின் நிலைமையை எண்ணிப் பாருங்கள். எந்தக் குழந்தையாவது நூலகத்திற்கு வருமா? குழந்தைகளை ஈர்க்கும் விதத்தில் நூலகங்கள் இருக்கின்றதா? நூலகத்திற்கு பொருத்தமற்ற கட்டடங்களில் சில நூலகங்கள் இருக்கின்றன. முதலில் நூலகம் அமைய வேண்டிய இடம் குழந்தைகள் எளிதாக வரக்கூடிய இடமாக இருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள சில நூலகங்கள் குழந்தைகள் பயிற்சிக்கு வரும் இடங்களில் பூங்காக்களின் அருகில் விசாலமான இடத்தில் இருக்கின்றன. எல்லாப் பொதுநூலகங்களிலும் சிறுவர் பகுதி குழந்தை களைக் கவரும் விதத்தில் உள்ளன. கூப்பர் டீனோ பொது நூலகத்தின் வாயில் சுவரில் மிகப்பெரிய மீன் தொட்டி சுவரில் பதிக்கப்பட்டுள்ளது.

நீரில் சுற்றி வரும் வண்ண மீன்கள் குழந்தைகளை வாசிக்க வா என்று அழைப்பது போலிருக்கிறது. சன்னிவேல் பொது நூலகத்தின் முற்றத்தில் உட்கார்ந்த நிலையில் படித்துக் கொண்டிருக்கும் சிறுவனின் சிலை உள்ளது. அந்த நூலகத்தின் குறிக்கோள் வாசகம் முன்புறம் எழுதப்பட்டிருக்கிறது.

'வாசிப்பில் நுழை' *(Dig into Reading)* என்பதே அந்த வாசகம். குழந்தைகள் வாசிப்பில் நுழைவதற்கான ஆயத்தங்கள், உத்திகள் அந்த நூலகத்தில் இருக்கின்றன. குழந்தைகள் அமர்வதற்கான இருக்கைகள் அவர்கள் விரும்பும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. வட்டமாக, சதுரமாக, அடுக்குகள் கொண்டதாக, சாய்வாக இருக்கும் மெத்தை இருக்கைகள் குழந்தைகளை ஓரிடத்தில் உட்கார வைத்து விடுகின்றன. குழந்தைகளுக்கு எட்டும் உயரத்தில் புத்தக அலுமாரிகள், இறாக்கைகள், சுழலும் புத்தக அலுமாரிகள் புத்தகங்களை எளிதாக எடுக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர் பகுதியிலுள்ள அலங்காரங்கள், பொம்மைகள் குழந்தைகளைக் கவரும் சூழலை ஏற்படுத்தி விடுகின்றன.

புதிய புத்தகங்கள், சிறந்த புத்தகங்கள் சுவரில் பதிக்கப்பட்டுள்ள தாங்கிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு வழி காட்டும் விதமாகக் குழந்தைகளின் வயது அடிப்படையில் வாசிக்க வேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான புத்தகங்களின் தலைப்பும் விடயங்களின் சுருக்கமும் ஒவ்வொரு மாதமும் கைப்பிரதிகளாகத் தரப்படுகிறது. நூலகத்தில் நுழைந்துவிட்ட குழந்தைகள் வாசிப்பில் நுழைய புத்தகங்களே தூண்டில்களாக இருக்க வேண்டும். அமெரிக்க நூலகங்களிலுள்ள குழந்தை நூல்கள் குழந்தைகளுக்குரியதாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழில் பெரியவர்கள் நூல்களுக்கும் குழந்தைகள் நூல்களுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. அங்கு குழந்தை நூல்கள் பெரிய வடிவத்தில் தடித்த அட்டையுடன் கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன் இருக்கின்றன. நம் நூலகங்களில் இந்நிலை இல்லை.

நூலகத்தில் குழந்தைகளுக்கு நூல்களை அறிமுகப்படுத்துவது என்பதும் ஒரு கலை தான். நூலகம் அமைந்துள்ள ஊரைப் பற்றிய நூல்கள், தலைவர்கள், எழுத்தாளர்கள் பற்றிய நூல்கள் தனியாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. சிறுவர் நாவல் எழுதிய மார்க் ட்வைனின் சிலையும் நூல்களும் அவர் பிறந்த ஊரில் உள்ள நூலகத்தில் விசேஷமாக வைக்கப்பட்டிருக்கிறது.



நூலகத்தில் சிறுவர் பகுதியில் *(Children's Section)* தனி நூலகர் இருக்கிறார். குழந்தைகளை நேசிக்கும் அவர் குழந்தைகளுக்கு உதவுகிறார். வழிகாட்டுகிறார். புத்தகத்தைப் புரிந்து கொள்ளப் பயிற்சிகள் தருகிறார்.

விடுமுறை நாட்களில் நூலகத்தில் வாசிப்பு தொடர்பான பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. கதை சொல்லுதல், ஓவியப் போட்டி, மொழிப் பயிற்சிகள், இணையத்தளப் பயன்பாடுகள் எனக் சிறுவர்கள் ஊக்கமுடன் ஈடுபடுகிறார்கள். நூலகத்திலேயே சிறுவர்கள் வரைந்த ஓவியங்கள், செய்த கலைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. சிறப்பு நிகழ்வாக எழுத்தாளர் சந்திப்பும் கூட்டமும் நடைபெறுகிறது. கற்றல் தொடர்பான பாதிப் பணிகளை அங்கு நூலகமே செய்து விடுகிறது.

நல்ல நூல்களைப் படிப்பதற்கும் அதன் மூலம் சமூக மனிதனாகக் குழந்தைகள் வளர்வதற்கும் நூலகம் உதவமுடியும். நம்மூர் நூலகங்களில் சிறுவர் பகுதிகளை மெருகூட்டுவதற்கு அரசு செய்யும் காலம் வரை காத்திருக்க வேண்டியதில்லை. குழந்தை எழுத்தாளர்களும் குழந்தை நல ஆர்வலர்களும் அவரவர் வசிக்கும் ஊர்களில் உள்ள நூலகங்களில் சிறுவர் பகுதிகளை ஏற்படுத்த வேண்டும். மாதந்தோறும் நூலகங்களில் கதை சொல்லும் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். தமிழ்க் குழந்தைகள் வாசிப்பில் நுழைய இதுவே வழி.

---

**உலகின் நீளமான கலைக்களஞ்சியம்** (Encyclopaedia)

---

Yongle Dadian – **சீனக் கலைக்களஞ்சியம்.**

**1403 – 1408 காலத்தில் மிங் வம்ச ஆட்சியின் போது தொகுக்கப்பட்டது.**

**11095 தொகுப்புக்கள், 22877 அத்தியாயங்கள்"**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி த.ஞானேஸ்வரன்,
முகாமைத்துவ உதவியாளர்,
பூநகரி பிரதேச சபை

# மாணவர்களுக்கு வாசிக்கும் பழக்கத்தை கற்றுக் கொடுக்க முயற்சியுங்கள்!

படிப்பு என்றவுடன் பாடப்புத்தகங்கள் தான் மாணவர்களின் நினைவிற்கு வரும். ஆனால் அவற்றிற்கும் மேலதிகமாக படிக்க வேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கின்றன. புத்தகங்களை வாசிப்பது என்பது அவர்களுக்கு கூடுதலான பலத்தைத் தரும். உங்களின் பிள்ளைகளுக்கு வாசிக்கும் பழக்கத்தை முதலில் ஏற்படுத்துங்கள். குழந்தைகளின் மூளை 6 முதல் 10 வயதுக்குள் வேகமான வளர்ச்சி அடையும். அந்த வயதில் அவர்கள் பழகும் எந்த ஒரு செயலையும் எளிதில் கற்றுக் கொள்ள முடியும்.

## வாசிக்கும் பழக்கத்தை அன்றாட பணிகளில் ஒன்றாக மாற்ற, பெற்றோர்கள் செய்ய வேண்டிய அடிப்படை விடயங்கள்

- குழந்தைகள் பொதுவாக விளையாட்டில் ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள், அவர்களுக்கு ஒரே நாளில் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி விட முடியாது. அவர்களின் கவனத்தை சிறிது சிறிதாக வாசிப்பில் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும்.




- முதலில் படங்கள், பாடல்கள், பெரிய எழுத்துக்கள் உடைய புத்தங்களை வாங்கி கொடுத்து, அதில் இருக்கும் அடிப்படையான தகவல்களை, கதைகளை வாசிக்க சொல்லலாம்.
- குழந்தைகளுக்கு வாங்கி கொடுக்கும் புத்தங்களை கொஞ்சம் வித்தியாசமாக, வண்ணத்துணியில் வடிவமைக்கப்பட்ட புத்தகம், அட்டையில் வடிவமைக்கப்பட்டது, அனிமேஷன் புத்தங்கள் என பல்வேறு வடிவங்களில் வாங்கி கொடுத்து அவர்களை வியப்புக்குள்ளாக்கினால் அவர்கள் அந்தப் புத்தகத்தை படிக்க ஆரம்பித்து விடுவார்கள்.
- உங்கள் குழந்தையின் வயதுக்கு ஏற்ற புத்தகங்களை வீட்டில் வாங்கி வைப்பது அவசியம். குழந்தையின் பிறந்தநாள், அவர்களின் சிறந்த செயலுக்கு பாரட்டு, போன்ற சூழலில் அவர்களுக்கு புத்தகங்களை பரிசாக கொடுங்கள். அந்தப் புத்தகத்தை வாசிக்க சொல்லி அவர்கள் கூறும் தகவலைப் பொறுமையாக கேட்டு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- வீட்டில் இருக்கும் பெரியவர்கள் புத்தகங்கள் அல்லது பத்திரிகை படிக்கும் போது அதிலுள்ள விடயங்கள் பற்றி குழந்தைகளிடம் பேச வேண்டும், அதில் இருக்கும் படங்களைப் பார்க்கச் சொல்ல வேண்டும் அல்லது புத்தகத்தில் உள்ள கதையின் அரைப் பகுதியையோ, தகவலையோ அவர்களை ஈர்க்கும் விதமாக கூறிய பின்னர் மீதி இருக்கும் தகவலை அல்லது கதையை நீயே படித்து தெரிந்துகொள் எனக் கூறுங்கள்.
- குழந்தைகள் தினமும் ஒரு கதை மற்றவர்களுக்கு சொல்லும் பழக்கத்தை உருவாக்குங்கள். மேலும் அவர்கள் படித்த புத்தகத்தின் முடிவை மாற்றி எழுத சொல்லிப் பாராட்டலாம் அல்லது ஆர்வம் தரும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சிக்கலாம். உங்கள் பகுதியில் இருக்கும் நூலககத்தில் அவர்களை உறுப்பினராக்கி தினமும் ஒருமணி நேரமாவது நூலகம் செல்வதை அவர்களுக்குப் பழக்கப் படுத்துங்கள். குழந்தைகளுக்கு அகல வடிவிலான புத்தகங்களை வாங்கி கொடுப்பதை தவிர்த்து, அவர்கள் எளிதில் கையாளக் கூடிய வகையில் நீள வடிவிலான புத்தகங்களை வாங்கி கொடுக்கலாம். குழந்தைகளுக்கு கதை சொல்லும் போது கதைப் புத்தகத்தை உங்கள் கையில் வைத்துக் கொண்டு அதில் வரும் படங்களை அவர்கள் பார்க்கும் படி செய்யலாம். இதனால் வாசிப்புத் தன்மை அதிகரிப்பதுடன் அவர்களின் கற்பனைத் திறனும் வளரும். இறுவட்டுடன் (CD's) கூடிய கதைப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்து, முதலில் புத்தகத்தை படிக்கச் சொல்லுங்கள். பின் CD யைப் பார்க்க சொல்லுங்கள். இதனால் அவர்களுக்கு புரிதல் தன்மையும் அதிகரிக்கும்.



---

## நாம் விரும்பும் கோயில்

காலை என்றும் மாலை என்றும்
பின்னர் தோன்றும்
கறுப்பிருட்டுப் பொழுதென்றும்
காலம் -
ஓயா வேகமுடன் சுழலுகையில்
அந்த வேகம் விட்டுச் செல்கின்ற
சுவட்டுக்கெல்லாம்,
ஏதும் உண்டோ அர்த்தம்?
இது என்ன அர்த்தம்?

இவைகளை நாம் யோசித்துப்
பார்க்கும் போதில்;
எண்ணங்கள் எத்தனையோ
எங்கள் நெஞ்சாம் இருட்டறையில்
மின்னுவதை உணருகின்றோம்.

உண்மைகளின் பிள்ளைகளாய்
உயிரும் பெற்றே,
உலகத்தை ஆட்சி செய்யும்
வலிமை வாய்ந்த எண்ணங்கள் பலவற்றுள்
அருமையான இயல்புடைய அவற்றை எல்லாம்
திரட்டிக் கூட்டி,
வண்ணங்கள் பல தீட்டி வைத்தால்,
எங்கள் மன - அறைகள் நிரம்பாவோ? நிரம்பும்
தானே?

மனவறைகள் தோறும் யாம் மாற்றுயர்ந்த
மாணிக்கம் வயிரமணி,
மற்றும் உள்ள விலை உயர்ந்த இரத்தினங்கள்
சேகரித்தால்,
மேம்பட்டு விளங்காதோ எங்கள் செல்வம்?
தினசரிகள், சஞ்சிகைகள், கவிதைக்கோவை,
திருநெறிய பாசுரங்கள் என்றவாறாய்;
புனைகதைகள், காவியங்கள், நாவல்கள்,
பாட்டு, பொருள் பொதிந்த சங்கீதம்
என்றவாறாய் .....

திரவியங்கள் திரட்டி வைக்கும்
ஞானசோதித் திருக்கோயில் தான்,
நல்ல நூலகங்கள்.
பிறவி என்ற பேறு பெற்ற பலனை நல்கும்
பெட்டகங்கள் அடுக்கி வைத்த செல்வச்சாலை
உலகில் உள்ள நூலகங்கள்.

ஆதலாலே,
உலகினர்கள் நூலகத்தை நாடிச்சென்று,
தமது உரிமை எனத்தக்க அறிவை,
அன்பை, அறிவுணர்வை, திறமைகளை
அள்ளிக்கொண்டால்...
நூலகங்களால் விளையும் பயனை,
எங்கள் நுணுக்குணர்வின் முழுப்பலனை
நுகர்வோம் நாங்கள்...
காலமெல்லாம் நிலைத்து நிற்கும் அறிவுப்
பேற்றை,

கலைச்சுவைப்பு முழுத் திறனைப்
பெறுவோம் நாங்கள்,
கூனல் மதி படைத்தோரின்
கோணலான கொக்கரிப்பும் வக்கரிப்பும்
மக்கிப் போக,
ஞான நிலை பொன்கதிர்கள் விரியலாகும்.
நாம் விரும்பும் கோயில்,
நூல் அகங்கள் ஆகும்.



கவிஞர்
இ. முருகையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேச சபை

இலங்கையின் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பூநகரி ஆகும். இப்பிரதேசம் ஒரு குறிப்பிடத்தக்க தொல்லியல் ஆய்வுக் களமாகவும் விளங்குகின்றது. பூநகரி இறங்குதுறை யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கான மாற்றுப் பாதையாகவும் விளங்கு கின்றது. பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் பகுதிகள் பூநகரி பிரதேச சபைக்குள் அடங்குகின்றன. இதனுள் இரணைதீவு. பல்லவராயன்கட்டு, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் அடங்குகின்றன. இதன் மொத்தப் பரப்பளவு 448.75 சதுர மைல்கள். இதன் வடக்கில் நீரேரியும்; கிழக்கில் கரைச்சி பிரதேச சபையும், தெற்கில் முல்லைத்தீவு மாவட்டம், மன்னார் மாவட்டம் என்பனவும், மேற்கில் கடலும் எல்லைகளாக உள்ளன. இச் சபைக்கான உறுப்பினர்களும், சபையின் தலைவரும் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். பூநகரி பிரதேச சபையில் 11 உறுப்பினர்கள் உள்ளனர்.

பூநகரி பிரதேச சபைப் பகுதி 11 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வட்டாரங்களின் இலக்கம், பெயர், அவற்றில் அடங்கியுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பற்றிய விபரங்களைக் கீழேயுள்ள அட்டவணையில் காணலாம்.

| | வட்டாரம் | | கிராம சேவையாளர் பிரிவு |
|---|---|---|---|
| 01. | கௌதாரிமுனை | KN/67 | பரமன்கிராய் |
| | | KN/68 | கௌதாரிமுனை |
| 02. | ஞானிமடம் | KN/62 | செட்டியாகுறிச்சி |
| | | KN/63 | ஞானிமடம் |
| | | KN/66 | மட்டுவில்நாடு மேற்கு |
| 03. | பள்ளிக்குடா | KN/65 | பள்ளிக்குடா |
| 04. | கொல்லகுறிச்சி | KN/61 | கொல்லகுறிச்சி |
| | | KN/64 | மட்டுவில்நாடு கிழக்கு |
| 05. | நல்லூர் | KN/59 | நல்லூர் |
| | | KN/60 | ஆலங்கேணி |
| 06. | ஜெயபுரம் | KN/69 | ஜெயபுரம் வடக்கு |
| | | KN/70 | ஜெயபுரம் தெற்கு |
| 07. | பொன்னாவெளி | KN/75 | கிராஞ்சி |
| | | KN/76 | கிராஞ்சி |
| 08. | இரணைதீவு | KN/74 | நாச்சிக்குடா |
| | | KN/77 | இரணைதீவு |
| 09. | பல்லவராயன்கட்டு | KN/72 | பல்லவராயன்கட்டு |
| 10. | கரியாலைநாகபடுவான் | KN/71 | கரியாலைநாகபடுவான் |
| 11. | முழங்காவில் | KN/73 | முழங்காவில் |


---

**"அதிகமான மொழிகளில் அச்சடிக்கப்பட்ட புத்தகம் - பைபிள்."**
**"இந்தியாவின் மிகப் பெரிய நூலகம் - தேசிய நூலகம், கொல்கத்தா"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரி கோட்டை



பூநகரி பிரதேசத்தின் ஆரம்ப எல்லைக் கரையோரத்தில் இருந்து ஒரு மைல் தொலைவில் உட்புறமாக அமைந்துள்ளது பூநகரி டச்சுக்கோட்டை. இக் கோட்டையில் முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் எதுவும் நடந்திருக்க வாய்ப்புக்கள் இல்லை என்பது இலங்கையில் உள்ள ஒல்லாந்தர் கோட்டைகளைப் பற்றி ஆராய்ந்து நூல் எழுதிய நெல்சன் அவர்களின கருத்தாகும். 1620 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போத்துக்கீசர் 1658 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர். தமது ஆட்சியின் இறுதிக் காலத்தில் இக் கோட்டையை அவர்கள் நிறுவினர். மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பாதை நீரேரிக்குத் தெற்கே முடிவடையும் இடத்தில் இக் கோட்டை அமைக்கப்பட்டது. சட்டவிரோதமாக வன்னிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே நடைபெற்று வந்த கடத்தலைத் தடுப்பதும், குற்றவாளிகள் வன்னிக்குத் தப்பிச் செல்வதைக் கட்டுப்படுத்துவதுமே இக் கோட்டையின் முக்கியமான பணியாக இருந்திருக்கலாம். எனக் கூறப்படுகின்றது. 1658 ஆம் ஆண்டில் இக் கோட்டையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர், இங்கே பெருமளவில் திருத்த வேலைகள் எதையும் செய்யவில்லை.

இக் கோட்டையின் தள அமைப்பு ஏறத்தாழச் சதுர வடிவானது. ஆனையிறவுக் கோட்டையை விடச் சற்றுப் பெரிதான இதன் பக்கங்கள் 100 அடி நீளம் கொண்டவை. இக் கோட்டையின் கிழக்கு மூலையிலும், மேற்கு மூலையிலும் இரண்டு கொத்தளங்கள் இருந்தன. கோட்டையின் வடக்குப் பக்கச் சுவரில் அதன் வாயில் இருந்தது. இவ் வாயிலுக்கு அருகே உட்புறத்தில் காவலர் அறையும், தெற்குச் சுவரையும், மேற்குச் சுவரையும் ஒட்டியபடி வரிசை யாக போர் வீரர் தங்கும் அறைகளும் இருந்தன. கிழக்குப் புறச் சுவரை அண்மித்து பல அறைகளைக் கொண்ட ஒரு கட்டிடமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் இக் கோட்டை ஒரு ஓய்வு விடுதியாகப் பயன்பட்டு வந்தது. பிற்காலத்தில் இது கைவிடப்பட்டது.




### பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட கிராமங்கள்
### "விநாசியோடை, மண்ணித்தலை"

பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விநாசியோடை, மண்ணித்தலை, கல்முனை மற்றும் கௌதாரிமுனை போன்ற கிராமங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லியல் ஆராய்ச்சியாளர்களால் வரலாற்று சிறப்புமிக்க தொன்மையான கிராமங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கிராமங்களின் மூன்று பக்கங்களும் கடலினால் சூழப்பட்டுள்ளன. இயற்கை அழகு வாய்ந்த இப் பகுதிகளில் பனை தென்னை மரங்களும் சிறு பற்றைக்காடுகளும் எழில் மிக்க மண் மலைகளும் காணப்படுகின்றன.



மேற்படி கிராமங்கள் தமிழரின் நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியங்களுடன் தொடர்புடையன. அக்காலப் பகுதியில் இக்கிராம மக்கள் சிறந்த செல்வச் செழிப்புடன் வாழ்ந்திருந்தனர் என வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாராய்ச்சிகளின் மூலம் சோழர் காலத்திற்குரியதான பல அகழ்வுச் சின்னங்கள் இனங் காணப்பட்டன. அத்துடன் வரலாற்றுக் கதைகளினூடாக பலம் மிக்க சோழர் தமது கடற்படை கலங்களை நிறுத்தி வைப்பதற்காக இலகுவில் கண்டுபிடிக்க முடியாத வகையில் பாதுகாப்பான அகழிகளையும் இப் பகுதிகளில் அமைத்தனர் என்றும் கூறப்பட்டுளளது.

இன்றும் சோழர் காலத்திற்குரியது என்று நம்பப்படுகின்ற சிவன் கோவில் மண்ணித்தலைக் கிராமத்தில் பாரிய அளவில் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் பலரும் அறிந்து கொள்ளாததுடன் இச் சோழர்கால சிவன் கோவிலை பராமரிப்பதற்கான சிறப்பான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

---



ஜப்பானில் உள்ள பேருந்து நிறுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்மக் கழிவு முகாமைத்துவம்
## (Solid Waste Management)

திருமதி க.வக்சலா,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச சபை, பூநகரி

திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது உள்ளூராட்சி சபைக்கே உரிய விசேட விடயப் பரப்பாகும். கழிவுகள் சேகரிப்பு, போக்குவரத்து மற்றும் அவற்றை வெளியேற்றல் ஆகிய செயற்பாடுகள் உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. 3R எண்ணக் கருவின் பிரகாரம் (Reduce, Reuse, Recycle) கழிவுக் பொருட்களின் மீள் உருவாக்க முறைகள் தொடர்பாக உள்ளூராட்சி சபைகள் கவனம் செலுத்தியமையால் திண்மக் கழிவு முகமைத்துவம் ஒரு விடயப் பரப்பாக மாறியது.

கழிவுப் பொருள் முகாமைத்துவத்தில் அதன் அடுத்த கட்ட மீள் சுழற்சிக்கு உட்படுத்தும் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீண்டகால தொடர்ச்சியான திட்டமிடலொன்று அவசியமாகும். சபையினால் முன்வைக்கப்படும் வரவு செலவு அறிக்கையினது தன்மைக்கேற்ப அத்தகைய இலக்கினை வெற்றி கொள்ள முடியும். அத்தகைய திட்டத்தில் கழிவு சேகரிப்பு, இறுதியாக வெளியேற்றப்படும் முறை, மனிதவள அபிவிருத்தி, வாகன இயந்திர சாதனங்களின் கொள்வனவு அவற்றின் பராமரிப்பு போன்ற விடயங்கள் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

கழிவுப் பொருட்களின் மீள் சுழற்சி தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டல் வழங்கப்படல் வேண்டும். கழிவுகளை குறைத்து பழைய பொருட்களை மீள் சுழற்சி செய்வதில் பிளாஸ்டிக் போத்தல், பளபளப்பான கடதாசி மற்றும் பைகள் இவற்றினை மீள அலங்காரப் பொருட்களாக வடிவமைக்க முடியும். சமயலறைக் கழிவுகள் சேதனப் பசளையாக உருவாக்கி மீள பயன்படுத்தலாம். முறையான கழிவகற்றல் பின்பற்றப்படாவிடின் காற்று, நீர் மாசடைகின்றது. தொழிற்சாலைக் கழிவுகளால் நோய்த் தாக்கங்கள் ஏற்படுவதுடன் சுற்றுச்சூழல் மாசடைகின்றது. இலங்கையர் ஒருவர் ஒரு நாளைக்கு சராசரியாக 1 கி.கி குப்பையை உருவாக்குகின்றார். அவ்வாறு உருவாக்கும் குப்பையை முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கம் பணம் செலவிட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான நிலையில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு தீர்வொன்றினை காண சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கழிவு மேலாண்மை என்பது ஒவ்வொரு வீட்டுக்கும் தேவை. கழிவுகளை சேகரிக்கும் மக்கள் அச்சமுதாயத்தின் நலனுக்காக அவற்றை மீள்சுழற்சி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். இச்செயற்பாடு மூலம் எளிதாக மீண்டுமொரு மறு பயன்பாட்டு முறைமை உருவாகும்.

கழிவுகளை தரம் பிரித்து
கலர் கலர் கூடைகளில் இட்டு
மீள் சுழற்சி செய்து சேதனப் பசளையாக்கி
மீண்டும் அதில் பயனடைந்து
காப்போம் நம் சூழலை
ஆக்குவோம் நல்ல எதிர் காலத்தினை......

---

"புத்தகங்கள் மிகவும் ஆபத்தானவை; அவற்றின் மேல் 'கவனம் இது உங்கள் வாழ்வை மாற்றிவிடக் கூடும்' என எச்சரிக்கை வாசகம் பொறிப்பது நல்லது" - எலன் எக்ஸ்லே

"உங்களது தலைசிறந்த புத்தகங்களைத் திருடிச் செல்பவர்கள் உங்களது தலைசிறந்த நண்பர்களாகவே இருக்க முடியும்." -வால்டேர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Importance of Library

Mrs.Niruja Dharshanth
(aat-UK; Dip in Media Studies)
Journalist.

**Library is a great blessing.** Library is said to be the storehouse of culture. The various books by the different authors and poets form a library. If a man is to be known by the company he keeps, a society is to be known by the number of good libraries it has. Man's craving for knowledge is eternal. He wants to know more; he wants to enjoy more. But he cannot always move about for various reasons.

**Library preserves various types of old and new books.** There are also periodicals and daily papers to meet the demands of the people.

**In all ages, libraries have been considered the best medium of public instructions.** There are different types of libraries, such as private library is only for private use whereas public library is free to all public.

**An academic library is an essential part of an educational institution.** This type of library collects text books and reference books on different subjects to meet the needs of the students and teachers.

**It plays an important role in schools, colleges and universities.** The books are issued to the students in term of weekly, fortnightly or monthly basis. Generally, a reading-room is attached to this library for reading. In a library we get books on different subjects. There are books on literature, on history, hygiene, science and arts.

So Carlyle has rightly said, 'that a true university of our days is nothing but a collection of books'.

**A library is essential to the cultural progress of a country.** It helps the country to fight illiteracy. It is an aid to research work and teaching. It satisfies a thirst for education. It is a boon to the poor and the middle class people. A civilized man cannot do without the library.

**Circulating libraries should be set up in rural areas to fight illiteracy.** As libraries spread education, every village and town should a public library.

**புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை**



**பிறப்பு : ஜனவரி 08, 1899**
**மண்டூர், மட்டக்களப்பு**
**இறப்பு : நவம்பர் 02, 1978**
**அகவை 79**
**தாயகம் : இலங்கை**
**அறிமுகம் : புலவர், தமிழறிஞர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்களை பரிசளிப்போம்!

## வாசிப்பு பழக்கத்தை

## ஊக்குவிப்போம்!

திருமதி பி.பிரியா,
ஆசிரியை,
ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம், அதுவும் தமிழ் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் மிகக் குறைந்துகொண்டே வருகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், ஆறாம் / ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் தமிழ்மொழியைப் படிக்கத் திணறுவது தெரிய வந்துள்ளது. தமிழில் எத்தனை படைப்புகள், எத்தனை தரமான எழுத்தாளர்கள், எத்தனை அறிவு பொருந்திய விடயங்கள் புதைந்துள்ளன.

இது மட்டுமன்றி, புத்தகங்களை குழந்தைகள் தொடர்ந்து படிப்பதன் மூலம் இன்றியமையாத பல உன்னத நலன்களை பெற்றுக்கொள்ள முடியும். புத்திக் கூர்மை, அறிவு, சமச்சீரான எண்ண ஓட்டம், ஆழ்ந்த உறக்கம், சகிப்புத் தன்மை, எண்ணத்தில் உறுதி போன்ற நலன்களை புத்தக வாசிப்பின் மூலம் பெறுகின்றனர்.

ஜோகன்டிக்கின்ஸ் என்பவர் "broken the hell" என்ற புத்தகத்தை தேடி, பன்னிரண்டு ஆண்டுகளாக 16,000 கி.மீக்கு மேலாக அலைந்து திரிந்திருக்கிறார். அந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் டிக்கின்ஸ் குடும்பம், உறவு, பணம், சந்தோசம் என வாழ்வின் ஒரு அத்தியாயத்தையே தொலைத்திருந்தார். ஆனால் அந்த புத்தகத்தை கண்டு பிடித்த தருணத்தில் உலகையே வென்றவரைப் போல் ஆனந்தப்பட்டார். இந்த மகத்தான பிரதியை அச்சாக்கி, இனிவரும் தலைமுறையினருக்கு கொடுத்து விட முடியும் என்பதை விட வேறென்ன சந்தோசம் இருந்திருக்கும் அவருக்கு வாழ்வில்?

புத்தகங்கள் நம் வாழ்க்கையை புரட்டிப் போட்டு விடும். காரல்மார்க்ஸின் ஒரு புத்தகம் உலக வரலாற்றையே மாற்றி இருக்கிறது. திருவள்ளுவரின் திருக்குறள், மானுடப் பண்புகளை உலகெங்கிலும் விதைத்திருக்கிறது. டால்ஸ்டாயின் ஒருநூல் மகாத்மாவை உலகம் போற்றும் உன்னதத் தலைவராக்கி இருக்கிறது. ஒரு புத்தகமும், அதன் வாசிப்பும் நமக்கு ஆயிரம் ஆயிரம் கண்களையும் செவிகளையும் கொடுத்து, அறிவின் விசாலப் பாதையில், உலகின் ஏதோ ஒரு மூலைக்கு கொண்டு சென்று விடுகிறது.

மொட்டைமாடியின் குட்டிச் சுவரில் உட்கார்ந்து படித்து கொண்டிருக்கும் நம்மை, விக்கிரமாதித்தன் காலத்திற்கும், ஈழத்தின் போர்ச் சத்தங்களுக்கும் நடுவே தன் அம்மாவைத் தேடி அலையும் குழந்தையின் பரிதவிக்கும் மனநிலைக்கும் கொண்டு சென்று விடுகிறது. நம்மால் போக முடியாத இடத்திற்கெல்லாம் புத்தகம், அதன் சாளரத்தின் வழியே நம்மைக் கூட்டிச் செல்கிறது.

நம் கைக்கு எட்டும் தூரத்தில் எவரெஸ்ட் சிகரத்தை கொண்டு வந்து நிறுத்தும். நம் காலுக்கடியில் கங்கையை ஓட விடும். தேயிலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டங்களில், ஏகாதிபத்தியத்தின் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் எவனோ ஒருவனுக்காக நம்மை தேம்பி தேம்பி அழ வைக்கும்.

அடுத்தவர் மீதான அன்பையும், பாசத்தையும் கரிசனத்தையும், சகோதரத்துவத்தையும் விதைக்கும். புத்தக வாசிப்பு சேகுவேராவுக்கும் பிடல்காஸ்ட்ரோவுக்கும் சலாம் போட வைக்கும்.



"அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்த போது, இங்கு எழுதப்பட்ட நூல்களை எடுத்து வரும்படி அந்நாட்டு அறிஞர்கள் கேட்டு கொண்டார்களாம்."

புத்தகங்களை உருவாக்காத தலைமுறை உலகை மேம்படுத்தாது. புத்தகம் புரட்சியை உண்டு பண்ணும். கோடான கோடி மனிதர்களின் இதயங்களில் பட்டாம்பூச்சிகளாக பறக்கவிடும். புத்தகம் ஒரு நல்ல நண்பன். படிக்க நேரம் ஒதுக்குவோம். புத்தகத்திற்கு பணம் ஒதுக்குவோம். அப்போது தான் இந்த உலகம் நம்மை ஒதுக்காமல் இருக்கும். குழந்தைகளுக்கு நல்ல அறிவு சார்ந்த புத்தகங்களை பரிசளித்து அவர்களை படிக்க செய்யலாம். எதிர்கால தலைமுறை வாசிப்பு பழக்கம் இல்லாமல் வளர்வது சமூகத்தை பின்னோக்கி இழுத்துச் சென்றுவிடும். இன்றே உங்கள் குழந்தைகளுக்கு வாசிப்பு பழக்கத்தை உருவாக்கும் முதல் அடியை எடுத்து வையுங்கள். குழந்தை விரும்பும் ஒரு அழகிய புத்தகத்தை அவர்களுக்கு பரிசளியுங்கள்.

---

**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை**



**பிறப்பு : சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை**
**யூன் 27, 1899**
**மட்டுவில், யாழ்ப்பாணம், இலங்கை.**
**இறப்பு : மார்ச் 13, 1986**
**அகவை : 86**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை.**
**வசிப்பிடம் : கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
**தாயகம் : இலங்கை**
**அறிமுகம் : தமிழறிஞர்**
**பட்டம் : பண்டிதமணி**
**சமயம் : இந்து**
**பெற்றோர் : சின்னத்தம்பி, வள்ளியம்மை**

**"ஷேக்ஸ்பியரின் மிகச் சிறிய நாடக எழுத்து வடிவம்**
The Comedy of Errors"

**"புத்தகங்கள் வெளியிடுவதில் முதல் இடத்தில் உள்ள நாடு – சீனா, இந்தியா பத்தாவது நிலை."**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சு.பிரதீபா
முகாமைத்துவ உதவியாளர்,
பூநகரி பிரதேச சபை.

## நெகிழிப் ( Plastic Bag) பைகளைத் தவிர்ப்போம் பூமித் தாயைக் காப்போம்!




சுற்றுச்சூழல் மாசுபடுவதே பூமி வெப்பமடைய முக்கிய காரணமாகும். மனிதனின் அன்றாட செயற்பாடுகளால் வெளியிடப்படும் காபனீரொக்சைட், மெதேன் போன்ற வாயுக்களே சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றன. பூமி வெப்ப மடைவதால் மனித குலத்தின் வாழ்வுரிமை கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. இதைத் தடுத்து சுற்றுச் சூழலை காக்க நாம் வாழும் இடத்தில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

புவியின் பாதுகாப்பிற்கும் சுற்றுச்சூழலுக்கும் முக்கிய அச்சுறுத்தலாக இருப்பது பல்கிப் பெருகிவரும் குப்பைகளேயாகும். குறிப்பாக பிளாஸ்ரிக் பாவனையே முக்கிய காரணியாகும். பாவிப்பதற்கு எளிதாகவும், கையாளுவதற்கு வசதியாகவும் இருப்பதால் இன்றைய தலைமுறையினரது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே பிளாஸ்ரிக் மாறியுள்ளது. இவ்வாறு பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பைகளை நாம் முறையாக அப்புறப்படுத்துகிறோமா? இல்லை. மாறாக பூமிக்கு கேடு விளைவிக்கும் வகையில் தெருவில் வீசுகின்றோம்.

பொலித்தீன் எனப்படும் வேதிப்பொருளால் உருவாக்கப்படும் பிளாஸ்ரிக் பைகள் குப்பைகளுடன் சேர்த்து எரிக்கப்படும் போது பைகளில் உள்ள சாயத்தால் காற்று மண்டலம் மாசுபடுகின்றது. இதன் மூலம் பல்வேறு சுவாச நோய்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. பிளாஸ்ரிக் பைகளில் சூடான உணவுப் பொருட்களை வாங்கிச் செல்லும் போது பிளாஸ்ரிக் சூடாகி இரசாயன மாற்றங்களால் ஹைட்ரோகாபன் மற்றும் பியூரோன் போன்ற நச்சு வாயுக்கள் உணவில் கலந்து விடுகின்றன. அந்த உணவை உண்பவர்களுக்கு நுரையீரல் பாதிக்கப்படுகின்றது.

பிளாஸ்ரிக் பொருட்கள் குப்பைக் கழிவுகளுடன் மண்ணில் புதைக்கப்படுவதால் அவை நெடுங்காலமாக மண்ணில் உக்கிப் போகாமல் தாவரங்களின் வேர்கள் ஊடுருவ முடியாமலும், மழை நீர் மண்ணுக்குள் செல்வதை தடுக்கவும் செய்வதால் நிலத்தடி நீர்மட்டம் குறைவடைவதற்கு காரணமாகவும் அமைகின்றது.

மேலும் பிளாஸ்ரிக் பைகளில் கழிவுப் பொருட்களுடன் போடப்படும் உணவுப் பொருட்களை கால்நடைகள் உட்கொள்ளும் போது அவற்றிற்கு பல்வேறு நோய்கள் ஏற்பட்டு இறக்கின்றன.



எனவே பிளாஸ்ரிக் பைகளின் பயன்பாட்டை தவிர்க்கப் பழகுவோம். பிளாஸ்ரிக் பாவனை தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் அவற்றை பயன்படுத்திய பின் ஏனைய கழிவுகளோடு சேர்த்து வைக்காமல் தனியாக சேமித்து மீள்சுழற்சிக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பிளாஸ்ரிக் பாவனையை கட்டுப்படுத்துவது நுகர்வோராகிய நம் கைகளிலேயே தங்கியுள்ளது. துணிப் பைகள், சணல் பைகள் போன்றவற்றை பயன்படுத்துவோம். நாம் இவ்வாறு பிளாஸ்ரிக் பாவனையை கட்டுப்படுத்தும் போது எமது இப்புவி பாதுகாக்கப்படுகின்றது.

எனவே

**"துணிப்பைகளை உபயோகிப்போம் பிளாஸ்ரிக் பைகளை இல்லாமல் ஆக்கிடுவோம்" என்ற சிந்தனையோடு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக!!!**

**"எல்லோரிடமும் இருந்து கற்றுக் கொள்பவனே சிறந்த மனிதன்"**

---

உலகிலேயே மிகவும் கனமான (thickest) அச்சடிக்கப்பட்ட புத்தகம்
ஸ்விட்சர்லாந்து நாட்டின் பீட்டர் ட்ரோயண்ட் என்பவர் தயாரித்த புத்தகம் நீள அகலத்தில் 5 x 4.5 செ.மீ ஆக இருந்த போதிலும் இதன் தடிப்பு (Thick) சுமார் 2.75 மீற்றராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடற்பருமன்..!

**சராசரி 10 வீதம் எடை குறைப்பிற்கான வழிமுறைகள்.**

Dr. செல்வி க.மதியரசி
ஆயுர்வேத மருத்துவர்,
பூநகரி பிரதேச சபை.

| | |
|---|---|
| பழங்கள் | தானியங்கள் |
| Fruits | Grams |
| காய்கள் | மீன், பருப்பு |
| இலைகள் | Protien, Vegetables |

1. முடியுமானவரை முழுத்தானியங்களான உணவுப்பாவனை, சுத்திகரிக்கப்பட்ட மாவின் பாவனை குறைக்கப்படல் வேண்டும். பேக்கரித் தயாரிப்புக்கள் (சுத்திகரிக்கப்பட்ட மாவும் சீனியும் கொண்டவை) இவ்வுணவுகளில் கூடியளவு குளுக்கோஸ் உண்டு. எதுவித நார்ப்பொருளோ, ஏனைய கனியுப்புக்கள் அல்லது உயிர்ச் சத்துகளோ அறவே இல்லை.
2. புரதப் பாவனை சமமாக அமைதல் வேண்டும். பயறு, கடலை, கௌபி முதலியவற்றின் பாவனை அமைதல் வேண்டும். இவற்றை தோலுடன் (கோது நீக்காமல்) எமது பாவனையில் அமைத்தல் வேண்டும். உதாரணமாக பாசிப்பயறு வறுக்காது அவித்து சாப்பிடலாம். கறியாக்கி சாப்பிடலாம்.
3. காய்கறி, இலை வகை எமது தின உணவில் கூடியளவு அமைதல் வேண்டும். இவற்றில் எல்லாவிதமான உணவுக்கூறுகளும் உண்டு. போதியளவு நார்ப்பொருட்களும் உண்டு. குளுக்கோஸ் மிகவும் குறைவு. காய்கறி, இலைக்கறி வகைகளில் கலோரிப் பெறுமானம் மகவும் குறைவு.
4. பழங்களின் பாவனை அதிகரிக்க வேண்டும். இவற்றில் போதியளவு கனியுப்புகள், உயிர்ச் சத்துக்கள் உள்ளன.

**எடை குறைப்பதற்கான மிகவும் எளிமையான உணவு செய்முறைகள்**

1. காய்கறிகள் (இலைவகை சேர்) நீராவியில் வேக வைத்து உண்ணல். உள்ளூர் வசதி வளங்களுக்கு அமைவாக போஞ்சி, பயிற்றை வகை, கரட், வெண்டிக்காய், லீக்ஸ், வல்லாரை, பசன்புரூட் இலை போன்றவற்றை நீராவியில் வேக வைப்போம். உப்பு சேர்ப்பதில்லை. மிளகு, நற்சீரகம் இடித்து தூளாக சேர்த்து இரவுணவாக உண்போம். அத்துடன் ஒரு வாழைப்பழம் அல்லது ஒரு துண்டு பப்பாளிப்பழம் சேர்த்து உண்போம். (இவற்றுக்கு மேல் பிட்டு, இட்லி, தோசை போன்ற எதுவும் சேர்ப்பதில்லை.
2. காலையில் தேநீர் குடிப்பதில்லை. ஈடாக அப்பியாசம் செய்த பின் 500 – 600 மி.லீ கொதித்தாறிய நீர் பருகுதல்.
3. உண்ணும் போது நீர் அருந்துவது உணவு அகத்துறிஞ்சுவதை பாதிக்கும். எனவே 30 நிமிடம் கழித்த பின் போதியளவு நீர் அருந்தலாம்.
4. பிட்டு, தோசை, இட்லி, ரொட்டி, சப்பாத்தி முதலிய எமது தின ஆகாரமாகும். இவற்றில் கூடியளவு மாவும், தேங்காயும், எண்ணையும், சீனியும் சேர்க்கிறோம். இவற்றுடன் போதியளவு காய்கறி, இலைவகைகளை சிறு சிறு துண்டுகளாக்கி சேர்க்கலாம். இதன் மூலம் சுவையும் மேம்படும். கூடியளவு நார்ப் பொருட்கள் சேர்க்கும் போது குளுக்கோஸ் மட்டம் குறைவடையும். இதனால் எடை சீராக பேணுதல் சாத்தியமாகும்.

**உண்டி**

உடலுக்கு தரும் உண்டி உள்ளத்தையும் பேணவல்லது. உள்ளத்தில் அமைதி உண்டுபண்ணும் நல்லுணவையே அருந்துதல் வேண்டும். மிகைபடவோ, குறைபடவோ உண்டியை ஏற்பது பொருந்தாது. அளவுபட உண்பது ஞானவந்தர் செயலாகும். அவரவர்க்கு பொருந்துகின்ற உணவை அவரவரே கண்டு கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பல உள
கண்டங்கறுத்த கபாலியுமாமே. - திருமந்திரம் -

அண்டம் என்பதற்கு விதை, கரு எனப் பொருள். சுருக்குதல் என்பதற்கு குறைத்தல் என்பது பொருள். பிண்டம், உடம்பு, கருவாயை சுருக்கி காம இச்சையை குறைத்துக் கொண்டால் உடம்பு அழியாதிருக்கும். உடம்பு இளைத்தால் உயிர் அதில் நெடுநாள் வாழ்ந்திருக்கும். உண்பது குறையுமானால் பல நன்மைகள் உண்டாகும்.

---

## இளம் வயதில் சாதனை படைத்த வரலாற்று நாயகர்கள்

- வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களை போதிக்க ஆரம்பித்த போது, கன்பூஷியஸின் வயது 22
- 'ஏழை மக்கள்' என்ற முதல் நாவலை ரஷ்ய நாவலாசிரியரான தாஸ்தாவஸ்கி வெளியிட்ட போது அவருக்கு வயது 25.
- 'வெர்தரின் துயரங்கள்' என்ற பிரசித்தி பெற்ற நாவலை ஜெர்மானிய மேதையான கதே வெளியிட்ட போது அவருக்கு வயது 25.
- இனிய கவிதைகளை வடித்த கீட்ஸ், தம்முடைய 25 வயதிற்குள் 16,000 வரிகளைக் கவிதைகளாகப் பாடினார்.
- வானொலியைப் படைத்த மார்கோனி வான் புகழ் பெற்றது, 27 வயதில்.
- மாவீரன் நெப்போலியன் படைத் தளபதியானது 24வது வயதில்.
- காரல் மார்க்ஸ் 'மூலதனம்' என்ற புகழ் பெற்ற நூலை எழுதிய போது அவரது வயது 23.
- புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்து உலகுக்கு அறிவித்த போது நியூட்டனுக்கு வயது 24.
- அலெக்சாண்டர் கிரஹாம் பெல் டெலிபோனைக் கண்டுபிடித்த போது அவருக்கு வயது 29.
- வில்லியம் பிட் இங்கிலாந்தின் பிரதமராக பதவி ஏற்ற போது அவருக்கு வயது 24.
- முதல் விண்வெளி வீரரான யூரி காகரின் தன் சாதனையைச் செய்த போது அவருக்கு வயது 27.

**பேராசிரியர் சு.வித்தியானந்தன்**



**பிறப்பு** : மே 08, 1924, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
**இறப்பு** : ஜனவரி 21, 1989 அகவை 64, கொழும்பு, இலங்கை.
**கல்வி** : முனைவர் (இலண்டன் பல்கலைக்கழகம்)
**பணி** : தமிழ்ப் பேராசிரியர்
**பெற்றோர்** : சின்னத்தம்பி சுப்பிரமணியம், முத்தம்மா
**மனைவி** : கமலாதேவி நாகலிங்கம்
**பிள்ளைகள்** : அருள்நம்பி, மகிழ்நங்கை, அன்புச்செல்வி, இன்பச் செல்வன், சிவமைந்தன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கின்னஸ் ... சாதனைப் புத்தகம் உருவான கதை!**

திருமதி ச.பாலரதி,
நூலக உதவியாளர்
பூநகரி பொதுநூலகம்.

ஆகஸ்ட் 27. இது உண்மையில் சாதனையாளர்களின் தினம். ஒரே மூச்சில் 151 எரியும் மெழுகுவர்த்திகளை ஊதி அணைப்பவராக இருக்கட்டும்; உலகமே வியந்து பார்க்கும் ஓட்டப்பந்தய வீரர் ஹுசேன் போல்ட்டாக இருக்கட்டும் 17,000 பாடல்களுக்கு மேல் பாடி அசத்திய பி.சுசீலா அம்மாவாக இருக்கட்டும்... அத்தனை பேரும் கொண்டாட வேண்டிய நாள். ஏனென்றால், இந்த தினம் தான் அவர்களுக்கான அங்கீகாரத்தை உலகுக்கு எடுத்துக் காட்டியது.

1955 ஆம் ஆண்டு, இதே நாளில் தான் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், பிரமிக்கத்தக்க சாதனைகளை நிகழ்த்துபவர்களின் திறமையை ஆவணப்படுத்தப் போகிற ஒரு புத்தகம் முதன் முதலில் வெளியானது. அந்தப் புத்தகம், 'The Guinness Book of World Records' இந்தப் புத்தகம் வெளியானதற்குப் பின்னணியில் ஒரு போட்டி இருந்தது என்பது தான் ஆச்சரியத் தகவல். அவர் பெயர் Sir Hugh Beaver. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஆங்கிலேயர்கள் நம்மை ஆட்சி செய்த காலத்தில், அவர்களின் காவல் பணியில் சேர்ந்து (1910) இந்தியாவில் பணியாற்றியவர். 1921-ம் ஆண்டு இந்தியாவில் இருந்து இங்கிலாந்து திரும்பியவர், ஒரு பொறியியல் சார்ந்த நிறுவனத்தில் வேலை செய்தார். பிறகு கனடாவில் கனடிய அரசு அவருக்கு வேலை பெற்றுக் கொடுத்தது. அந்த நாட்டு துறைமுகங்களை மேற்பார்வை செய்யும் வேலை அது. கனடாவில் இருந்த போது, ஏழு மாத காலம் நியூபிரன்ஸ்விக் நகரத்தில் இருக்கும் செயின்ட்ஜான் துறைமுகத்தின் மறுகட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். பிறகு, வேறு ஒரு நிறுவனத்தில் வேலை, அரசுப்பணி என போய்க் கொண்டிருந்தது இவரது வாழ்க்கை. 1946-ம்ஆண்டு, ஆர்தர் கின்னஸ்,சன் அண்ட் கோ' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரானார். அது, ஒரு பியர் தயாரிக்கும் தொழிற்சாலை. ஒரு நாள் அயர்லாந்தில் நடக்கும் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார். அது, நம் ஊர் விருந்து மாதிரி அல்ல.




ஆங்கிலத்தில் 'Shooting Party' என்று சொல்வார்கள். ஒரு ஆற்றங்கரையிலோ கடற்கரையிலோ மக்கள், கூட்டமாகக் கூடுவார்கள். துப்பாக்கி சுடும் போட்டி நடக்கும். எல்லோரும் தங்களின் திறமையை வெளிப்படுத்துவார்கள்.

எது சிக்குகிறதோ அதைச் சுட்டுத் தள்ளுவார்கள். அன்றைக்கு ஸ்லேனி ஆற்றங்கரையில் Shooting Party. அங்கே ஒரு விவாதம். ஐரோப்பாவில் இருக்கும் பறவைகளில் வேகமானது எது......? 'கோல்டன் குளோவரா?' (ஒரு வகை ஆட்காட்டிக் குருவி) 'கிரௌஸா?' (சதுப்பு நிலத்தில் வாழும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைக் கோழி). விவாதத்தில் முடிவே கிடைக்கவில்லை. ஒன்று மட்டும் புரிந்தது, இரு பறவைகளில் எது வேகமானது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. எந்தக் குறிப்புகளும் இல்லை. அது தொடர்பான ஒரு புத்தகம் கூட இல்லை.




அதன் பிறகு ஹ்யூக் குக்கு இது போல எத்தனையோ சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. அதிக நேரம் தூங்கியவர் யார். நீண்ட நேரம் பாடியவர் யார்? இப்படி பல கேள்விகள். தன்னைப் போல பதில் கிடைக்காமல் பலரும் இது போன்ற கேள்விகளோடு தவிப்பார்கள் என்பதும் அவருக்குப் புரிந்தது. இது தொடர்பாக ஒரு புத்தகம் வெளியிட்டால் நன்கு விற்பனையாகுமே, புகழ் பெறுமே என்கிற எண்ணமும் தோன்றியது. அதற்கு உதவினார் ஒருவர், ஹியூக்கின் கின்னஸ் நிறுவனத்தில் வேலை பார்ப்பவர் 'கிறிஸ்டோபர் சாட்டாவே. இவர் தன்னுடைய நண்பர்களான நோரிஸ் மற்றும் ரோஸ் மெக்வ்ரிட்டர் இருவரையும் அறிமுகப்படுத்தினார். அவர்கள், லண்டனில் நிகழ்வுகளைக் கண்டு பிடித்து தொகுக்கும் ஒரு ஏஜென்ஸி நிறுவனத்தை நடத்தி வந்தார்கள். இவர்களின் கூட்டு முயற்சியால் *1955*-ம் ஆண்டு, ஆகஸ்ட் *27*-ம்தேதி, *198* பக்கங்கள் கொண்ட முதல் 'The Guinness Book of World Records' புத்தகம் வெளியானது.



**ஆறுமுகநாவலர்**

**பிறப்பு : ஆறுமுகன்**
**டிசெம்பர் 18, 1822**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தேசியம் : இலங்கைத் தமிழர்**
**பணி : பதிப்பாளர், சைவப்பிரசங்கர்,**
**கல்விச்சாலை நிறுவுனர், எழுத்தாளர்.**
**அறிமுகம் : சைவசமய மறுமலர்ச்சிக்கு**
**வித்திட்டவர்**
**சமயம் : சைவம்**

---

**உலகில் மிகவும் நீளமான / பெரிய நெடுங்கதை (நாவல்)**

Les Hommes De Bonne Volonte ==Man of Goodwill

**1885 இல் பிரான்ஸ் நாட்டின் லூயிஸ் ஹென்றி ஜீன் ஃபரிகோவில் என்பவரால் எழுதப்பட்ட இந்த நாவல் 27 புத்தகங்களைக் கொண்டது.**
**இதன் ஆங்கிலப் பதிப்பு 1933 இல் 4959 பக்கங்களை கொண்டதாக 14 புத்தகங்களில் வெளியிடப்பட்டது.**

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துக்களின் தோற்றம்
## எழுத்துக்கள் அறிமுகமான வரலாறு

செல்வி ப.ஹீர்த்தனா
முகாமைத்துவ உதவியாளர்,
பூநகரி பிரதேச சபை.

மனித பரிணாம வளர்ச்சியுடன் இணைந்ததாகவே தொடர்பாடல் முறைகளும் வளர்ச்சியடைந்து வருகின்றன. ஆரம்ப கால மானிடர்கள் சைகைகள், ஒலிகளை எழுப்புதல் போன்ற தொடர்பாடல் முறைகளைக் கடைப்பிடித்து தம்மிடையே கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். காலப்போக்கில் சித்திரங்களினூடாகவும் பின்னர் எழுத்துக்களின் அறிமுகத்துடனும் தொடர்பாடல் முறைகள் விருத்தியடைந்ததோடு மானிட சமூகம் வேகமாக முன்னேற்றமடையத் தொடங்கியது.

**எழுத்துக்கள் பிறந்த இடம்:**

முதன்முதலாக பிரான்ஸில் அல்ட்டாமீரா குகைப் பகுதியில் கற்குகைச் சித்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்குள்ள சித்திரங்கள் கி.மு 8000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையென பிரான்ஸிய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இக் கண்டுபிடிப்புக்களுக்கு பின்னர் தொல்பொருள் ஆய்வாளர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஆய்வுகளை ஆரம்பித்தனர். அதனையடுத்து உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கற்குகை சித்திரங்கள் கண்டுபிடிக்கப்படலாயின.

**உருவ எழுத்து:**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக அக்கறையும் சிறந்த நூலறிவும் (Knowledge and Concern for the Society)**

ஒரு சிறந்த மேலாளரின் பெருமை ஒரு செயலினை அல்லது திட்டத்தினை நிறைவேற்றும் பொழுது அது குறித்த திட மனமும், சமூகநல நோக்கும், செய்ய வேண்டுவது மற்றும் தவிர்க்க வேண்டியது பற்றிய தெளிவான சிந்தனைகளுடன் மேலாண்மைக் கூறுகளான தேவையான பொருள் வளம், உரிய மனித வளம், சரியான காலம், செய்யும் முறை, செய்யவேண்டிய செயல், (631 ஆம் குறளில் கூறப்பட்ட குணநலன்கள்) ஆகிய அனைத்தினையும் கருத்தினில் கொண்டு செயல்படுவதில் அடங்கும்.

**வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ**
**டைந்துடன் மாண்ட தமைச்சு — 632**

வன்கண் – மன உறுதி திட மனது, குடிகாத்தல் – சமூக நலன் பேணுதல், கற்றறிதல் – செய்யத்தக்கன, செய்யத்தகாதன குறித்த கல்வியறிவு, ஆள்வினையோடைந்து – ஆள்வினைக்குத் தேவையானவை எனக் கருதப்படும் ஐந்து குணநலன்கள் (தேவையான பொருள் வளம், உரிய மனித வளம், சரியான காலம், செய்யும் முறை செய்ய வேண்டிய செயல்)

**செயலாக்கும் முறைகள் (Procedure for or method of execution)**

செய்தற்குரிய செயலினை அவற்றின் தன்மை கருதிப் பல கூறுகளாகப் பிரித்தலும் (Job analysis), அவ்வாறு பிரிக்கப்பட்ட வினைகளை அவற்றின் ஒத்த தன்மை அடிப்படையில் ஒரு துறையின் கீழ்க் கொண்டு வந்து (Departmentation) வளப்படுத்துதலும் பின்னர் அப்பணியினைச் சிறப்பாய் முடித்தல் கருதி அத்துறைகள் நிறைவேற்றிய வினைகளை ஒருங்கிணைத்து (Co-ordination) முழுமையான பணியாகச் செய்து முடித்தலே திறமையான மேலாண்மையாகும்.

**பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்**
**பொருத்தலும் வல்ல தமைச்சு — 633**

பிரித்தல் – நிறைவேற்றத் தக்க வகையில் ஒரு பணியினைப் பல் பல கூறுகளாகப் பிரித்தல், பேணிக்கொளல் – அவ்வினைகளை வளப்படுத்தித் தொகுத்து (Grouping), துறைவாறாக ஒதுக்குதல், பிரித்தார் பொருத்தல் – பல துறைகளும் செய்தனவற்றை (செயல்களை) ஒருங்கிணைத்தல், வல்லது – வலிமை அல்லது திறமை பெற்றது

**முடிவெடுத்தலும் ஒத்த கருத்தினை உருவாக்குதலும்**
**(Decision making and Group consensus)**

ஒரு செயலினை நிறைவேற்றும் பொழுது பல்வேறு மாற்று முறைகளை ஆய்ந்து, அவற்றுள் சிறந்ததைத் தேர்ந்தெடுத்து, அதனை முடித்தற்கு உறுப்பினர்களிடையே ஒருமித்த ஆற்றல் தோன்றும் வண்ணம் கற்பித்து, விளக்கி, செயலினில் இறக்குவது ஒரு சிறந்த மேலாளரின் பண்பாகும்.

**தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்ல தமைச்சு — 634**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிதல் – ஒரு வினையினை மேற்கொள்ளுதற்கான பல்வேறு மாற்று வழிகளை ஆய்வு செயதல், தேர்ந்து – அவற்றுள் சிறந்த அல்லது உகந்த ஒன்றினை தேர்ந்தெடுத்து செயலும் – முடிவு செய்தலும், ஒருதலையாச் சொல்லலும் – ஒத்த கருத்து ஏற்படுத்தும் வண்ணம் விளக்கிச் சொல்லி ஏற்கச் செய்தலும், வல்லது – திறமை பெற்றது

**தகுதியானவரைத் துணையாகக் கொள்ளல் (Selection of aides)**

ஒரு மேலாண்மைக்கு, ஒரு திட்டத்தினை நிறைவேற்றத் துணை நிற்பவராய் தேர்ந்தெடுக்கப்படுபவர் வினை நுணுக்கங்களையும், செய்தற்குரிய விதிமுறைகளையும் (நியாய தருமங்களை) நன்கு அறிந்தவராயும், அவற்றின் பொருளினை (சக பணியாளர்களின் ஒத்துழைப்பினைப் பெறல் வேண்டி) சரியாக எடுத்தியம்ப வல்லவனாயும், எச்சூழலையும் (தோன்றக்கூடிய எதிர்ப்புகளை சமாளிக்கும்) எதிர்கொள்ளும் திறமை வாய்ந்தவராயும் இருத்தல் வேண்டும்.

**அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்**
**திறனறிந்தான் தேர்ச்சித் துணை** – *635*

அறனறிந்து – செயலினை நிறைவேற்றுதற்கான நேர்மையான செயல் முறைகளை அறிந்த, ஆன்றமைந்த – பெருமை பொருந்தி, சொல்லான் – திறமையாக, ஏற்றுக்கொள்ளும் வகையில் சொல்லும் திறமை பெற்றவன், எஞ்ஞான்றும் – (ஏற்றல், இகழ்தல், எதிர்த்தல் ஆகிய) எக்கால கட்டத்திலும், திறனறிந்தான் – தத்துவங்களை அறிந்தவன் (*knowledged about principles*), தேர்ச்சி – பணிக்குத் தேர்ந்தெடுத்தல், துணை – துணையாக நிற்பவர்.

ஒரு பணி அல்லது செயலை நிறைவேற்றுதற்கு அன்பு, அறிவு தெளிந்த சிந்தனை, சுய விருப்பமின்மை ஆகிய நான்கு குணாதிசயங்களையும் பெற்றிருக்கக் கூடியவரைத் தேர்வு செய்தல் சிறப்புடையதாகும்.

**அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு**
**நன்குடையான் கட்டே தெளிவு** – *513*

தேற்றம் – தெளிந்த சிந்தனை, அவாவின்மை – ஆசைகொள்ளா திருத்தல் சுயவிருப்பமின்மை, தெளிவு – தேர்ச்சி செய்தல், நான்குடையான் கட்டே – நான்கு குண நலன்களையும் பெற்றிருப்பவரையே

**பாகுபாடின்றி செயலாற்றுதல் (Unbiased behaviour)**

ஒரு செயலினைப் போதிய தெளிவுடன் வினையாற்றும் எந்த நபர் மீதும் பேதம் காட்டாது சரியான வழிகாட்டலுடன் சரியான நபரை தேர்ந்து ஒப்படைத்தலே உரிய முறையாகும்.

**ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார் மாட்டும்**
**தேர்ந்து செய்வஃதே முறை.** – *541*

ஓர்ந்து–ஆய்ந்து , கண்ணோடாது–பேதம் காட்டாது, இறைபுரிந்து–சரியான வழி காட்டலுடன், யார்மாட்டும்–எவர்பாலும், தேர்ந்து – உரிய நபரைத் தேர்ந்து, தெரிவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தலைவனுக்கு அவன் அப்பொறுப்பிலிருக்கும் காலம் முழுமையும் ஏற்றத் தாழ்விலா சீரான நிலைப்பாட்டினை அளிக்க வல்லதான, மனத்தளவிலும் கூட யார் எப்பக்கமும் சாயாதிருக்கும் பண்பு சிறந்த அணிகலனாகக் கருதப்படும்.

*கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்*
*கோடாமை சான்றோர்க் கணி - 115*

கேடு – தாழ்ச்சியுறல், பெருக்கம் – மேன்மையடைதல், நெஞ்சத்துக் கோடாமை – மனத்தளவிலும் வளையாமை, சான்றோர் – சிறந்த நிலையில் இருப்போர் தலைமை, பொறுப்பிலிருப்போர், அணி – அணிகலனாகும்

**நடுநிலை தவறாமை (Balanced)**

ஒரு வினையின் சாதக பாதகங்களாகிய இரு பக்கத்தினையும் சீர்தூக்கிப் பார்த்து ஒரு துலாக்கோல் போன்று எப்பக்கமும் சாயாது நடுநிலையாயிருத்தல் ஒரு தலைவனுக்கு உரிய பண்பாகும்.

*சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி. - 118*

சமன் செய்து – சமப்படுத்தி, சமநிலை காட்டி, சீர்தூக்கும் – சீரான அளவினை நிலைப்படுத்தும், கோல் போல் – துலாக்கோல் தராசு போல்,

**ஒழுக்கந் தவறாமை (Discipline)**

ஒழுக்கந் தவறுதலின் கேடுகளை (அது எந்த அளவுக்கு கீழான நிலைக்குத் தள்ளிவிடும் என்பதனை) நன்கறிந்த காரணத்தால் ஒழுக்கத்தினை கடைபிடித்தலில் (ஒழுக்கத்தினின்று விலகிச் செல்லாத) திடமான மனத்தினைக் கொண்டவராயிருப்பர்.

*ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்*
*ஏதம் படுபாக் கறிந்து - 136*

**உயரிய குறிக்கோள்களை கொண்டிருத்தல் (Achievement Orientation)**

ஒரு (நிறுவனத்தின்) உயரிய குறிக்கோளினை அடைதற்கெனப் பாடுபடும் உறுப்பினர்கள் அந்நிறுவனத் தலைவனின் செவ்விய செயல்பாடுகளைப் பின்பற்றிச் செயல்படுவர்.

*வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல் நோக்கி வாழும் குடி - 542*

வான் – உயரிய குறிக்கோள்கள்,நோக்கி – அடைந்திடும் நோக்கத்துடன், வாழும் – செயல்பட்டுவரும், உலகெல்லாம் – மக்கள் எல்லோரும், மன்னவன் – தவைனின், கோல் நோக்கி – செம்மையான செயல்பாடுகளைச் சார்ந்து, வாழும் குடி – செயல்படக் கூடிய மக்களாவர்

**தலைவருள் ஒளிவிளக்கு முன்மாதிரி (Role Model)**

கொடைத்தன்மை (கருணை நோக்கு), மக்களைக் கனிவோடு நோக்கிடும் பண்பு, பணியாளர் நலன் பாராட்டும் பாங்கு, செம்மையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பாடு ஆகிய குணநலனன்கள் தலைமைப் பண்பிற்கு ஒளிவிளக்காகக் கருதப்படும் பண்புகளாகும்.

**கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி — *390***

கொடை அளி – மிகுதியான கருணையும், செங்கோல் – செம்மையான ஆளுமை, குடி ஓம்பல் – மக்கள் பணியாளர்கள் நலன் காத்தல்,

**வினையினை ஏற்பதற்கு தகுதிப் படுத்திக் கொள்ளல். *(Equipping)***

ஒருவர் தலைமைப் பண்பினை ஏற்றற்கு அல்லது பணியினை மேற்கொள்ளுதற்கு முன்னதாகப் பெற்றிருக்க வேண்டிய குண நலன்கள் அல்லது தகுதியாவது செறிந்த அறிவு, சிறந்த கல்வி, உகந்த தோற்றப் பொலிவு ஆகியனவற்றை நிரம்பப் பெற்றிருத்தலாகும்.

**அறிவுரு வாராய்ந்த கல்வி இம்மூன்றன்**
**செறிவுடையான் செல்க வினைக்கு — *684***

அறிவு – கல்வி அறிவு, உரு – தோற்றப்பொலிவு *(personality)*, ஆராய்ந்து – தேடல் ஆர்வம், செறிவுடையான் – நிரம்பப்பெற்றவன்,

**உறுதியான உடனடிச் செயற்பாடு *(Firm and Immediate action)***

முடிவு செய்து செய்யவிருக்கும் ஒரு பணியினை மேற் கொள்ளும் போது திடமனதுடனும் சோம்பல் கொள்ளாது காலதாமதமின்றி உடனடியாகச் செய்திடல் வேண்டும்

**கலங்காது கண்டவினைக்கட் டுளங்காது**
**தூக்கம் கடிந்து செயல் — *668***

கலங்காது – கலக்கமில்லாது, கண்டவினை – தீர்மானிக்கப்பட்ட செயல், துளங்காது – சோம்பலின்றி, தூக்கம் கடிந்து – கால தாமதத்தைத் தவிர்த்து விரைந்து "ஆகவே செயலாற்றும் திறன் சமூக அக்கறை, சிறந்த நூலறிவு, செயல்முறை பற்றிய ஞானம், முடிவெடுக்கும் திறன், ஒத்த கருத்தினை உருவாக்கும் பண்பு, தகுதியுடையோரை துணை கொள்ளும் பண்பு, பேதம் காட்டாது செயலாற்றல், நடுநிலை தவறாமை, ஒழுக்கந்தவறாமை, உயரிய குறிக்கோலினை கொண்டிருத்தலும் அதை அடைய பயணித்தலும், தொண்டர்களுக்கு முன்மாதிரியாய் இருத்தல் மற்றும் உறுதியான உடனடி செயல்பாடு ஆகிய நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது வள்ளுவர் வலியுறுத்தும் தலைமைப் பண்புகளாகும். எனவே ஒரு தனியனாக, குடும்பமாக, சமூகமாக, கிராமமாக, பிரதேசமாக, மாவட்டமாக, மாகாணமாக, தேசமாக என பல்வேறு நிறுவன நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்ட நாம் ஒவ்வாருவரும் தலைமைப்பண்புகளை நன்கு கற்றாய்ந்து அதன்வழிநின்று சூழலையும் சமூகத்தையும் கட்டமைத்து நல்லாட்சி பண்புகளுடன் வாழுகின்ற போது மனிதருள் மாணிக்கமாக திகழ முடிவதுடன் சிறந்த நிறுவனக் கட்டமைப்புக்களை உருவாக்கி ஆசியாவின் ஆச்சரியம் என்ற சிந்தனையை பூகோளத்தின் ஆச்சரியமாகவே மாற்றிக்காட்ட முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை."

நன்றி : இணையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலுவுற்றவளின் வாழ்வில் வசந்தம்

முகிலன்
வலைப்பாடு

சிறுகதை...

பொழுது கீழ் வானை நோக்கி மெல்ல மெல்ல சரிந்து கொண்டிருந்தது. கந்தசாமி தனது வீட்டுக் காணியில் பயிரிடையில் களை எடுத்தவனாய் களைத்து நின்று கொண்டிருந்தான்.



அவன் காதோரம் அவனது அன்பு மனைவி கண்ணம்மாவின் அழுகைக் குரல் அவலமாய் வந்தடைந்தது. சிறிது நேரம் பதற்றமடைந்த அவன் ஓடோடிச் சென்று, பிரசவ வேதனையில் துடிதுடித்துக் கதறும் கண்ணம்மாவினை அள்ளி அணைத்தபடி வீதியோரம் நின்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியை நோக்கி கால்கள் கிடுகிடுக்க ஓடினான். முச்சக்கர வண்டியின் இருக்கையில் கண்ணம்மாவை அமர்த்தி தானும் அமர்ந்து கண்ணம்மாவின் தலையை தன் மடியில் தாங்கியவாறு பிரதேச வைத்திய சாலையை நோக்கி விரைந்தான். அவன் எண்ணங்கள் 'தன் திருமண வாழ்வின் இரண்ட வருடங்களின் பின்னர் முதல் பிள்ளையை பெற்றெடுக்கும் பாக்கியம் கொண்ட தந்தை' என்ற உளப் பூரிப்பில் வைத்தியசாலையில் காத்திருந்தவன் பிரசவத்திற்காக வீட்டில் வாங்கி வைத்த பொருட்களை எடுத்துவர விரைந்தவன் மீண்டும் தனது துவிச்சக்கர வண்டியில் அமர்ந்து எத்தனங்களை மிகவும் வேகமாக மிதித்தவனாய் வைத்தியசாலை விரைந்தான்.

கந்தசாமி வரும் போது வைத்திய சாலையில் காத்திருந்த நோயாளர்களும் பார்வையாளர்களும் தமக்குள் ஏதேதோ குசுகுசுவென கதைப்பதும் கந்தசாமியை குறிப்பாக பார்த்து நிற்பதும் சங்கடமாக இருந்தாலும் அவன் ஆனந்தத்தில் அங்கு மிங்குமாக சென்றவனாய் இருந்தான். அப்போது...

அவனின் நண்பர்கள் சிலர் அவனை நோக்கி வந்து கந்தசாமிக்கு சொல்லாது சொல்லிக் கொண்டார்கள் "கந்தசாமி உனக்கு அழகான பெண் குழந்தை பிறந்திருக்கு" என்றதும் தன் நண்பன் ஒருவனைக் கட்டி அணைத்தவனாய் கந்தசாமி ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

தொடர்ந்த நண்பன் ஆனால்...... ஒரு கால் வலது பக்கம் கொஞ்சம் மெல்லியதாக உள்ளது. காலப்போக்கில் தானாக சரிவரும் என்றான். உடனே கந்தசாமி வாய்விட்டு அழுதவனாய் நண்பனை தள்ளி விட்டு கண்ணம்மா தங்கியிருந்த பிரசவ விடுதியை நோக்கி ஓடினான்.

கண்ணம்மா பெண் குழந்தையுடன் படுத்திருப்பதையும் தனது நண்பன் கூறியவாறு குழந்தையின் வலது கால் வளம் குன்றியிருப்பதையும் கண்டு கண்ணீர் விட்டு அழுதான்.

கண்ணம்மாவும் ஓவெனக் கதறி அழுதாள். எதுவும் பேச முடியாதவனாய் தனது தோளில் போட்டிருந்த துண்டினால் வாயை இறுக பற்றியபடி வெளியில் வந்தவன் காதில் வேல் பாச்சியது போல் சிலரது பேச்சு இருந்தது. "இஞ்சே பார்வதியக்கா அப்பன் அம்மை செய்த தவறு பிள்ளைக்கு தானே சேரும்" "என்ன கந்தசாமிக்கு முதல் பிள்ளையே ஊனமாம்" எனக் கூறி முகத்தை சுழிப்பதையும் பார்த்து வெம்பியவனாய் நடந்தான். கந்தசாமியின் காதுகளுக்கு கேட்ட இவ் வார்த்தைகள் வெந்த புண்ணில் வேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ச்சியது போல் இருந்தது. இவ் வார்த்தைகளை நினைத்து நினைத்து அழுது கொண்டிருந்தான்.

நாட்கள் உருண்டோட கந்தசாமி பிள்ளையின் மீது பாசத்திற்கு பதிலாக சினப்பதை உணர்ந்த கண்ணம்மா தானாகவே தனது அன்பு மகளுக்கு கடவுளின் துணை கொண்டு வெற்றிமகள் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தாள். இந்நாளில் கந்தசாமியின் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடியது. அதனால் வாழ்வில் நம்பிக்கை இழந்தவனாய் காணப்பட்ட கந்தசாமி எப்பொழுதும் கண்ணம்மா மீது "நச்" என்று எரிந்து விழுவதும், தனது மகள் மீது பாசம் காட்டாது சினந்து கொள்வதும் வழக்கமாயிற்று. கண்ணம்மா அவனுக்கு எதிர்மாறாக, பிள்ளை மீது பாசத்தை ஊட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தாள். வெற்றி மகளின் தேவைகளை இனங்கண்டு "வலுவுற்றோருக்கான வாழ்வோதயம்" வழிகாட்டி நின்றது. முச்சக்கர வண்டியின் உதவியுடன் தனது வீட்டிற்கு அண்மையில் உள்ள முன்பள்ளியில் கல்வியை தொடங்கிய வெற்றிமகள் அப்பாடசாலை யில் சிறந்த பெறுபேற்றுச் சான்றுகளுடன் அருகில் இருந்த பாடசாலையில் தனதுஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து வந்தாள். பள்ளிப் படிப்பில் மிகவும் அறிவு நிரம்பியவளாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கிய வெற்றித்திருமகள் அப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் விரும்பத் தக்க ஒருத்தியாக வாழ்ந்து வந்தாள்.

தனது தாய் பாடசாலை முடிவடைந் ததும் முச்சக்கர வண்டியில் அமர்த்தி தன்னை உருட்டி வருவது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. எனினும் தன் கையின் உதவி கொண்டு வண்டியின் சக்கரத்தினை உருட்டியும் உதவி செய்து வந்தாள். கல்வி தான் எனது கண், எதிர்காலம் என்பதை உணர்ந்து மாலை நேரத்தில் தன்னுடைய வீட்டின் அருகில் உள்ள பொதுநூலகத்திற்கு சென்று தனது கல்வித் தேடல் தேவைகளை பூர்த்தி செய்து வந்தாள். வீதியால் செல்பவர்கள் உதவியுடன் முச்சக்கர வண்டியில் நூலகத் திற்கு சென்று வருவதை வழக்கமாக கொண்டிருந்தாள். நூலக உத்தியோகத்தர் களும் அவளது தேவையை உணர்ந்து அவளுக்கு உள்ளன்போடு உதவி வந்தனர். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் மாலையில் நூலகத்திலிருந்து வீடு திரும்பும் போது வெற்றிமகள் வருவதை உணராதது போல் கந்தசாமி அவள் மீது வெறுப்பு மிக்க வார்த்தைகளை வீசத் தொடங்கினார். "எண்டைக்கு எனக்கு இது வந்து புறந்துதோ அண்டைக்கே என்ர வாழ்க்கை சரி" "இஞ்சோ கண்ணம்மா இந்த முடம் படிச்சு ஒண்டும் கிழிக்க போறேல்ல விளங்கிச்சோ" என்றும் கோபம் பொங்க கத்தினான். கண்ணம்மா கந்தசாமியை நோக்கி இரு கைகளையும் கூப்பியவாறு "இஞ்சாருங்கோ புள்ளையை அப்படி கதைக்க கூடாது." என்று கெஞ்சினாள்.

கண்ணம்மா என்றும் பிள்ளையின் மனம் பாதிப்படையாதவாறு நடந்து கொள்வாள். முச்சக்கர வண்டியில் அமர்ந்து கொண்டே நூலகத்திலிருந்து எடுத்து வந்த புத்தகங்களை படித்து தனது அறிவாற்றலை மேலும் மேம்படுத்திக் கொண்டிருந்தாள் வெற்றிமகள். தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றுவதற் காக மேலும் சில விடயங்களை நூலக உத்தியோகத்தர்களினதும் ஆசிரியர்களினதும் உதவியுடன் கற்றுவந்த அவள் புலமைப்பரிசில் பரீட்சையை வெற்றி கரமாக சந்தித்து பரீட்சை முடிவுகளுக்காக காத்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் வழக்கம் போல் கந்தசாமி துவிச்சக்கர வண்டியின் உதவியுடன் வைத்தியசாலை முன்பாக உள்ள கடைக்கு சென்றான். அங்கு துவிச்சக்கர வண்டியை கடையோரத்தில் நின்ற வேப்பமரத்தின் கீழ் நிறுத்தி விட்டு கடையினுள்ளே நடக்கத் தொடங்கினான். அப்போது கந்தசாமியின் ஊரவரும் நெருங்கிய நண்பருமான ஒருவர் "என்ன கந்தசாமி உன்னுடைய மகள் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலாமிடமாம். வானொலியில் கேட்டேன்" என்றதும் கந்தசாமி பூரிப்படைந்தான். அங்கு நின்றவர்கள் அனைவரும் அவனை நோக்கி அசைந்து வருவதைக் கண்ட அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் மல்க ஓவென்று அழுதான்.

அப்போது அங்கிருந்த ஒருவர் கந்தசாமி உன் மகள் உன்ர பெயரைக் காப்பாற்றிட்டு. எல்லாம் உன்னுடைய வளர்ப்பு தான் என்றதும் அழுதான். அனைவரும் அவனைக் கைலாகு கொடுத்து வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டனர். குந்தசாமியோ விம்மி விம்மி அழுதவாறு துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு பாடசாலை வீதியூடாக வீட்டை நோக்கி விரைந்தான். அத்தருணத்தில் பாடசாலை அதிபர் அவ் வழியே வருவதைக் கண்டதும் கந்தசாமி துவிச்சக்கர வண்டியை விட்டு இறங்கினான். அதிபரும் வண்டியை நிறுத்தி விட்டு " வணக்கம் கந்தசாமி அண்ணை வீட்டை தான் வந்தனான். வழியில் சந்தித்துவிட்டோம் எங்கட பாடசாலைக்கு என்றுமே அழியாத பெருமை தேடி தந்திருக்கிறீங்கள் என்றதும் கந்தசாமியின் கண்களிலிருந்து விழிநீர் மடை திறந்த வெள்ளம் வெள்ளம் போல் மகிழ்ச்சி கலந்த வேதனைக் கதறல் அவனைப் புடம் போட அதிபரிடமிருந்து விடைபெற்று வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் வீட்டின் அருகில் உள்ள நூலகத்தின் நூலகரை கண்டு விம்மி அழுதான்.

"அண்ணை உங்கட பிள்ளை நல்லா படிக்கும் எனக்கு அது என்றைக்கோ தெரியும் என்றதும் தான் மட்டும் தனது பிள்ளையை நம்பவில்லை என அழுதவனாய் வீடு சென்றதும் அவன் கண்ட காட்சிகளை அவனால் நம்பமுடிய வில்லை. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், கிராம அலுவலர் ஊர் பெரியவர்கள் என அனைவரும் தனது வெற்றிமகளை வாழ்த்தி பரிசில்களுடன் நிற்பதைக் கண்டதும் புழகாங்கிதமடைந்த கந்தசாமி ஓடோடிச் சென்று தன் மகளின் கால்களை இறுகப் பற்றி அவமானம் என்று நினைத்ததை மன்னித்து விடு மகளே...! தான் தவறு செய்து விட்டேன் எனக் கூறி கதறிக் கதறி அழுதான். முகளை கட்டி அணைத்து மாறி மாறி முத்தமிட்டான். கண்ணம்மாவின் கைகளை இறுகப் பற்றியவாறு மகளையும் அணைத்து அன்பு மழை பொழிந்தான். இத்தருணத்தில் கந்தசாமியின் சட்டைப் பையில் இருந்து தொலைபேசி அலறியது...

மறுமுனையில் மாவட்ட கல்விப் பணிப்பாளர்... ஜனாதிபதி விருது வழங்கல் நிகழ்வு நாள் செல்ல ஆயத்தமாகுமாறு கூற மறுபடியும் விம்மி விம்மி அழுத கந்தசாமி வெற்றிமகளின் கைகளை இறுகப் பற்றியவாறு நான் என்றும் உன்னுடன் உனக்காக வாழ்வேன் எனச் சத்தியம் செய்தவனாய் நின்ற போது வீதி வழியால் வந்த குளிர்கழி வண்டியின் ஒலிபெருக்கியில் அந்த வானுக்கு இரண்டு தீபங்கள் அவை தாயொடு தந்தையரே என அவன் காதில் தேனை வார்த்தது.

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சியந்திரம் உருவான வரலாறு

திருமதி ந.மேதினி
ஆசிரியை — யாழ்ப்பாணம்

பல்வேறு புத்தகங்களை வாசிக்க வாசிக்கத் தான் மனித குலத்தின் அறிவு வளர்கிறது ஆற்றல் பெருகுகிறது. புத்தகங்கள் இல்லாத ஒரு உலகத்தை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு வரை புத்தகங்கள் என்பது ஓர் அரிய பொருளாக இருந்தது.

ஒரு புத்தகத்தில் ஒரு பிரதி மட்டும் தான் இருந்தது. அதுவும் கைகளால் எழுதப்பட்டு செல்வந்தர்கள் மட்டுமே வைத்துக் கொள்ள கூடியதாக இருந்தது. அதனைப் பார்த்து ஒரு வரலாற்று நாயகர் சிந்திக்கத் தொடங்கினார். செல்வந்தர்கள் மட்டும் தான் புத்தகங்கள் வைத்துக்கொள்ள முடியுமா? ஒரு புத்தகத்தை அப்படியே பிரதி எடுத்து பல புத்தகங்களாக உருவாக்கினால் எல்லோராலும் புத்தகங்களை வைத்துக்கொள்ள முடியுமே என்று சிந்தித்தார். சிந்தித்தத்தோடு நின்று விடாமல் செயலிலும் இறங்கினார். தனி ஒரு மனிதனின் வேட்கையாலும், உழைப்பாலும், வியர்வையாலும், விடாமுயற்சியாலும் உலகுக்குக் கிடைத்த அருங்கொடை தான் அச்சு இயந்திரம். இதுவரை நிகழ்த்தப்பட்டிருக்கும் கண்டுபிடிப்புகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது அச்சியந்திரம் தான் என்று பல வரலாற்று வல்லுனர்கள் கூறுகின்றனர். அவர்களின் கூற்று உண்மையானது தான். ஏனெனில் அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் புத்தகங்கள் உருவாகின. நூலகங்கள் பெருமளவில் தோன்றத் தொடங்கின. உலக மக்களுக்கு அறிவையும், தகவலையும் கொண்டு சேர்க்கும் பணி எளிதானது. மொத்தத்தில் அச்சியந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு ஐந்து நூற்றாண்டுகளில் உலகம் பல துறைகளில் அபரிமித வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. இவ்வாறான பெருமைக்கும் புகழுக்கும் காரணகர்த்தாவாக விளங்குபவரே *Johannes Gutenberg*.

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர் என்பதால் குட்டன்பெர்க்கைப் பற்றிய குறிப்புகள் துல்லியமாக எவருக்கும் தெரியவில்லை. அநேகமாக அவர் 1398-ஆம் ஆண்டு அல்லது 1399-ஆம் ஆண்டு பிறந்தார் என்று ஒரு வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது. ஜெர்மனியின் *Mainz* என்ற நகரில் வசதியான குடும்பத்தில் பிறந்தார் குட்டன்பெர்க். ஆரம்பம் முதலே குட்டன்பெர்க்கிற்கு வாசிக்கக் கற்றுத்தரப்பட்டது. ஆனால் அக்காலத்தில் இருந்த புத்தகங்கள் இப்போது இருப்பவை போன்றவை அல்ல. கைகளால் எழுதப்பட்டவை அவற்றை புத்தகங்கள் என்று சொல்வதை விட *Manuscripts* அதாவது எழுத்துப்படிவங்கள் என்று சொல்லலாம். அவை கிடைப்பதற்கும் அரிதானவை. அவருடைய காலப் பகுதியில் புத்தகங்களை அச்சடிக்கும் ஒரு புதிய முறை அறிமுகமானது. அச்சுப்பால அச்சுமுறை *(Block printing)*. ஒரு மரப்பலகையில் ஒவ்வொரு எழுத்தாக செதுக்கி எழுத்துகள் எழும்பி நிற்கும்படி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அந்த எழுத்துகளில் மை தடவி அவற்றை தாளில் அழுத்தினால் ஒரு பக்கம் அச்சாகும்.

இந்த முறையில் ஒரே பக்கத்தைப் பல பிரதிகள் அச்சிடலாம். ஆனால் ஒவ்வொரு பக்கத்திற்கும் ஒரு பலகை செய்தாக வேண்டும். அதற்கு அதிக நேரம் பிடிக்கும் அவற்றை வேறு பக்கங்களுக்கும் பயன்படுத்த முடியாது. எனினும் கைகளால் எழுதுவதைக் காட்டிலும் அச்சுப்பால அச்சுமுறை வேகமானது தான். புதிய முறையில் அச்சடிக்கப்பட்ட புத்தகங்களையும், எழுத்துப் படிவங்களையும் படிப்பதில் குட்டன்பெர்க்கிற்கு அதிக ஆர்வம் இருந்தது. ஆனால் அவற்றையும் செல்வந்தர்களால் தான் வைத்துக் கொள்ள முடிந்தது. எல்லோரும் வைத்துக்கொண்டு படிக்கும்படி புத்தகங்களை உருவாக்க வேண்டும் என்று அவர் கனவு கண்டார். ஒரு பாழடைந்த கட்டடத்தின் ஓர் அறையை சுத்தம் செய்து விட்டு அங்கு ரகசியமாக பரிசோதனைகள் செய்யத் தொடங்கினார். அதிகாலையிலேயே வீட்டை விட்டு வெளியேறுபவர் இரவுதான் திரும்புவார்.

குட்டன்பெர்க் எங்கு செல்கிறார்? என்ன செய்கிறார்? என்பது எவருக்கும் தெரியாது. யார் என்ன சொன்னாலும் நினைத்தாலும் பரவாயில்லை என்று தன்னுடைய ஆராய்ச்சிகளை தொடர்ந்தார். பலமுறை அவர் சோர்ந்தும், ஊக்கமிழந்தும் வீட்டிற்கு திரும்பியிருக்கிறார். ஏனெனில் ஒவ்வொரு முறையும் அவர் தோல்வியையே சந்தித்தார். கைவசம் இருந்த



பணமும் தீர்ந்து விட்டது. அப்போது தான் செல்வந்தரான *Johann Fust* என்பவரின் நட்பு அவருக்கு கிடைத்தது. அச்சியந்திரத்தை உருவாக்குவதில் ஆர்வம் கொண்ட *Fust*, குட்டன் பெர்க்கிற்கு தேவையான பணம் கொடுத்து உதவினார். புதிய உற்சாகத்துடன் தனது ஆராய்ச்சிகளைத் தொடங்கிய குட்டன்பெர்க் பல முயற்சிகளுக்குப் பிறகு *'Movable type'* எனப்படும் இயங்கக்கூடிய எழுத்துருவை உருவாக்கினார். ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு அச்சு என்று உருவாக்கினால் அவற்றை வேண்டிய மாதிரி தேவைகேற்ப மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம் என்பதை கண்டறிந்தார். பின்னர் பலகைக்குப் பதில் உலோகத்தாலான அச்சு சிறந்தது என்பதையும் கண்டறிந்தார்.

தாம் கண்டுபிடித்த முறையைக் கொண்டு லத்தீன் மொழியில் பைபிளை அச்சடிக்கும் பணியைத் தொடங்கினார். 1455-ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் நாள் நவீன அச்சு முறையில் உருவான உலகின் முதல் புத்தகம் உருவானது. லத்தீன் மொழியில் இரண்டு தொகுதிகளில் பைபிள் வெளியானது. ஒவ்வொன்றும் 300 பக்கங்கள் கொண்டது ஒவ்வொரு பக்கத்திலும் 42 வரிகள் இருக்கும். குட்டன்பெர்க் கண்டுபிடித்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சு முறையில் உருவானது என்பதால் அது 'குட்டன்பெர்க் விவிலியம்' *(Gutenberg Biblè)* என்றே அழைக்கப்பட்டது. அந்த முறையில் *200* பிரதிகள் வரை அச்சிடப்பட்டிருக்கலாம் என்று ஒரு குறிப்பு கூறுகிறது. அவற்றில் தற்பொழுது *22* பிரதிகள் எஞ்சியிருப்பதாக நம்பப்படுகிறது. அந்த பைபிள் புத்தகத்தின் ஒரு பக்கம் விற்பனைக்கு வந்தால் கூட அது நூறாயிரம் டாலர் வரை விலை போகும் என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது.

*1455*-ஆம் ஆண்டில் *Bamberg* புத்தக சந்தையில் தாம் அச்சிட்ட பைபிள் பிரதிகளை *300 florins*-க்கு விற்றார் குட்டன்பெர்க். அது அப்போதைய ஒரு குமாஸ்தாவின் மூன்று ஆண்டு சம்பளத்திற்கு சமம். அனால் கையால் எழுதப்பட்ட பைபிளின் விலையை விட அது குறைவுதான். இதில் ஒரு சுவாரசியமான தகவல் என்னவென்றால் அந்தக் காலகட்டத்தில் ஒரு பைபிளை கையால் எழுதி முடிக்க ஒருவருக்கு *20* ஆண்டுகள் வரை தேவைப்படுமாம். புத்தக சந்தையில் கிடைத்த பணம் பெரிய தொகை இல்லை என்பதால் தான் கடன் வாங்கிய பணத்தை குட்டன்பெர்க்கால் திருப்பித்தர இயலவில்லை. பொறுமையிழந்த *Fust* குட்டன்பெர்க்கின் மீது வழக்குத் தொடர்ந்தார். தனக்கு சேர வேண்டிய பணத்திற்காக நீதிமன்றத்தின் துணையுடன் குட்டன்பெர்க்கின் அச்சு இயந்திரத்தை அப்படியே அபகரித்துக் கொண்டார்.

உலகின் உன்னத கண்டு பிடிப்பை செய்தும் அதிலிருந்து எந்தவித பலனையும் பெறாமல் ஏழ்மையில் இறந்து போனார் குட்டன்பெர்க் என்பது தான் வேதனையான உண்மை. *1468*-ஆம் ஆண்டு பிப்ரவரி *3*-ஆம் நாள் இயற்கை எய்திய அவர் ஒரு *Franciscan* தேவலாயத்தில் அடக்கம் செய்யப்பட்டார். அந்த தேவலாயம் இரண்டு முறை இடிக்கப்பட்டது இப்போது அவர் புதைக்கப்பட்ட இடம் எது என்பது கூட சரிவரத் தெரியவில்லை. கடந்த *500* ஆண்டுகளில் உலகம் சந்தித்திருக்கும் பல மாற்றங்களுக்கு அடிப்படையான ஒரு கண்டுபிடிப்பு அந்த அச்சு இயந்திரம் தான். புத்தகங்களை விரைவாக பல பிரதிகள் எடுக்க முடியும் என்பதால் உலகம் முழுவதும் புத்தகங்கள் பரவத் தொடங்கின. கிறிஸ்துவ மதத்தில் *frattances* கிளைகள் உருவானதற்கும் ஒரு வகையில் குட்டன்பெர்க் தான் காரணம் என்கின்றனர் வரலாற்று வல்லுனர்கள். ஏனெனில் அதுவரை சமயத் தலைவர்களிடம் மட்டுமே இருந்த பைபிள் சாமானியர்கள் கைகளிலும் தவழத் தொடங்கியது.

சிலர் பைபிளின் கருத்துகளை வெவ்வேறு விதமாக புரிந்து கொள்ள முற்பட்ட போது *frattances* கிளைகள் தோன்றத் தொடங்கின. இதைத் தவிர்த்து இன்னொன்றையும் வரலாறு சுட்டிக்காட்டுகிறது.



குட்டன்பெர்க் இயந்திரம் கண்டுபிடிக்கப்படாத காலகட்டத்தில் ஐரோப்பாவும், சீனாவும் தொழில்நுட்பத் துறையில் சரி நிகராகவே முன்னேறியிருந்தன.

அச்சியந்திரம் வந்த பிறகு அதனை பரவலாக பயன்படுத்தத் தொடங்கிய ஐரோப்பா எல்லாத் துறைகளிலும் அபரிமித வளர்ச்சிக் காணத் தொடங்கியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பழைய அச்சுப் பாலமுறையையே தொடர்ந்து பின் பற்றிய சீனா பல துறைகளில் பின் தங்கிவிட்டது. உலக வரலாற்றில் குட்டன்பெர்க்கின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை பறைசாற்ற இதுவே சிறந்த சான்றாக கூறப்படுகின்றது. குட்டன்பெர்க்கின் எளிய வாழ்க்கை நமக்கு கூறும் பாடமும் எளிதானது தான். அவர் பல தோல்விகளை சந்தித்த பிறகுதான் உலகின் உன்னத கண்டுபிடிப்பை கண்டுபிடிக்க முடிந்தது. இன்று நம் கைகளில் தவழும் ஒவ்வொரு புத்தகத்திற்கும் நாம் குட்டன்பெர்க்கிற்கு தான் நன்றி சொல்ல வேண்டும்.

தோல்விகளைக் கண்டு அவர் துவண்டு போயிருந்தால் கடந்த ஐந்து நூற்றாண்டின் உலக வரலாறே மாறிப்போயிருக்கும். தோல்விகளைக் கண்டு துவண்டு போகாமல் விடாமுயற்சியுடன் தொடருவோருக்கு தான் வரலாறும் இடம் தரும் அவர்கள் விரும்பிய வானமும் வசப்படும்.

---



- என்னைக் கிழித்துத் துன்புறுத்தாதீர்கள்.
- எனது உடலில் பேனா, பென்சில் கொண்டு கிறாதீர்கள்.
- என் மேல் தலை வைத்துப் படுக்காதீர்கள்.
- என்னை விரித்து வைத்து உங்கள் கைகளை என் மேல் வைத்து அழுத்தாதீர்கள்.
- என்னை தூக்கி வீசாதீர்கள்.
- ஈரமான கைகளால் என்னை தூக்காதீர்கள்.
- ஈரமான இடத்தில் என்னை வைக்காதீர்கள்.
- நான் அனைவர்க்கும் உரியவள். எனவே என்னை இரகசியமாக வெளியே தூக்கிச் செல்லாதீர்கள்.



- பிளேடுகள் கத்திகள் கொண்டு எனது உடலை வெட்டாதீர்கள்.
- உங்கள் அதிக பாவனையால் ஊறுபட்ட எனது உடலை பசை கொண்டு ஒட்டிப் பேணுங்கள்.
- புதியவர்கள் வருகையால் எமது மதிப்பும் பயன்பாடும் அற்றுப் போவதில்லை.
- எனது வயது போய் விட்டதே என எண்ணி என்னை ஒதுக்காதீர்கள்.

– புத்தகம் –

---

புத்தகங்களை விரும்புவர்களை ஆங்கிலத்தில் **Bibliophile,**
என்று அழைப்பர். சாதாரண பேச்சு வழக்கில் **Bookworm** புத்தகப் புழு என்பர்.
ஜேர்மனியின் நாசித் தலைவர் ஹிட்லரின் சுயசரிதை – "மெய்ன் காம்ஃப்" **Mein Kampf**
"உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த புத்தகம்
The Gospel book of Henry the Lion என்ற புத்தகம்
226 ஓலைச்சுவடிகளைக் கொண்டதாக இருந்தது.
இது 8.14 மில்லியன் பவுண்ஸ் விலைக்கு விற்கப்பட்டது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித மேதை ராமானுஜரைப் பற்றிய சில சுவையான தகவல்கள்

வரலாற்று ஆசிரியர் ராபர்ட் கனிகல் *(Robert Kanigel)* என்பவர் கணித மேதை ராமானுஜனின் வாழ்க்கை வரலாற்றை 'அறிய இயலாத இறுதி எண்ணை அறிந்த மனிதன் *(The man who knew infinity)*' என்று நூலாக எழுதினார். இசைக்கு ஒரு மொசார்ட் *(Mozart)* போல, பௌதீகத்திற்கு ஒரு ஐன்ஸ்டைன் *(Einstein)* போல, கணிதத்திற்கு ஒரு ராமானுஜன் என்கிறது இந்நூல். 1917 ஆம் ஆண்டு ராமானுஜம், அவரது 30 ஆம் வயதில், இங்கிலாந்து F.R.S. [Fellow of Royal Society] விருதை அளித்தது. அதே சமயம் ராமானுஜன் இங்கிலாந்தில் Fellow of Trinity College என்னும் கௌரவத்தையும் பெற்றார். பிரிட்டனுடைய இவ்விரு பெரும் பட்டத்தையும் முதன்முதல் பெற்ற இந்தியர் இவர் ஒருவரே. 1911 இல் ராமானுஜத்தின் முதல் பதிவு கணிதப் படைப்புகள், Journal of the Indian Mathematical Society இல் வெளிவந்தன. சென்னைத் துறைமுக [Madras Port Trust ] நிறுவனத்தில் மேற்பார்வை செய்யும் இந்திய கணிதக் குழுவை [Indian Mathematical Society] சேர்ந்த வி. ராமசுவாமி ஐயர். ராமானுஜத்தின் கணித ஞானத்தைப் பாராட்டி, அவரது கணிதப் படைப்புக்களை, இங்கிலாந்தில் மூன்று முக்கிய பிரிட்டிஷ் கணித வல்லுநர்களுக்கு அனுப்பித் தொடர்பு கொள்ள ஊக்கம் அளித்தார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் பதில் அனுப்பினார்! அவர் தான், அக்காலத்தில் புகழ்பெற்ற பிரிட்டிஷ் கணித நிபுணர், G.H. ஹார்டி. கணித உலகிற்கு இராமானுஜன் விட்டுச்சென்றது மூன்று குறிப்பேடுகள் மட்டுமே.

*(i)* சென்னைப் பல்கலைக்கழகத்திற்காக கொடுக்கப்பட்ட மூன்று காலாண்டு அறிக்கைப் பத்திரங்கள் (1913 – 1914)

*(ii)* 138 பக்கங்கள் கொண்ட தொலைந்து போனக் குறிப்பேடு.

*(iii)* கணித இதழ்களில் பிரசுரிக்கப்பட்ட 32 ஆய்வுக் கட்டுரைகள்.

இராமானுஜன் ஆய்வுகளில் " Theory Of Equation", " Theory Of Numbers", "Definite Integrals", "Theory Of Patricians", "Elliptic Functions and Continued Fractions" எனும் நிலைப்பாடுகள் மிகச் சிறந்தவைகளாகக் கருதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனுஜருக்குப் பிறகு இவரது ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தையும் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இவருடைய "Mock Theta Functions" எனும் அராய்ச்சி முடிவுகள் சிறப்பான ஒன்றாகும். இவர் *1914* முதல் *1918* வரையான ஆண்டுகளிலே *3000* க்கும் அதிகமான புதுக் கணிதத் தேற்றங்களைக் கண்டுபிடித்தார்.

"ஹார்டி சொல்கிறார் – "நான் அவருக்கு சொல்லிக் கொடுத்தது தான் சரி என்று வைத்துக் கொண்டாலும், ஒன்று மாத்திரம் உண்மை. அவர் என்னிடமிருந்து கற்றதை விட நான் அவரிடமிருந்து கற்றது தான் அதிகம்."

**சுவாமி விபுலானந்தர்**



பிறப்பு : மயில்வாகனம் சின்னத்தம்பி
மார்ச் 27, 1892, காரைதீவு, இலங்கை.
இறப்பு : ஜூலை 19, 1947, அகவை 55
இறப்பிற்கான காரணம் : சுகயீனம்
கல்லறை : சிவானந்த வித்தியாலயத்தில் உள்ளது.
தேசியம் : இலங்கைத் தமிழ்
கல்வி : இளமாணி
(அறிவியல், இலண்டன் பல்கலைக்கழகம்)
பணி : பேராசிரியர்
பணி புரிந்த இடங்கள் :
இலங்கைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அறிமுகம் : தமிழிசை ஆய்வாளர், பண்டிதர்,
நூலாசிரியர்,
இந்து மறுமலர்ச்சியாளர்.
சமயம் : இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் நூலகம்

புத்தாக்கம் தரும் புத்தகங்களின் பாதுகாப்புப் பெட்டகமாக நூலகங்கள் திகழ்கின்றன. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினா போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்பதற்கு மட்டுமன்றி செய்முறைப் பயிற்சி (Assignment), தொடர்பான கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கு ஏராளனமான மேற்கோள்களுடன் செய்திகளைத் தொகுத்தளிக்க நூலகங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

அது மட்டுமா? நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் படிப்பதற்கும், பல்துறை தொடர்பான செய்திகளை அறிந்து கொள்வதற்கும் உதவும் செய்திகளின் சங்கமமே நூலகங்கள் என்றால் மிகையாகாது. எதற்கும் தோற்றம் என்ற ஒன்று இருக்கும் தானே. நூலகத்தின் தோற்றத்திற்குக் காரணமானவர்களாக ஈராக் நாட்டைச் சேர்ந்தோர் உள்ளனர். அதாவது, முற்காலத்தில் மெசபதேமியர்கள் என அழைக்கப்பட்ட ஈராக்கியர்கள். தற்போதைய டைகிரிஸ் மற்றும் யூபிரட்டிஸ் ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பே பண்டைய மெசபதேமியப் பகுதியாகும். தற்போது ஈரான், ஈராக் மற்றும் சிரியா ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறது. இந்தக் கண்டத்தில் குறிப்பிடத்தக்க நான்கு பேரரசுகளாக சுமேரியா, பாபிலோனியா, அசிரியா மற்றும் அக்காத்தியர் ஆகியன விளங்கின. சுமார் 3 ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முன்பு அசிரியப் பேரரசின் நிர்வாகத் துறையில் ஏற்பட்ட குழப்பங்களை சென்னாசெர்ப் என்ற அரசர் நீக்க விரும்பினார். அரசாங்கத்தினர் முக்கிய ஆவணங்கள் அனைத்தையும் களிமண் தகடுகளில் எழுதி, சூளைகளில் சுட்டுக் காயவைத்து பாதுகாப்பான இடத்தில் வைக்கும்படி ஆணையிட்டார். மன்னரின் ஆணையையடுத்து, அரசாங்க ஒப்பந்தங்கள், கடிதங்கள், ஆணைகள், உளவு அறிக்கைகள் மற்றும் முக்கியமான ஆவணங்கள் களிமண் தகடுகளில் எழுதப்பட்டன. பின்னர், சூளைகளில் சுட்டு அரசாங்கக் கருவூலங்களிலும், கோவில் கருவறைகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. பின்னர் மருத்துவக் குறிப்புகளும், சமய நூல்களும் பாதுகாக்கப்பட்டன. அசிரியப் பேரரசின் கடைசி மன்னர் அகர்பானிபல் (கி.மு.700 _ கி.மு.600) ஆட்சியின்-போது, களிமண் தகடுகள் 30 ஆயிரத்திற்கும் அதிகமாகின. வெவ்வேறு இடங்களில் வைத்துப் பாதுகாப்பது மிகவும் கடினமாக இருந்தது.

எனவே, அசிரியாவின் தலைநகரான (தற்போதைய ஈராக்) நினிவெக் (Nineveh) (தற்போது மோசுல்) என்னுமிடத்தில் அனைத்தையும் துறைவாரியாகப் பிரித்து அடுக்கி வைக்க மன்னர் ஆணையிட்டார். மன்னரின் ஆணைப்படி, துறைவாரியாகப் பிரித்து அடுக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக விடப்பட்டது. இதுவே உலகில் அமைக்கப்பட்ட முதல் நூலகம் ஆகும். இந்த நூலகம் The Royal Library of Ashurbanipal என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இந்த நூலகத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்ட அலெக்சாண்டர் (கி.மு.356 _ கி.மு.323) நேரில் சென்று பார்த்தார். அஸ்குர்பனிபலைவிட பெரிய நூலகம் கட்ட நினைத்தார். எகிப்து மக்கள் அப்போது பாப்பிரஸ் தாள்களில் எழுதி வந்தனர். உலகம் முழுவதுமிருந்து கல்வி, கலை, இலக்கியம், கணிதம், அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளிலிருந்து சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அந்த நூல்கள் அனைத்தும் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பாப்பிரஸ் தாள்களில் எழுதப்பட்டன.

வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அலெக்சாண்டர் மரணம் அடைந்தார். எனினும் அவரது நெருங்கிய நண்பரும், அப்போதைய எகிப்தின் அரசருமான டாலமியின் மேற்பார்வையில் வேலைகள் நடைபெற்றன. கி.மு.300இல் எகிப்தின் அலெக்சாண்டிரியா நகரில் 7 லட்சத்திற்கும் அதிகமான பாப்பிரஸ் தாள்களைக் கொண்ட பொதுநூலகம் அமைக்கப்பட்டது. நூலகத்திற்கு The Royal Library of Alexandria என பெயர் வைக்கப்பட்டது.

பின்னர் மேலைநாடுகளில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் நூலகங்களின் தேவையினை உணர்ந்தன. பல்கலைக்கழக வளாகங்களிலேயே நூலகங்கள் அமைக்கப்பட்டன. பின்னர் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து இன்று நாம் பார்க்கக்கூடிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளன.

## நமது உடலின் அதிசயத் தகவல்கள்...

நமது மூக்கினால் 50,000 வகையான வாசனைகளை நினைவில் கொள்ள முடியும்.

குழந்தையின் உடலில், வளர்ந்த நபர்களை விட 60 எலும்புகள் அதிகமாக இருக்கும். வளர, வளர சில எலும்புகள் ஒன்றோடு ஒன்றாக இனணைந்து விடுகிறது.

ஓர் மனித உடலில் இருக்கும் இரத்த நாளங்களை இணைத்தால் அது ஒரு லட்சம் மைல் தூரம் இருக்குமாம்.

நமது உடலில் இருக்கும்இரும்பின் அளவை கொண்டு, மூன்று இன்ச் நீளமுள்ள ஓர் ஆணியை உருவாக்கலாம்.

உண்மையில் வியர்வை வாசனை அற்றது. அது உடல் சருமத்தில் இருக்கும் பாக்டீரியாக்களோடு இணையும் போது தான் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கிறது.

ஓர் மனிதனின் உடலில் கடைசி வரை வளர்ந்துக் கொண்டே இருக்கும் உடல் பாகம் மூக்கும், காதும் தான்.

மனிதர்களின் எலும்பு இரும்பை விட உறுதியானது, வலிமையானது.

மனிதனின் கண்கள் 10 மில்லியன் வண்ணங்களை பிரித்து காணும் திறன் கொண்டது.

ஒருவேளை மனித கண்கள் டிஜிட்டல் கேமராவாக இருந்தால் அதன் திறன் 576 மெகாபிக்சல் திறன் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உடலில் இருக்கும் பக்டீரியாக்களின் ஒட்டு மொத்த எடை ஏறத்தாழ 1.82 கிலோ வரை இருக்கும்.

ஓர் நாளுக்கு ஒரு லீட்டர் அளவு வரை சளியை உருவாக்குகிறது மனித உடல்.

எலும்பில் 31% தண்ணீரின் பங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

உடலின் கனமான உறுப்பு மூளை. இதன் எடை சுமார் 01.250 kg.

மனித உடலில் 60 சதவிதம் நீர் தான் உள்ளது. இது சுமார் 50 லீட்டர் இருக்கும். அதாவது நூறு கிலோ மனிதனின் உடலில் 60 லீட்டர் தண்ணீர் தான் இருக்கிறது.

இதயம் 14 ஆயிரம் லீட்டர் ரத்தத்தை 1.68 கோடி மைல் நீள குழாய்களின் வழியே பரவச் செய்கிறது. இது உண்டாகும் சக்தி 80 ஆயிரம் கிலோ எடை உள்ள பொருளை பூமியில் இருந்து ஓரடி உயரம் தூக்க போதுமானது. இதயம் ஒரு நாளில் லட்சம் தடவை சுருங்கி விரிகிறது.

மூளையின் அடிப் பகுதியில் இருக்கும் பிட்யூட்டரி சுரப்பி தான் உடல் வளர்ச்சியையும், பாலின தன்மையையும் கட்டுப்படுத்துகிறது. ஒரு சிறு பட்டாணி அளவே உள்ள இது உடலின் பல்வேறு பகுதிகளுடன் 50 ஆயிரம் நரம்புகளால் தொடர்பு கொண்டுள்ளது.

ஒரு மனிதன் 25 வயதில் முழு வளர்ச்சி பெற்று விடுகிறான். 40 வயதுக்கு மேல் வளர்ச்சி நின்று விடுவது மட்டுமல்லாமல் மெதுவாக குறையவும் தொடங்கும். 10 ஆண்டுகளுக்கு 4/10 அங்குலம் என்ற அளவில் உயரம் குறைய தொடங்கும். இது குருத்தெலும்புகள் காய்ந்து போவதால் தான் நேர்கிறது.

நாம் பகலை விட இரவில் தான் அதிகம் வளர்கிறோம். குழந்தைகள் கோடை காலத்தில் மழை காலத்தை விட வேகமாக வளர்கிறார்கள்.

ஒருவரது வாழ்நாளில் இதயம் சுமார் 200 கோடி தடவை துடிக்கிறது. அப்பொழுது 50 கோடி லிட்டர் ரத்தத்தை உடலுக்குள் பாய்ச்சுகிறது. உறங்கும் போதும் கூட மணிக்கு 340 லிட்டர் ரத்தத்தை பாய்ச்சுகிறது. வளர்ச்சி அடைந்த ஒரு ஆண் ஓய்வில் இருக்கும் போது அவனது நாடித் துடிப்பு நிமிடத்துக்கு 70 முதல் 72 வரை இருக்கும். அதுவே முழுமையாக வளர்ந்த பெண் என்றால் 78 முதல் 82 வரை அவளது நாடித் துடிப்பு இருக்கும். கடுமையான உடல் பயிற்சி செய்யும் போது இது 200 வரை உயரும். நாடித் துடிப்பு என்பது இதயத்தின் துடிப்பு என்பதையே குறிக்கிறது.

மனித உடலில் மிகப் பெரிய உறுப்பு எதுவென்றால், அது சருமம் தான். வளர்ந்த ஒரு ஆணின் சருமத்தின் பரப்பளவு 20 சதுரஅடிஇருக்கும். இதுவே பெண் என்றால் 17 சதுரஅடி இருக்கும். ஒவ்வொரு இரவிலும் தூங்கும் பொழுது, உடல் சுமார் 8 மில்லி மீட்டர் வளர்ச்சி அடைகிறது. பகலில் இந்த உடல் வளர்ச்சி சுருங்கி விடும். உட்காரும் பொழுதும், நிற்கும் பொழுதும், முதுகில் உள்ள குருத்தெலும்புகள் அழுத்தப்பட்டு சுருக்கம் ஏற்படுகிறது. தூங்கும் பொழுது அழுத்தம் இல்லாததால் நீண்டு வளர்கிறது.

சராசரியாக உடலில் 50 லட்சம் ரோமங்கள் இருக்கும். உடலில் கறுத்த ரோமமுடையவர்களுக்கு சற்று கூடுதலாக இருக்கும். உள்ளங்கை,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்கால் விரல்களில் உட்புறம் ஆகிய இடங்களில் மட்டுமே ரோமம் வளர்வதில்லை.

குழந்தை பிறக்கும் பொழுது 300 எலும்புகள் இருக்கும். இவற்றில் 94 எலும்புகள் இளகி மற்றவற்றுடன் இணைந்து வளர்ந்த பருவத்தில் 206 ஆகிறது. எடையை தாங்குவதில் எலும்புகள் கருங்கல்லை விட உறுதியானவை. ஒரு தீப்பெட்டி அளவு உள்ள எலும்பு 9 டன் எடையை தாங்கும் அதாவது கருங்கல்லை போல நான்கு மடங்கு அதிகம்.

---

- கருப்பு புத்தகம் "Black Book" என்பது தண்டனைக்குரியவர்களின் பெயர்கள் அடங்கிய புத்தகம்.
- சீனாவின் மருத்துவத்தில் பழமையான புத்தகம் Huangdi Neiching கி.மு. 450






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாளன்

எல்லாளன் கி.மு 145 இல் இருந்து கி.மு 101 வரை அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னனாவான். இந்தத் தகவலைச் சிங்கள வரலாற்று ஆவணமான மகாவம்சம் பதிவு செய்துள்ளது. இவனது ஆட்சிக் காலம் நீதியானதாகவும், சிறப்பானதாகவும் அமைந்ததாகப் பொதுவாக சிங்களச் சார்பான ஆவணமாக பார்க்கப் படும் மகாவம்சமே குறிப்பிடுகின்றது. மகாவம்சத்தின் படி எல்லாளன் தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த சோழ இளவரசனாவான். ஆனால் எல்லாளன் ஈழவூரின் உத்தரதேசத்தை (தற்போதைய பூநகரி) சேர்ந்தவன் ஆவான். அதற்கான ஆதாரங்கள் உண்டு. உத்தரதேசத்தில் குறுநில மன்னனாக எல்லாளன் முதலில் விளங்கியமையால் தான் வவுனிக்குளத்தை அக்கால வேளையில் கட்டியுள்ளான். ஆங்கிலேய நாட்டவரான எச்.பாக்கர் மகாவம்சத்தில் அநுராதபுரத்திற்கு வடக்கே அமைந்த பெபிலாபியை பூநகரியின் தென்னெல்லையிலுள்ள பாலியாறு என அடையாளம் கண்டு இங்குள்ள வவுனிக்குளத்தின் ஆரம்பத் தோற்றம் எல்லாளனின் சாதனைகளில் ஒன்றாக இருக்கலாமெனக் கூறியுள்ளார்.

Mr.S.Paul Dharshanth
Revenue Inspector
Poonakary Pradeshiya Sabah

கி.மு 3 ஆம்நூற்றாண்டிற்கும் (கி.மு 247) கி.மு 1 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு 29) இடைப்பட்ட 220 ஆண்டு கால அனுராதபுர அரசின் வரலாற்றில் ஆட்சி புரிந்த 19 மன்னர்களுள் 8 தமிழ் மன்னர்கள் 81 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். இதில் 44 வருடங்கள் எல்லாளனுக்கும் 22 வருடங்கள் அவனது தந்தை ஈழசேனனுக்கு முரியவை. ஆயினும், இக்கால வரலாற்றைப் பல அத்தியாயங்களில் கூறும் மகாவம்சம் தமிழ் மன்னர்களின் ஆட்சியைச் சில செய்யுட்களில் மட்டுமே கூறி முடிக்கின்றது. எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வெற்றி கொண்டதன் மூலம் சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக வருணிக்கப்பட்ட துட்டகாமினியின் 24 ஆண்டுகால ஆட்சியை 843 செய்யுட்களில் கூறும் மகாவம்சம், 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி நடத்திய எல்லாளனை 21 செய்யுட்களில் மட்டுமே கூறுகிறது. இது ஒன்றே பாளி இலக்கியங்களில் தமிழ் மன்னர்களின் வரலாறு மறைக்கப்பட்டுள்ளமைக்கு சிறந்த சான்று.

கி.மு 177 ஆம் ஆண்டு ஈழசேனன் (சேனன்) ,நாககுத்தன் (குத்திகன்) ஆகிய ஈழத்தமிழ் மன்னர்களால் அனுராதபுர அரியணை சூரத்தீசன் எனப்படும் சிங்கள மன்னனிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அரியணையை இழந்த சூரத்தீசன் தப்பி ஓடினான். அரியணையை கைப்பற்றிய ஈழசேனன் தான் சைவன் எனினும் எந்த மதத்திற்கும் எதிரானாவனோ அல்லன் எனவும் தனது ஆட்சியில் மொழி, மத வேறுபாடில்லை. சேர்ந்தே உழைப்போம்; சேர்ந்தே உண்போம், என்றான். பௌத்த பிக்குகளும் அவனை ஆதரித்திருந்தனர். 22 வருடங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் கி.மு 155 ஆம் ஆண்டு தை மாதத்து வைகறை சிங்கள இளவல் அசேலனின் சேனை அனுராதபுரத்தினை கைப்பற்றிக் கொண்டது. அசேலன் என்பவன் சூரத்தீசனின் தமையனான மகாசிவனின் ஒன்பதாவது மகன் ஆவான். நீண்டகால ஆட்சியும் அனுராதபுரத்தில் நிலவிய அமைதியும் மன்னனைத் தன் படைகளை தளர்த்த வைத்திருந்ததே தோல்வியை தழுவ காரணமாகியது. ஆட்சி மாற்றம் தேவைப்படாது என்றே மன்னன் எண்ணியிருந்தான். ஆனால் அசேலனின் படையெடுப்பின் போது அனுராதபுரத்து சிங்கள மக்களும் பிக்குகளும் காட்டிய ஆதரவும் படை நடவடிக்கை மீதான விருப்பும் மன்னனை நிலைகுலைய வைத்தது. இவை திடீர்மாற்றமல்ல என்பதும் நீண்டகால சதி என்பதையும் மன்னன் புரிந்து கொண்ட போது காலம் கடந்திருந்தது. நாககுத்தன் உத்தரதேசத்தில். ஈழவூருக்கு செய்தியனுப்ப காலஅவகாசமில்லை.

மன்னனின் படையிலிருந்த சிங்கள வீரர்கெளெல்லாம் அசேலனின் பக்கம். இருபத்தியிரண்டு வருடகால ஆட்சியின் அஸ்தமனம் ஆரம்பமாகி விட்டதை மன்னன் புரிந்து கொண்டான். கலவரமடைந்த வேளக்கார வீரரிடம் மன்னன் 'ஆட்சி யென்பது இவ்வாறானது தான். அதற்காக எதிரிகளுக்கு அஞ்சி இரகசியத்தை தூக்கிக் கொடுத்து விட்டுப் பேடி போல ஓடி விட முடியாது. வாளேந்திய கடைசி வீரன் இருக்கும் வரை எதிரியை எதிர்த்தே சாவோம்.' வேளக்கார வீரர்களின் தலைவன் மறுத்தான். 'நாங்கள் சம்மதமே, ஆனால் அரசவம்சம் அழிந்து விடக் கூடாது. இளவரசரையும், இளவரசியையும், மகாராணியையும் உடனடியாக ஈழவூருக்கு அனுப்ப வேண்டும்' மன்னன் சம்மதித்தான். அரசவம்சம் காப்பாற்றப்பட்டது. மன்னனும் வீரர்களும் வீரகாவியம் படைத்தனர். மன்னனின் சிரசை கொய்த அசேலன் மூங்கில் கழியில் குத்தி கோட்டை வாசலில் வைக்க உத்தரவிட்டான்.

செய்தியறிந்த நாககுத்தன் தன்சேனையுடன் அநுராதபுரம் சென்று தானும் மன்னன் வழியை தொடர்ந்தான். ஈழவூர் வந்த மாகாராணி பொன்னம்மைதேவி இளவரசர் எல்லாளன் எனப்படும் ஈழராஜாவையும் நாககுத்தனின் மகன் திக்கஜனையும் போர்க்கலைகள் கற்று வருவதற்காக சோழநாட்டிற்கு அனுப்பிவைத்தார். சோழ தேசத்தில் பலகலைகளையும் கற்ற இவ்விளவல்கள் கி.மு 145 ஆம் ஆண்டு ஈழவூர் திரும்பினர். நீதி நெறி தவறாது ஆட்சி புரிந்ததன் கணவனைக் கொன்று தமிழர்களை ஈழவூருக்கு துரத்தி விட்டதால் கோபமுற்றிருந்த மகாராணி பொன்னம்மைதேவியார் உத்தரதேசத்தில் பெரும் சைனியத்தை தயார்ப்படுத்தி வைத்திருந்தார். காலம் கனிந்தது. அநுராதபுர இராச்சியம் மீண்டும் தமிழர் வசமானது

எல்லாளன் இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனது நீதி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துரைக்கும் பாளி நூல்கள், இவன் தவறான மார்க்கத்தினை (இந்துமதத்தினை) தழுவியவன் எனவும் கூறப்பின் நிற்கவில்லை. இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும், தன் பழைய மத நம்பிக்கையைக் கைவிடவில்லை என மகாவம்சம் கூறுகிறது. எல்லாளன் பகைவர்க்கும் நண்பர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமநீதிவழங்கியதாக கூறும் மகாவம்சம், அவனது நீதிநெறி தவறாத ஆட்சியை மனுநீதிச்சோழனின் கதைகளோடு இணைத்து விபரித்துள்ளது.

எல்லாளனின் சயன அறயில் ஓர் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது. நீதி வேண்டுவோர் எந்த நேரமும் கோட்டை வாசலில் தொங்கும் கயிற்றினை இழுத்து இந்த மணியை ஒலியெழுப்பின் மன்னன் உடன் வந்து விசாரித்துத் துயர்தீர்ப்பான்.

எல்லாளனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் பிள்ளைகளாவார். ஒரு நாள் ஒரு தேரில் திஸ்ஸவாவியை நோக்கி எல்லாளனின் மகன் பயணப்பட்டபோது, வழியில் பசுவுடன் படுத்திருந்த கன்றின் கழுத்தின் மேல் தேர்ச்சில் ஏறியதால், கன்று அவ்விடத்தில் இறந்து விட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்து எல்லாளனிடம் நீதி கேட்டது. எல்லாளன் தனது மகனின் தலையைத் தேர்க்காலிலிட்டு அதேவிதமாக மரண மேற்படுத்தி நீதி வழங்கினான்.

பாம்பொன்றுக்கு இரையான குஞ்சையிழந்த தாய்ப்பறவை ஆராய்ச்சி மணியை அடித்தது. மன்னன் அந்தப் பாம்பினைப் பிடித்து வரச் செய்து, அதன் வயிறு கீறப்பட்டுக் குஞ்சு வெளியில் எடுக்கப்பட்டது. பின்னர் பாம்பு மரத்தில் தொங்க விடப்பட்டது.

ஒரு வயோதிபமாது வெயிலில் அரிசியைக் காயப் போட்டிருந்த போது, பருவம் தப்பிப் பொழிந்த மழையால் அரிசி முழுவதும் பழுதடைந்து போனது. அவள் எல்லாளனிடம் முறையிட்டபோது, அவன் வருணனிடம் வாரத்திற் கொருதடவை இரவில் மட்டும் மழை பொழிய வேண்டுதல் விடுத்ததாக மகாவம்சம் வருணிக்கிறது.

எல்லாளனின் நீதி வழுவாமையைக் கூறமுயலும் இக்கதைகள் நம்பகமானவையல்ல. அவனது செங்கோலாட்சியைப் புலப்படுத்த மகாவம்சம் எடுத்துக் கொண்ட ஐதீகக்கதைகள் எனலாம். ஏனெனில் எல்லாளனின் மகன் இறுதிப் போரிலேயே வீரகாவியமானான் என்பதை மகாவம்சமே கூறுகின்றது. அவ்வாறானதொரு சம்பவம் நிகழ்ந்ததா, இல்லையா என்பதில் மகாவம்சமே முரண்பட்டு நிற்கின்றது. எனினும் மகாவம்சத்தின் இக்கதைகள் மகாவம்சம் எவ்வாறெல்லாம் திரித்து சாதகமாக்கி எழுதப்பட்டது என்பதற்கும் இவை சான்றாகின்றன.

மகாவம்சம் கூறுகின்ற ஒருகதை எல்லாளன் பௌத்த மதத்தை ஆதரவளித்து போற்றிப் பாதுகாத்தான் என்பதையும் நிரூபிக்கின்றது. தன் தாய் மரணித்ததை அறிந்த எல்லாளன் தேரிலேறி சேத்தியகிரி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, தேரின் அச்சு தாதுகோபமொன்றில் பட்டு தாதுகோபத்திற்குச் சேதத்தை ஏற்படுத்தியது. மன்னன் தேரினின்றும் கீழே குதித்து, தனது தலையை உடனடியாகச் சீவிவிடுமாறு, அமைச்சர்களிடம் கூறினான். 'தெரியாமல் நிகழ்ந்தது அமைதியடைக. தூபத்தைத் திருத்தி விடுவோம்' என்றனர் அமைச்சர்கள். பதினைந்து கற்களே சிதைவடைந்திருந்தன. அப்படியிருந்தும் அந்தத் தாதுகோபத்தை புனரமைக்க எல்லாளன் பதினையாயிரம் கஹாப்பணங்களைச் செலவிட்டதுடன் தன் தாயின் இறுதிக்கிரியைக்குச் செல்லாமல் தாது கோபம் புனரமைக்கும் வரைஅங்கேயே தங்கியிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இதே விடயம் இன வெறியை தூண்டுவதற்காக விகாரை மகாதேவியால் பயன்படுத்தப்படுவதையும் மகாவம்சம் நியாயப்படுத்தி கூறுகின்றது. அதில் விகாரைமகாதேவி தன் மகன் துட்டகாமினியிடம் 'எல்லாளன் அங்கு (அநுராதபுரத்தில்) பௌத்தவிகாரைகளை தேரால் இடித்து தரைமட்டமாக்கிறான்' என கூறுவதாக கூறப்பட்டுள்ளது.

கல்யாணி இராசதானியின் மன்னன் களனிதீசனின் மகளே மகாதேவியாவாள். பின்னாளில் இவள் விகாரை மகாதேவி என அழைக்கப்பட்டாள். விகாரை மகாதேவியின் தாயாரான களனிதீசனின் மனைவி சித்ததேவி களனிதீசனின் தம்பியாருடன் கள்ள உறவு கொண்டிருந்ததாக மகாவம்சம் கூறுகிறது. பின்னாளில் எல்லாளனின் தோல்விக்கு விகாரைமகாதேவியே மிக முக்கிய காரணமாகிறாள். எல்லாளனின் வலுவான கோட்டையொன்றிற்கு பொறுப்பாக விருந்த தளகர்த்தன் ஒருவனுடன் தன் உடலழகை காட்டி தவறான உறவுக்கு அழைத்துச் சென்று துட்டகாமினியின் சேனைகள் அக்கோட்டையை தாக்குவதற்கு வழிசமைத்துக் கொடுக்கிறாள். இதை மகாவம்சம் போர்த் தந்திரோபாயம் என வர்ணிக்கிறது. இவ்வாறு பெண்களின் ஆடவர்களுடனான தவறான உறவுகளும் மன்னர்கள் பல திருமணங்கள் செய்வதையும் நியாயப்படுத்தி கூறும் மகாவம்சம் பௌத்த மக்களை ஆரம்ப காலம் முதலே தவறாக வழி நடத்தியுள்ளதெனலாம்.

உருகுணையின் மன்னனான காக்கவண்ணதீசன் ஆட்சிபீடம் ஏறுவதற்காக உருகுணையின் தமிழ் இளவரசி அயிஸ்வரியாவை மணந்திருந்தான். பின்னர் பௌத்த இளவரசனே ஆட்சிக்கு வரவேண்டுமென்ற தன் ஆசையினால் விகாரைமகாதேவியினை மணந்தான். திருமணத்தின் பின் துட்டகாமினியைக் கருவில் கொண்டிருந்த போது தன் கணவனிடம் மூன்று ஆசைகளை வெளிப்படுத்தியிருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

1. பிக்குகளுக்கு வழங்கித் தானும் பருகக் கூடிய பெரிய தேன் அடை
2. எல்லாளனின் படைத்தளபதி ஒருவனின் தலையைச் சீவிய இரத்தம் தோய்ந்த வாளினைக் கழுவிய நீரை அருந்த வேண்டும்
3. அநுராதபுரத்தின் வாடாத தாமரைகளால் மாலை கட்டி அணிய வேண்டும்.

இந்த மசக்கை ஆசைகள் நிறைவேற்றப்பட்டன.

காக்கவண்ணதீசனினதும் விகாரைமகாதேவியினதும் மூத்த மகன் காமினி அபயன் ஆவான். இவன் தந்தையின் சொல்கேளாது இருந்தமையால் பிற்காலத்தில் துட்டகாமினி என அழைக்கப்பட்டான். துட்டகாமினி கருவிலிருந்தே தமிழருக்கெதிராக உருவாக்கப்பட்டவன். துட்டகாமினி ஒருமுறை கட்டிலில் கால்களை முடக்கிப்படுத்திருந்த போது தாய் ஏன் எனவினாவினாள், அதற்கு 'வடக்கே தமிழரும் தெற்கே சமுத்திரமும் நெருக்கும் போது எப்படியம்மா கால்களை நீட்டி படுக்கமுடியும்' என்றான். இவ்வாறு கருவிலிருந்தே இனவெறி யூட்டப்பட்டு வளர்த்த துட்டகாமினி தன் தந்தையின் மறைவிற்குப் பின் பெரும் சேனையுடன் எல்லாளனின் மீது படையெடுத்தான். நீண்ட நாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்த போர் எதிர்பார்த்த வெற்றியைத் தராததால் சலிப்படைந்த துட்டகாமினி, இறுதியில் வயது முதிர்ந்த நிலையிலிருந்த 'கிழப்புலி' எல்லாளனை தனிச்சமருக்கு வரும்படி வஞ்சக அழைப்பை விடுத்தான். எல்லாளனின் அமைச்சர்களோ 'உங்களின் தனிப்பட்ட வீரம், வெற்றி என்பவற்றுடன், தமிழ்க் குடிமக்களின் வீரம், வெற்றி, நல்வாழ்வு என்பனவற்றைத் தொடர்புபடுத்துவதால், இத்த னிச்சமர் தமிழ்க் குடிமக்களின் தோல்வியாக மாறிவிடும், மன்னா. வரலாறு உங்களை சிலவேளை மன்னிக்காது'. என்றனர். மன்னன் முகத்தில் வியப்பும் கவலையும் படர்ந்து பரவின. 'மக்களின் எதிர்காலத்தை நினைத்து தனிச்சமரை மறுப்பதா? அல்லது தமிழர் வீரத்திற்கேற்ப எதிரியின் அழைப்பை ஏற்று தனிச் சமர்புரிவதா?' மறுகணமே தெளிந்தான். மறுப்பதற்கு நாம் ஒன்றும் பேடிகளல்லர். கோட்டை வாயில் திறக்கப்பட்டது. இருசேனைகளும் சூழ கிழப்புலியும் இளவாத சிங்கமும் போரிட்டன. போர் நீண்டது. எல்லாளனின் போர்வலிமை விகாரைமகாதேவியை திகைப்படைய வைத்தது. நிலைமையை புரிந்த விகாரைமகாதேவி கூட்டத்திலிருந்து வெளியே வந்து 'மகாராஜா... எலாரா...' எனக் கூக்குரலிட்டாள். குரல் வந்த பக்கம் எல்லாளன் திரும்பினான். 'என்மகன்... மகாராஜா' கூப்பிய கரங்கள் கூறின. திகைத்து நின்ற துட்டகாமினி மறுகணமே தன் தாயின் 'யுத்த தந்திரத்தை' புரிந்து கொண்டான். எல்லாளனின் மார்பை வேல் துளைத்து நிலை கொண்டது. கி.மு. 101 ஆம் ஆண்டு, 44 ஆண்டு கால ஆட்சியின் அஸ்தமனத்துடன், எந்த மதத்தை போற்றிப் பாதுகாத்தானோ அம்மதத்தினாலேயே வெட்டி சாய்க்கப்பட்டான்.

---

**"உலகின் மிகப்பெரிய நூலகம்**
**காங்கிரஸ் நூலகம், வாஷிங்டன்"**
**The Library of Congress – Washington.**

**"இலக்கியத்தின் லிங்கன்" Lincoln of Literature என்று அழைக்கப்படும்**
**பிரபல எழுத்தாளர்**
**மார்க் ட்வைன் (Mark Twain) அமெரிக்க எழுத்தாளர்,**

**உலகிலேயே மிகவும் பழமையான புத்தகம் என மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட புத்தகம்**
**1600 வருடங்கள் பழமையான "Coptic Psalter" எனும் புத்தகமாகும்.**
**இது 490 பக்கங்கள் கொண்ட சங்கீதங்கள் (பைபிளின் ஒரு பகுதி) புத்தகமாகும்.**
**1984 இல் ஒரு 12 வயதுப் பெண்ணின் கல்லறையிலிருந்து கெய்ரோ நகரில் எகிப்தில்**
**கண்டு பிடிக்கப்பட்டது. இந்த புத்தகம் 17 க்கு 13 செ.மீ அளவில் இருந்தது.**

**உலகில் அதிகமான நாவல்களை எழுதிய எழுத்தாளர்**
**திருமதி மேரி ஃபாக்னர் (கேத்தலீன் லின்ட்சே) ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர்.**
**904 நாவல்கள் எழுதியுள்ளார். இவருக்கு அடுத்ததாக சிறுவர்களுக்கான துப்பறியும்**
**நாவல்கள் எழுதிப் புகழ் பெற்ற எனிட் ப்ளைடன், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்**
**சுமார் 800 புத்தகங்களை எழுதியுள்ளார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் இந்த எடிசன்...?

ஒரு நாள் பள்ளியிலிருந்து வந்த தாமஸ் அல்வா எடிசன் ஒரு கடிதத்தை தன் அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் என தன் ஆசிரியர் கூறியதாக சொல்லி, தன் தாயிடம் கொடுத்தான். அந்த கடிதத்தை அந்த தாய் கண்ணீரோடு சத்தமாக தன் மகன் கேட்கும் படி படித்தாள் " உங்கள் மகனின் அறிவுத் திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது அவனுக்கு கற்பிக்க திறமையான ஆசிரியர்கள் எங்களிடமில்லை அதனால் தயவு செய்து நீங்களே உங்கள் மகனுக்கு கற்பிப்பது நல்லது" இவ்வாறு அதில் எழுதப்பட்டிருந்ததாக எடிசனுக்கு வாசித்து காண்பித்தாள். பல ஆண்டுகளுக்கு பிறகு எடிசனின் தாயாரும் காலமாகி விட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் கண்டு பிடிப்பாளராகவும் ஆனார்.



ஒருநாள் தனது வீட்டின் பழைய சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த போது அவர் தன் அம்மாவிடம் முன்பொருமுறை பள்ளியிலிருந்து கொண்டு வந்து கொடுத்த கடிதம் எதேச்சையாக கண்ணில் பட அதை எடுத்து படித்துப் பார்த்தார். அதில் இப்படி எழுதியிருந்தது "மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்ப வேண்டாம்" இதைப் படித்த எடிசன் கதறி அழுதார் பின் அவரது நாட்குறிப்பேட்டில் கீழ்க்கண்டவாறு எழுதினார் " மூளை வளர்ச்சியற்ற தாமஸ் ஆல்வா எடிசன் தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனானான்". தன் பிள்ளைகள் மீதான நேர்மறையான எண்ணங்கள் அவர்களை மிக உயரத்துக்கு கொண்டு செல்லும் நாமும் எடிசன்களை உருவாக்க முடியும்..... குழந்தைகள் மனதில் தன்னம்பிக்கையை விதைப்போம்.!

---

**உலகின் சில நாடுகள் தங்கள் அரசாங்கப் பணிகளையும் முக்கிய நிகழ்வுகளையும் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தில் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளன அவற்றுள் சில**

1. நீலப் புத்தகம், (Blue Book) – பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
2. பச்சை புத்தகம் (Green Book) - இத்தாலி மற்றும் ஈரானின் அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்
3. சாம்பல் புத்தகம் (Gray Book) – ஜப்பான் மற்றும் பெல்ஜியம் நாடுகளின் அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
4. இளஞ்சிவப்பு புத்தகம் (Orange Book) – நெதர்லாந்து அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
5. வெள்ளைப் புத்தகம் (White Book) – ஜேர்மனி, போர்த்துக்கல், சீனா நாடுகளின் அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
6. மஞ்சள் புத்தகம் (Yellow Book) - ஃப்ரெஞ்ச் நாட்டு அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.

---

எந்த ஆன்மீகப் புத்தகம் பிட்மேன் சுருக்கெழுத்து முறையிலும் (Pitman's Shorthand Script) அச்சடிக்கப்பட்டது - பைபிள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அட அப்படியா...?



மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவை கொத்தும். கடல் ஆமை ஒரே சமயத்தில் 200 முட்டைகளிடும்.



தீக்கோழிகள் சுமார் 70 வருடம் வரை உயிர் வாழும். சுமார் 50 வருடங்கள் வரை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். தீக்கோழிகள் மணிக்கு 43 மைல் (70 km) வேகத்தினை விடவும் அதிகமாக ஓடக்கூடியவை.



பையா என்ற பறவை மனிதனைப் போல் விசிலடிக்கும். GrizzlyBear என்கின்ற கரடியினம் குதிரைகளுக்கு இணையான வேகத்தில் ஓடும் திறனுடையது.



அன்னப்பறவையின் உடலில் 25000 இறகுகள் வரை இருக்கும். நவரத்தினங்களில் ஒன்றான முத்தை உண்ணும் ஒரே உயிரினம் அன்னம் மட்டும் தான்.


தெள்ளுப்பூச்சி (Flea) அதன் உடலின் நீளத்தைப் போல் சுமார் 350 மடங்கு நீளத்தை தாண்டும். அதாவது ஒரு மனிதன் ஒரு கால்பந்து மைதானத்தை ஒரே நேரத்தில் தாண்டுவதற்கு சமம். நிலத்தில் பறக்காத பென்குயின் பறவைக்கு நீருக்குள் பறக்கும் சக்தி உண்டு. தேனீக்கள் இனம் 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே பூமியில் தோன்றி விட்டன. ஒரு தேனீ 75,000 கிலோமீற்றருக்கு மேல் பயணம் செய்து 500 கிராம் அளவுள்ள தேனைச் சேகரிக்கின்றது.



Great horned owl. இந்த ஆந்தை உடலில் உள்ள இறகுகளை எடுத்து விட்டு அதன் எடையைக் கணக்கிட்டால் அதன் இறகுகளை விட குறைவாகத்தான் இருக்குமாம்.



விலங்கினங்களில் cat fish இற்குத் தான் அதிக சுவை மொட்டுக்கள் உள்ளன. 27000 சுவை மொட்டுக்கள் உண்டு.



உலகில் உயிரினங்களிலேயே மிகப்பெரிய முட்டையினை இடுவது சுறா மீன் ஆகும்.



அறிவற்ற பறவை என்று எல்லோரும் நினைக்கும் வாத்துக்கள் உலகத்தில் உள்ள பறவை இனங்களின் அறிவு வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது முதல் நூறு இடங்களிற்குள் இருக்கிறது. வாத்து காலை நேரங்களில் தான் முட்டைகள் இடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் வாழும் பூச்சி இனங்களில் மிகவும் வினோதமான பூச்சி கரப்பான் பூச்சி தான். தலையே இல்லாமல் 9 நாட்கள் உயிரோடு வாழும் சக்தி கொண்டவை கரப்பான் பூச்சிகள். அதற்கு மேலும் அதனால் வாழ முடியும். ஆனால் எதுவுமே சாப்பிட முடியாததால் பசியால் வாடியே உயிர் துறக்கிறதாம். உலகத்தில் உள்ள விலங்குகளில் தாண்டி குதிக்க முடியாத மிருகம் யானை தான். புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ வரை பறக்கும் திறன் படைத்தது.

---

**மருத்துவக் குறிப்புக்களைத் தாங்கி வந்த பழமொழிகள் சில...**

1. ***'இளைத்தவனுக்கு எள்ளைக்கொடு;
கொளுத்தவனுக்குக் கொள்ளைக் கொடு'***

எள், கொள்ளு என்பவை இரண்டும் உணவு வகைகள். எள் என்பது நல்ல சத்துள்ள உணவாகும். மிகவும் மெலிந்த தேகம் கொண்டவர்கள் எள்ளை உட்கொண்டால் நன்கு உடல் பருமனாகும் என்றும், பருமனான உடலைக் கொண்டவர்கள் கொள்ளைத் உட்கொண்டால், உடல் மெலிந்து போதுமான அளவோடு இருக்கும் என்றும் இப்பழமொழி கூறுகிறது.

2. **ஆற்றுநீர் வாதம் போக்கும்; அருவி நீர் பித்தம் போக்கும்;
சோற்று நீர் இரண்டையும் போக்கும்**

மனிதர்களுக்கு ஏற்படக் கூடிய அனைத்து நோய்களுக்கும் அடிப்படையாக விளங்குவது வாதம், பித்தம், கபம் என்ற மூன்றுமே ஆகும். இவற்றுள் வாதம், பித்தம் தொடர்பாக ஏற்படும் நோய்களைப் போக்கும் வழிமுறைகளை இப்பழமொழி விளக்குகின்றது. ஆற்று நீரிலும், அருவி நீரிலும் உயர்ந்த தாதுப் பொருட்களும், மூலிகைச் சத்துக்களும், நிறைந்து காணப்படும். ஏனெனில், ஆற்றுப் படுகையிலும், அருவிக்கு நீர் வரும் மலைப் பகுதியிலும் மூலிகைச் செடிகள் நிறைந்து காணப்படும். மூலிகைகளின் மீது பட்டு இந்நீர் வருவதால் இத்தகைய குணமுடையதாக உள்ளது. வாதநோய் தொடர்பாக நரம்புக்கோளாறுகளும், பித்தநோய் தொடர்பாக மூளைக் கோளாறும் ஏற்படுகின்றன. இவற்றைக் குணப்படுத்த ஆற்று நீரும், அருவி நீரும் பயன்படுகின்றன. வாதம், பித்தம் இரண்டையும் சோற்று நீர் குணமாக்குகின்றது. இத்தகைய மருத்துவகுணம் கருதியே நாட்டுப்புற மக்கள் காலையில் எழுந்ததும் பழைய சோற்று நீரை அருந்துகின்றனர்.

3. **'வேலம் பட்டை பித்தத்தைப் போக்கும்;
ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்'**

வேலம்பட்டையை இடித்து ஒரு குவளை நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி அரைக் குவளையாக்கித் தினமும் காலை வேளை குடித்துவர பித்த நோய்களான, வயிற்றுப்புண், பித்தமயக்கம், கைகால் குடைச்சல் குணமாகும். ஆலமரத்தின் பட்டையைக் குடிநீராக்கி குடித்து வர வாய்ப்புண், வாய்நாற்றம், சிரங்கு, கரப்பான்படை ஆகியன விலகும் என்கிறது பழமொழி.

---

**"அரசியல், அரசாங்கம் ஆகியவை பற்றிய மிகப் பழமையான மற்றும் சிறந்த புத்தகம் ஷகௌண்டில்யர் / சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரம்"**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சார்ல்ஸ் பாபேஜ்



**கணினியின் தந்தை எனக் கூறப்படும்** Charles Babbege **(1791 – 1871) பிரித்தானிய கணிதவியலாளர், கண்டுபிடிப்பாளர், இன்றைய கணினிகளில் பயன்படுத்தப்படும் எந்திர கணக்கியல் இயந்திரங்களை கண்டு பிடித்தவர். 1837 இல் முதன் முதலில் முழுமையான செய்நிரல் கணினியை** (Programmable Mechanical Computer) **வடிவமைத்தவர்.**

### இரண்டாவது தலைமுறை கணினி

*கி. பி.* 1959 -1964 *வரையிலான காலப்பகுதியில் அறிமுகப்படுத்திய கணினிகள் இரண்டாம் தலை* முறையைச் (Second Generation) சேர்ந்ததாகும். இக்காலப்பகுதியில் அமைக்கப்பட்ட கணினிகளுக்கு திரிதடையம் (Transistor) பயன்படுத்தப் பட்டது. Transistor ஆனது Vacuum Tube ஆனது முற்றிலும் மாறுபட்ட தொழில் நுட்பத்தை கொண்டிருந்தது. இது அளவில் சிறியதாகவும், வேகமாகவும், நம்பகமானதாகவும், குறைந்த விலைகளிலும் தயாரிக்கக் கூடியதாகவும் இருந்தது. இதனை Jhon Bardeen, William Shockley, Walter Brattain என்பவர்கள் கண்டுபிடித்திருந்தனர். இந்தக் கணினிகளில் இயந்திர மொழி (Machine Level Language) மட்டுமன்றி assembly language உம் பயன்படுத்தப்பட்டன.




Jhon Bardeen



William Shockley



Walter Brattain



### மூன்றாவது தலைமுறை கணினி

*கி. பி. 1965 - 1971* வரையிலான காலப்பகுதிகளில் அறிமுகப்படுத்திய கணினிகள் மூன்றாம் தலைமுறையைச் (*Third Generation*) சேர்ந்ததாகும். இக்காலத்தில் அறிமுகப்படுத்திய கணினிகளில் ஒருங்கிணைச் சுற்று (*Integrated Circuit*) எனும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.


இக்கணினிகளில் மிக அதிகமான திரிதடயதிற்கு (Transistor) பதிலாக ஒரு ஒருங்கிணைச் சுற்று (*Integrated Circuit*) பயன்படுத்தப்பட்டது. இதனால் கணினியின் அளவு சிரியதாக்கப்பட்டதுடன் மின்சார பாவனையளவும் குறைக்கப்பட்டது.

ஒருங்கிணைச் சுற்று (*Integrated Circuit*) ஆனது செயல் திறன் அதிகமானதாகும். இன்றைய இலத்திரனியல் சாதனங்களில் ஒருங்கிணைச் சுற்று (*Integrated Circuit*) பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இதனை ராபர்ட் நய்ஸ் (*Robert Noyce*) உம் ஜாக் கில்பி (*Jack Kilby*) உம் இணைந்து கண்டுபிடிதிருந்தனர். மேலும் இந்த தலை முறைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் *High Level Language* என்ற நவீன பயன்பாட்டு மொழி அறிமுகம் செய்யப்பட்டது.






Robert Noyce



Jack Kilby

**நான்காம் தலைமுறை கணினி**

கி. பி. *1971* முதல் தற்போது வரை உள்ள கணினிகள் அனைத்தும் நான்காம் தலைமுறையைச் (Fourth Generation) சேர்ந்ததாகும். இதில் நுண்செயலி (Microprocessor) எனப்படும் தொழில்நுட்பம் பயன்படுத்தப் படுகின்றது. இன்டெல் (*Intel*) நிறுவனத்தில் பணி புரிந்த டேட் ஹோப்ப் (Ted Hoff) என்பவர் தான் இதனைக் கண்டுபிடித்தார். இது ஒருங்கிணைச் சுற்றை (Integrated Circuit) விட மிக அதீத திறன் கொண்டதாக நுண்செயலி (*Microprocessor*) விளங்குகின்றது.





Ted Hoff

**ஐந்தாம் தலைமுறை கணினி**

ஐந்தாம் தலைமுறை என்பது புதிய தொழில்நுட்ப முறையிலான கணினிகளைக் குறிக்கின்றது. இது இன்றைய அதி நவீன கணினிகளைக் காட்டிலும் இவை சிறந்தவையாக காணப்படும். இவற்றால் சுயமாக சிந்திக்க முடியும். இவற்றிக்கு Keyboard, Mouse, போன்ற பாகங்கள் அவசியமில்லை. இவற்றின் *Monitor* தொடு தன்மை (Touch *Screen*) உடையன.



இவ்வகையான கணினிகளை Surface *Computer* என அழைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணினி சார்ந்த பொது அறிவுத் தகவல்கள்

1. (CD) குறுந்தகட்டை கண்டுபிடித்தவர் - ஜேம்ஸ் ரஸ்ஸல்.
2. (WWW) World Wide Web – எனும் இன்டர்நெட் தாரக மந்திரத்தை உருவாக்கியவர் திமோத்தி ஜான் பெர்னர்ஸ்-லீ.
3. "Your Potential Our Passion" என்ற முத்திரை வாக்கியம் மைக்ரோசாப்ட் நிறுவனத்தை சார்ந்ததாகும்.
4. "புராஜெக்ட் சிகாகோ" என்பது விண்டோஸ் கண்டுபிடிப்பின் ரகசியப் பெயராகும் கிரிக்கெட் பந்தின் வேகத்தை அளக்க ஹாக் ஐ (Hawk Eye) என்ற பிரபல ஐ டி தொழில்நுட்பம் பயன்படுத்தப் படுகிறது.
5. C++ எனும் கணினி மொழியை வடிவைமத்தவர் - பியான் ஸ்ட்ரூ ஸ்டெரெப்.
6. Computer Tabulating and recording Company என்பது தான் இப்போது ஐ.பி.எம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
7. Power by Intellect Driven by Values - என்ற முத்திரை வாக்கியம் பிரபல இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் வாக்கியமாகும்.
8. Uniform Resource Location என்பதன் சுருக்கம் தான் URL முகவரியாகும் மைக்ரோபுராசஸர் என்பது தான் கணியின் மூளை என்றழைக்கப்படுகிறது.
9. Vital Information Resources Under Seas எனும் கணினி வார்த்தையின் சுருக்கம் தான் VIRUS என்ற பிரபல வார்த்தையாகும் .
10. World wide Web எனபதன் ஆரம்ப கால பெயர் - என்க்வயர்.
11. ஆப்பிள் கணினியை ஆரம்பித்தவர் - ஸ்டீவ் வோஸ்னியாக்.
14. இரண்டு முறை நோபல் பரிசு (Nobel Price) பெற்ற ஜான் பார்டீனின் முக்கிய கண்டுபிடிப்பு தான் டிரான்சிஸ்டர்.
15. இன்டர்நெட்டின் தந்தை என அழைக்கப்படுபவர் - வில்டன் ஸர்ஃப்
16. இன்டல் கம்பெனி நிறுவனர்கள் – கார்டன் மூர் மற்றும் ராபர்ட் நாய்ஸ் கணினி செஸ் விளையாட்டை கண்டுபிடித்தவர் – ஸ்ட்ரிக் ஜி.பிரின்ஸ்.
17. உலக கணினி எழுத்தறிவு தினம் டிசம்பர் மாதம் கொண்டாடப்படுகிறது.
18. Center for Development of Advanced Computing என்பதன் சுருக்கம்தான் C-DAC எனப்படுவதாகும்.
19. உலகின் முதல் கணினி விளையாட்டு Space War என்ற விளையாட்டாகும்.
20. விலை குறைந்த (ரூ.4000) PC கணினி உருவாக்கிய இந்திய நிறுவனம் நொவாட்டியம் என்ற நிறுவனமாகும்.
21. உலகின் முதல் மடிக்கணினி (First Laptop in the world) - டைனாபுக் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.
22. உலகின் முதல் மைக்ரோபுராசஸர் இன்டெல் (World First Micro Processor) என்பதாகும்.
23. கணினி அறிவியலின் தந்தையார் - ஆலன் டூரிங்.
24. கணினி மவுஸை (Computer Mouse) கண்டுபிடித்தவர் – மக்ளஸ் எங்கன்பர்ட்.
25. கணினி வடிவை சிறிதாக்கிய IC சிப்பைக் கண்டுபிடித்தவர் – ஜாக் கில்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. கணினி வன் தட்டின் *(HARD DRIVE)* தந்தை என்றழைக்கப்படுபவர் – அலன் ஷூகர்ட்.
27. கணினியின் முக்கிய சர்க்யூட்டுகள் அமைக்கப்பட்டுள்ள பகுதி – மதர் போர்ட்
28. கணினியின் Ether NET ஐ கண்டுபிடித்தவர் – ராபர்ட் மெட்காஃப்.
29. கூகுள் தேடுபொறியை உருவாக்கியவர்கள் - லாரிபேஜ், ஸ்ர்ஜி ஃப்ரின்.
31. கேமரா மொபைல் ஃபோனை *(Camera mobile phone)* கண்டுபிடித்தவர் – ஃபிலிப் கான்.
32. தனது 20 ஆம் வயதிலேயே லினக்ஸ் உருவாக்கிய விஞ்ஞானி - லினஸ் தோர்வாட்ஸ்.
33. பால் பிரெயினார்ட் என்பவை இந்தியாவின் சூப்பர் கம்யூட்டர் *(Super Commuter)* என அழைக்கப்படுகின்றன.
34. பிரபல விக்கிபீடியா வெப்சைட்டை உருவாக்கியவர் - ஜிம்மி வேல்ஸ்.
35. பிரபலமான *(Dos)* எனப்படும் கணினி நிரலை உருவாக்கியவர் - டிம் பாட்டர்ஸன்.
36. பிரபலமான பேஜ் மேக்கர் எனும் பப்ளிஷிங் சாஃப்ட்வேரை *(Publishing Software)* உருவாக்கியவர் - ஃபால் பிரெயினார்ட்.
37. பெண்டியம் புராசஸர்களின் தந்தை *(The father of the Pentium processors)* எனப்படும் இந்திய விஞ்ஞானி - வினோத் தாம்.
38. மிக வேகமான சூப்பர் கணினிகள் "ப்ளூ ஜூன்" என்றழைக்கபடுகின்றன.
39. முதல் மைக்ரோபுராசஸரை உருவாக்கியவர் – டெட் ஹோப்.
40. மைக்ரோபுராசஸரை நினைவகத்தோடு *(Memory)* இணைக்கும் ஒயர்கள் *Bar* என்ற பெயரில் அழைக்கபடுகின்றன.
41. லோட்டஸ் *1-2-3* எனும் மொழியை கண்டுபிடித்தவர் - மிச் கபோர்.
42. *Hot Mail* ஐ உருவாக்கிய இந்திய ஐ.டி விஞ்ஞானி - ஸபீர் பாட்டியா.
43. ஹெர்பர்ட் சைமன் துவங்கிய கணினி அறிவியல் பிரிவின் கிளை தான் ஆர்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் *(artificial intelligence)* என்பதாகும்.

---

**உலகிலேயே அச்சடிக்கப்பட்ட மிகச்சிறிய புத்தகம்**

1. Old King Cole – ஒரு சிறுவர் புத்தகமாகும். 1 X 1 மி.மீ (0.04 அங்குல அகலம்) 1985 இல் ஸ்ட்ராத்க்ளைட், ஸ்கொட்லாந்தில் வெளிவந்தது. இதன் சிறப்பு என்னவெனில் இதன் பக்கங்களை திருப்ப ஒரு ஊசி முனையைப் பயன்படுத்த வேண்டும்.

2. The World's Smallest Book என்ற புத்தகம் 2.4 X 2.9 மி.மீ ஜோஷ்வா ரிச்செர்ட் என்ற ஜெர்மனியரால் வெளியிடப்பட்டது. இதைப் படிப்பதற்கு ஒரு பூதக்கண்ணாடி பயன்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவம்

திரு ம.பிரபாகரன்,
நூலகர்.

பொதுவாக முகாமைத்துவம் என்ற பதம் மேலாட்சி, மேலாண்மை, செயலாட்சி, நிர்வாகம் என்ற பல பெயர்களில் உபயோகிக்கப்பட்டாலும் அதன் உண்மையான, பொரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதம் முகாமைத்துவம் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை முகாமைத்துவம் என்பது ஒரு கலையாகவே கருதப்பட்டது. தனிப்பட்டவர்களின் செயல் திறமாக, சிலருக்கே கைவந்த ஒரு கலையாக எண்ணப்பட்டது. ஆனால் முகாமைத்துவம் ஒரு கலையன்று; அது அறிவியல் துறை சார்ந்தது. தான் என்ற நிலை அண்மையில் உறுதி செய்யப்பட்டது. இருப்பினும் முகாமைத்துவம் அறிவியல் துறை சார்ந்தது என்பதை ஏற்றுக் கொள்ளாத பலர் இன்றும் உள்ளனர் என்பதும் அதற்கு அவர்கள் கூறும் காரணமும் ஓரளவு பொருத்தமாகவே உள்ளதென்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

முகாமைத்துவம் சிலரின் பார்வையில் கலைத்திறனாகவே மிளிர்கின்றது எனினும் எண்ணற்ற நிர்வாகிகள் தேவைப்படும் நவீன காலத்தில், பயிற்சியின் மூலம் நிர்வாகிகளை உருவாக்கிக் கொள்ள உதவுவது முகாமைத்துவ அறிவியல் முறையே எனலாம்.

வீட்டை நிர்வகிக்கும் இல்லத்தரசி முதற்கொண்டு நாட்டை நிர்வகிக்கும் அரசு வரை முகாமைத்துவம் இன்றியமையாததாகின்றது. இந்த வகையில் ஒரு சமூக சேவையை அடிப்படையாகக் கொண்ட நூலகமும் இதற்கு விதி விலக்கல்ல. சுருங்கக் கூறின், எத்துறையாயினும், எத்தொழிலாயினும், பணியாளர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்படும் போது, அங்கெல்லாம் முகாமைத்துவம் என்ற செயல்முறை தோன்ற வேண்டியுள்ளதுடன் அதுவே தவிர்க்க முடியாத ஒரு செயற்கருவியாக உருவெடுப்பதையும் நாம் காணலாம்.

முகாமைத்துவக் கொள்கைகளை செம்மைப்படுத்தவும், விரிவு படுத்தவும், ஒவ்வொரு நாடும் முயன்றாலும், முகாமைத்துவத் துறையின் இத்துணை வளர்ச்சிக்கு அமெரிக்க நாடு தான் காரணம் என்றால் அது மிகையாகாது. டேலர் *Taylor* கில்பெர்த் *Hilberth* மேரி பார்க்கர் ஃபாலட் *Parker and Ballet* போன்ற வல்லுநர் இத்துறையை விரிவு படுத்தவும், செம்மைப்படுத்தவும் பெரிதும் உதவினர். இவ்வளர்ச்சியின் வாயிலாக முகாமைத்துவ கொள்கைகள் உலகெங்கும் பரவி பல்வேறு நிறுவனங்களாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

## முகாமைத்துவம் - வரைவிலக்கணம்

செய்து முடிக்க வேண்டிய எந்தப் பணியையும் அதற்குரிய பணியாளர்களைக் கொண்டு செய்து முடிப்பதே முகாமைத்துவம் ஆகும். பொதுவாக முகாமைத்துவம் என்ற சொல்லுக்கு சரியான வரைவிலக்கணம் இதுவரை கொடுக்கப்படவில்லை என்றே கூறலாம். அப்படிக் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் கூட எல்லோராலும் ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படவில்லை. ஏனெனில், முகாமைத்துவம் என்பது தனிப்பட்ட ஒரு முகாமையாளர் *(Manager)* புரியும் பணிக்கு மேற்பட்டதாகும். முகாமைத்துவம் ஒரு செயற்பாங்கு. அதன் மூலம் ஒரு நிறுவனத்தின் சிறந்த நோக்கங்களை முகாமையாளர் அந்நிறுவனத்தின் பணி புரியும் பணியாளர்களின் பணிகள் மூலம் பெறுகின்றார். எனவே, எந்தவொரு நிறுவனம் தனது பணியாளர்களின் ஒத்துழைப்பின் மூலம் தன்னுடைய முக்கிய நோக்கங்களை சிறிதும் மாற்றமின்றி பெற விரும்புகின்றதோ அந்நிறுவனத்திற்கு முகாமைத்துவம் அவசியமாகின்றது. முகாமைத்துவக் கோட்பாடுகளைத் தொழில் நிறுவனங்கள் மட்டுமன்றி, தொழில் சார்பற்ற சாதாரண நிறுவனங்களும் அரசு துறைகளும் சமூக சேவை கல்வி நிறுவனங்களும் கடைப்பிடிக்க வேண்டும். இதையே முன்னாள் அமெரிக்க குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் அவர்கள், 'முகாமைத்துவக் கோட்பாடுகளைக் கடைப்பிடியாத ஒரு அரசு மணலால் கட்டப்பட்ட வீடு போன்றது' எனக் குறிப்பிட்டார். முகாமைத்துவத்தின் சிறப்புத் தன்மைகளை விளக்கும் வகையில் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள ஓரிரு வரைவிலக்கணங்களை நோக்குவோம்.

'ஒரு குறிப்பிட்ட மனிதக் குழுவினுடைய நோக்கங்களை முடிவு செய்து, அலசியாராய்ந்து, அதனைச் செயற்படுத்துவதன் மூலம், அந்நோக்கங்களை அடையும் நுணுக்கமே முகாமைத்துவம் ஆகும்.'

**பீட்டர்சன், பிளாமன்.**

'நிறுவனத்தின் பணியாளர்களையும், வளங்களையும் கொண்டு தகுந்த திட்டங்கள் மூலமாகவும், ஒழுங்கமைப்பு மூலமாகவும், உரிய ஊக்குவிப்பு மூலமாகவும், தகுந்த கட்டுப்பாட்டின் படியும் அந்நிறுவனத்தின் நோக்கங்களை அறுதியிட்டு அவற்றை அடையவிழையும் ஒரு தனிப்பட்ட செயல்பாங்கே முகாமைத்துவமாகும்.'

**இராம முத்தையன்.**

## நூலக முகாமைத்துவம்

நூலகம் என்பது சேவை ரீதியானதும் சிக்கல் நிறைந்ததுமான ஒரு அமைப்பாகக் கருதப்படுகின்றது. தொழில் நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக மனிதனுடைய அறிவு விரிவடைந்தால், அந்த அறிவுப் பசியைப் போக்குவதற்கு நூலகம் ஒத்துழைப்பு நல்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நூலகத்தில் கடமையாற்றுகின்ற ஊழியர்களும் உயர் கல்வித் தரம் Academic Background அல்லது கல்வித் தரம் உடையவர்களாக Educational background இருப்பதால் நூலக அமைப்பின் முகாமைத்துவப் பாங்கு மற்றைய தொழில் ரீதியான அமைப்பில் இருந்தும் வேறுபட்ட தொன்றாக உள்ளது. முகாமைத்துவம் என்ற பதம் குறிக்கும் வரைவிலக்கணங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் யாவும் எல்லா வகையான நிறுவனங்களுக்கும் பொதுவானவையாக இருப்பதனால் இவை சமூக சேவையை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படும் நூலகத்துக்கும் பொருத்தமானவையாக இருப்பதில் ஆச்சரியமில்லை. இந்த வகையில், நூலக முகாமைத்துவம் என்ற பதத்திற்கு அளிக்கப்படும் வரைவிலக்கணங்களும், விளக்கங்களும் கூட பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவக் கோட்பாடுகளை General management Principles அடிப்படையாகக் கொண்டவையே.

இதன் அடிப்படையில் நூலகவியல் கலைச்சொல் அகராதியில் நூலக முகாமைத்துவம் என்ற பதத்திற்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நூலக சேவையில் இருந்து மிக உயர்ந்த நன்மையையும் பயன்பாட்டையும் பெறுவதற்கு மேற்கொள்ளப்படக் கூடிய முன்னுரிமைகளை ஒழுங்குபடுத்துதல், அலுவலர்களை ஊக்குவித்தல், நூலக வளங்களைப் பாதுகாத்தல், செயற்பாடுகளை மதிப்பிடுதல் முதலிய தொழில் நுட்பங்களின் செயல்திறன் நூலக முகாமைத்துவம் எனப்படும்.'

எனவே நூலகத்தில் பணியாற்றும் சகல அலுவலர்களையும் ஒருங்கிணைத்து, தகுந்த திட்டமிடல், ஒழுங்கமைப்பு, ஊக்குவிப்பு, கட்டுப்பாடு என்பவற்றினூடாக நூலகத்தை பயன்படுத்தும் ஒவ்வொரு வாசகனையும் திருப்திப்படுத்தும் மிக உயர்ந்த நோக்கத்தை அடைய முயற்சி செய்யும் ஒரு செயற்பாடே நூலக முகாமைத்துவம் எனக் கூறலாம்.

## நூலக முகாமைத்துவம் - தோற்றமும் வளர்ச்சியும்

பண்டு தொட்டே முகாமைத்துவம் மனித நடவடிக்கைகளை செம்மையாக நடத்திட உறுதுணையாக இருந்திருக்கின்றது. பிறரை வேலைக்கு அமர்த்தி, தாம் விரும்பிய திட்டங்களை நிறைவேற்றும் போதெல்லாம், சமூகத் தலைவர்களும், குழுத் தலைவர்களும், நிறுவனத் தலைவர்களும், தொழில் முதலாளிகளும் முகாமைத்துவம் என்ற கருவியையே கையாள வேண்டியிருக்கின்றது. பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க முகாமைத்துவத்தில் சிக்கல்களும் நுண்முறைகளும் வளரத் தொடங்கின. இந்த வகையில் நூலக முகாமைத்துவத்தின் ஆரம்ப காலத்தையும் நோக்குதல் நன்று.

ஆதி காலத்தில் நூலகம் என்பது வெறுமனே நூல்களைப் பாதுகாத்து வைக்கும் களஞ்சியம் எனப்பட்டது. நூல்கள் பாவனைக்கு உட்படுத்தப்படுவதைப் பற்றிய உணர்வு நூலகருக்கோ அவரைச் சார்ந்தவர்களுக்கோ இருக்கவில்லை. அது மட்டுமன்றி நூல்கள் யாவும் அலுமாரிகளில் வைத்துப் பூட்டப்பட்டோ அல்லது மேசையுடன் சங்கிலி மூலம் பிணைக்கப்பட்டோ காணப்பட்டன. ஆனால் மனிதனது சிந்தனா சக்தி வளரத் தொடங்கவும் நூல்களைப் பற்றிய அறிவும் அவற்றைப் பாவிப்பதற்குரிய உணர்வும் மனிதனிடத்தில் வளர்ந்த போது தான் அலுமாரிகளில் வைத்துப் பூட்டப்பட்டிருந்த நூல்களைத் திறந்த தட்டுகளில் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்துடன் வாசகர் நூல்களைத் தாமே தெரிவு செய்யவும் அதனை இரவல் எடுத்துச் செல்லவும் முடிந்தது. எனினும் நூலகர் வெறுமனே இரவல் கொடுத்து மீளப் பெறுதலையே கடமையாகக் கொண்டிருந்த நிலையில் நூலக முகாமைத்துவத்தின் அவசியம் அங்கு உணரப்படவில்லை. தற்காலத்தில் நூலகமானது சமுதாய, கலை, கலாச்சார வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற ஒரு நிறுவனமாக விளங்குவதுடன் வாசகர்களுக்கு வேண்டிய சகலவிதமான சேவை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு வாய்ந்த நிறுவனமாக இருக்கின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மனிதனின் சிந்திக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் அதிகரித்ததுடன் நவீன நுண்ணிய ஆய்வுகளையும் பரிசோதனைகளையும் அவன் மேற்கொண்டதன் விளைவாக நூல்களின் எண்ணிக்கையிலும் தரத்திலும் மிகப்பெரியளவிலான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

ஒரு விடயத்தைப் பற்றி பல்வேறு விதமான நூல்கள், அறிக்கைகள், ஆய்வுக்கட்டுரைகள், பரிசோதனை முயற்சிகள் வெளியாகத் தொடங்கியதுடன் நூல்களைத் தட்டுக்களில் பிரித்து வகைப்படுத்தி அடுக்குவதிலும் அதனை வாசகர் எந்த சிரமமுமின்றித் தெரிவு செய்து உபயோகிப்பதிலும் சிக்கல் ஏற்படத் தொடங்கியது. அத்துடன் வாசகரிடமிருந்து வெளிப்படும் பல்வேறு வகையான வினாக்களுக்கு விடையளிக்கும் பொறுப்பும் நூலகருக்கு ஏற்பட்டது. எனவே தொழில்நுட்ப வளர்ச்சி நூலகத்துறையில் அளப்பரிய மாற்றத்தை ஏற்படுத்தியதுடன் நூலக முகாமைத்துவத்தின் அவசியத்தையும் உணர வைத்தது. நூலகம் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு (பகுப்பாக்க, பட்டியலாக்கப்பகுதி, பருவ இதழ் பகுதி, நூல் கொள்வனவுப்பகுதி, அரசாங்க ஆவணப்பகுதி, வாசகர் சேவைப்பகுதி போன்ற) செயல்படத் தொடங்கவும் நூலக அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கவும் நிர்வாகத்தை திறம்பட நடாத்துவதில் நூலகர் சிரமப்பட வேண்டியிருந்தது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் தான் மற்றைய தொழில்துறைகளைப் போன்று முகாமைத்துவக் கோட்பாடுகளை நூலகத்துறைக்கும் பயன்படுத்த முடியும் என்ற உணர்வு ஏற்பட்டது.

இதனடிப்படையில் நூலக முகாமைத்துவத்தின் வளர்ச்சியை நூலகங்களில் கண்டு கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் வாசகரின் தேவையைப் பூர்த்தி செய்யவும், நூலகத்தின் நோக்கங்களையும் கொள்கைகளையும் அமுல்படுத்தவும் நூலக முகாமைத்துவம் மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

## நூலக முகாமைத்துவத்தின் சிறப்புத் தன்மைகள்

ஒவ்வொரு முகாமைத்துவத்துக்கும் ஒரு குறிப்பிட்ட நோக்கம் இருத்தல் வேண்டும். அந்நோக்கம் வெளிப்படையாகக் குறிப்பிடப்படலாம் அல்லது குறிப்பிடப்படாமலும் இருக்கலாம். இந்த வகையில் நூலக முகாமைத்துவத்திற்கும் ஒரு குறிப்பிட்ட நோக்கம் இருத்தல் வேண்டும். நூலக முகாமைத்துவத்தின் வெற்றி, அது தனது நோக்கங்களை எந்தளவிற்கு அடைந்து கொள்கின்றது என்பதன் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப் படுகின்றது. அன்றி நூலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் எண்ணிக்கையில் அல்ல. தேவைப்படும் அலுவலர்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளாது, இருக்கின்ற அலுவலர்களைக் கொண்டு சிறந்ததொரு சேவையை ஒரு நூலகமானது அதனுடைய வாசகர்களுக்கு வழங்க முடியுமானால் அது வெற்றி என்றே கூறலாம்.

மனிதனுடைய முழுத் திறமையையும் பயன்படுத்துவது முகாமைத்துவம் ஆகும். ஒரு நூலகர் சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் நூலகத்தில் பணி புரியும் அலுவலர்களை அவர்கள் ஆண்களாயினும் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களாயினும் சரி நன்முறையில் ஊக்குவித்து அவர்களது திறமையைப் பெருக்கிச் செயலாற்றும்படி செய்ய முடியும்.

ஒரு நூலகத்தின் நோக்கங்கள் அந்நூலகத்தில் பணி புரியும் சகலரதும் ஒருங்கிணைந்த பணிகளின் மூலம் தான் அடையப்பட முடியுமே தவிர, தனிப்பட்ட அலுவலர் ஒருவரது பணியால் அல்ல. இவ்விதம் நூலக அலுவலர்களை ஒரு குழுவாக ஒருங்கிணைப்பதன் மூலம் அலுவலர்களின் திறன் மிகுதியடைந்து பணிகள் திறமையாகச் செய்யப்படுகின்றன. எனவே தான் நூலக முகாமைத்துவம் அலுவலரின் ஒருங்கிணைந்த குழுவிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

ஒரு நூலகத்தின் பணிகள் எல்லாவற்றையும் அந்த நிறுவனத்தின் தலைவரே செய்வதென்பது இயலாத காரியம். எனவே, நூலகர் தானே நேரடியாகச் செயற்படாது அப்பணிகளை பிற அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் செம்மையாகச் செய்யும்படி இயக்குவித்தல் வேண்டும். ஒரு நூலகரினது வெற்றி, பிற ஊழியர்களின் மூலம் நூலகத்தின் நோக்கங்களை அவர் எந்த அளவில் அடைகின்றார் என்பதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது எனக் கூறலாம்.

ஒரு பணியை நூலகர் தாமே செய்வதற்கும் பிறரை செய்வதற்குத் தூண்டுவதற்கும் அதிக வேறுபாடு உள்ளது. ஒரு குறிக்கப்பட்ட இலக்கை அடைவதற்கு தொழில்நுட்ப அறிவு தேவை எனினும் அது முகாமையாளர்களுக்கு இன்றியமையாததாகக் கருதப்படுவதில்லை. தங்களின் கீழ் பணியாற்றும் இதர அலுவலர்களின் தொழில்நுட்ப அறிவை செம்மையான முறையில் பயன்படுத்த வேண்டியது இவர்களின் கடமையாகும். எனவே சிறந்த முகாமைத்துவம் என்பதும் பிறருடைய திறமையை உரிய முறையில் பயன்படுத்துவதேயாகும்.

## நூலக முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

நூலக பாவனைக்காக ஒவ்வொரு வாசகனிடமிருந்தும் அறவிடப்படும் ஒவ்வொரு ரூபாவிற்குமான மிக உயர்ந்த பங்களிப்பை வழங்குவதன் மூலம், ஒரு நூலகமானது வாசகனைத் திருப்திப்படுத்தும் பொறுப்பு வாய்ந்ததாகவுள்ளது. நூலகமானது வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு நிறுவனமாகவிருப்பதனால் அதற்கு வருடாந்தம் மேலதிக நிதி தேவைப்படுகின்றது. நூலகத்தின் மேலதிக நிதித் தேவைக்கான காரணத்தை ஒவ்வொரு வாசகனும் அறிந்து கொள்வதில் விருப்பமுடையவனாக இருக்கலாம். அவன் மட்டுமன்றி அனுபவம் வாய்ந்த நூலகத்துடன் தொடர்புள்ள அதிகாரிகள் கூட வெறுமனே புகழ் மாலைகளை விடத் தொகை ரீதியாகவும் உண்மையானதுமான தரவுகளிலேயே கூடிய கவனம் செலுத்துகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் விஞ்ஞான முகாமைத்துவம் என்பது ஒரு நூலகர் மேலதிக நிதியை அவர் விரும்பியவாறு பெறுவதற்குரிய உண்மையானதும், தொகை ரீதியானதுமான தரவுகளை வழங்கக் கூடிய அறிவை, அபிவிருத்தி செய்வதற்கு உதவுகின்றது எனலாம்.

வழமையான வேலை முறைகளைச் சிறப்பாகச் செய்யக் கூடிய திறமையை அதிகரிப்பதற்கு நூலக முகாமைத்துவம் உதவுகின்றது. சாதாரணமாக ஒரு நூலகத்தினுடைய பெரும்பாலான வேலைகள் இயந்திரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையுடையதாகவும் செய்வதையே திரும்பச்செய்தல் (ஒப்பித்தல்) என்ற தன்மை உடையதாகவும் இருப்பதுடன் அவை தொகை ரீதியான ஆய்வுக்கு வழிப்படுத்தப்படக் கூடியதாகவும் இருக்கின்றன. உதாரணமாக, கட்டளை அனுப்புதல் *Ordering* பட்டியலாக்கம், அட்டைகளைக் கோவைப்படுத்தல், நூல் கட்டுதல், சுழற்சி *Circulation* நூல் இருக்கைகளில் நூல்களை முறையாக வைத்தல் என்பன இதற்குள் அடங்கும். நூலக முகாமைத்துவம் என்பது இவ்வேலைகளை சிறப்பாக செய்யக் கூடிய ஆற்றலை அதிகரிக்க உதவுகின்றது.

விஞ்ஞான முகாமைத்துவம் என்பது, நவீன வேலைப் பகுப்பாக்கத்தின் திறவுகோலாகக் கருதப்படும் வேலைப்பகுப்பாய்வை *Work analysis* தருகின்றது. இதன் விளைவாக நூலகர் ஒரு அலுவலரிடமிருந்து எதை எதிர்பார்க்க முடியும். எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதைப் புத்தி சாதுரியத்துடனும் தெளிவுடனும் அறிந்து கொள்ள உதவுகின்றது.

விஞ்ஞான முகாமைத்துவம் ஒரு நூலகர் நூலகத்தின் நிதி முறையை சிறப்பாகக் கொண்டு நடாத்த உதவுகிறது. ஒவ்வொரு பிரிவுக்குமுரிய தொழிற்பாடுகளுக்குமான நிதித்தேவையினை அவர் நன்கு அறிந்தவர் என்பதால் அவர் புத்தி சாதுரியத்துடன் வீண் விரயங்களைத் தவிர்க்கக் கூடியவராக இருப்பதுடன் சேவைப் பயன்பாட்டை அதிகரிக்கவும் அதன் மூலம் தன் வாசகருக்கு பூரண திருப்திகரமான சேவையை வழங்குவதற்கும் நூலக முகாமைத்துவம் உறுதுணையாக உள்ளது எனலாம்.

நூலகருக்கும் அவரின் கீழ் கடமையாற்றும் இதர அலுவலர்களுக்கு மிடையேயான கருத்து வேறுபாடுகளையும் சிக்கல்களையும் களைந்து, உளமார்ந்த உறவினை உருவாக்க முகாமைத்துவம் அவசியமாகின்றது.

முகாமைத்துவக் கோட்பாடுகள் வளர்ச்சியடைந்ததன் காரணமாக நூலகத்தில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு உரியமுறையில் பயிற்சி அளிக்கப்படுவதனால் நூலக சேவையைத் திறம்பட நடத்த நூலக முகாமைத்துவம் உதவியாகவுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக நூலகம் என்பது சமுதாய முன்னேற்றத்துக்கு பாடுபடும் ஒரு நிறுவனம் ஆகும். தனிப்பட்ட மனிதர்களின் சேவை என்பது இங்கு மிக முக்கியமானது. தனிப்பட்ட மனிதர்களின் திறமையை சமுதாய முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்த நூலக முகாமைத்துவம் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.

## நூலக முகாமைத்துவத்தின் அடிப்படைக் கூறுகள்

முகாமைத்துவத்தின் அடிப்படைக் கூறுகள் பற்றிப் பல்வேறு ஆசிரியர்களாலும் பல்வேறு கருத்துக்களும் விளக்கங்களும் முன்வைக்கப்பட்டிருப்பினும், லூதர் கூலிக் என்பவரது முகாமைத்துவ அடிப்படைக் கூறுகள் பற்றிய விளக்கம் நூலக முகாமைத்துவத்திற்கு பொருத்தமாகவுள்ளது. இவர் குறிப்பிடும் முகாமைத்துவ அடிப்படைக் கூறுகள் நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்ததுடன் தேவைக்குத் தகுந்த வகையில் இவற்றை மாற்றியமைத்து பயன்படுத்திக் கொள்ள முடியும். இவ்வடிப்படைக்கூறுகளை கூலிக் ஒழுங்குபடுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பின்வருமாறு:

1. திட்டமிடல் *Planning*
2. ஒழுங்கமைத்தல் *Organising*
3. அலுவலர்களை நியமித்தல் *Staffing*
4. இயக்குவித்தல் *Directing*
5. ஒருங்கிணைத்தல் *Coordinating*
6. அறிக்கை அனுப்புதல் *Reporting*
7. திட்டப்பட்டியல் தயாரித்தல் *Budgeting*

மேற்கூறப்பட்ட முகாமைத்துவ அடிப்படைக் கூறுகள் மட்டுமன்றி, கட்டுப்படுத்தல் *Controlling* செயலூக்கமளித்தல் *Motivating* என்பனவும் நூலக முகாமைத்துவத்தின் சிறப்புக் கூறுகளாக அமைய முடியும்.

## திட்டமிடல்

முகாமைத்துவப் பணிகளில் மிக முக்கியமானது திட்டமிடல் ஆகும். ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை ஒழுங்கான முறையிலும் திறமையான வகையிலும் அடைய வேண்டுமெனின் அக்குறிக்கோளை எவ்வாறு சிறந்த வகையில் அடைவது என்பது பற்றி மிக ஆராய்ந்து திட்டம் ஒன்று வகுக்கப்படல் வேண்டும்.

ஒரு நூலகத்திலும், தலைமை நூலகரின் பிரதான கடமைகளில் ஒன்றாக திட்டமிடல் அமைகின்றது. நூலகத்திற்கு வரும் பல்வேறு தரப்பட்ட வாசகர்களையும் திருப்திப்படுத்தக் கூடிய சேவையை வழங்கும் மிகப் பொறுப்புள்ள கடமையைச் செய்யத் திட்டமிடல் உதவுவதால் நூலகத் திட்டமிடலுக்கு பரந்து பட்ட அறிவும் அனுபவமும் தேவைப்படுகின்றது.

## திட்டத்தின் கூறுகள்.

திட்டத்தின் கூறுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. நோக்கங்கள்
2. கொள்கை முறைகள்
3. வரையளவு
4. செயல்முறை
5. நிகழ்ச்சிமுறை
6. திட்டப்பட்டியல்
7. முறை
8. நடைமுறைத் திறம்

## திட்டமிடலில் அடங்கியுள்ள படிகள்.

1. என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.
2. நோக்கங்கள் ஏன் செய்யப்பட வேண்டும்.
3. அதை எப்படி, எங்கே, எப்போது, யார் செய்தல் என்பதைத் தீர்மானித்தல்.
4. திட்டத்தின் காலம், திட்டத்திற்குத் தேவையான பணியாளர், எதன் மூலம் திட்டத்தினை செயற்படுத்த வேண்டும், திட்டத்தின் சாதனங்கள் ஆகியவற்றை நிர்ணயம் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. செயலின் விளைவை எவ்வாறு மதிப்பீடு செய்தல் என்பதை நிர்ணயித்தல்.

## ஒழுங்கமைத்தல்

ஒரு நிறுவனத்தின் நோக்கங்களை உரிய முறையில் அடையும் வகையில் அந்நிறுவனத்தின் உள்துறைகளை உரிய முறையில் அமையச் செய்வதே ஒழுங்கு அமைப்பு ஆகும். திட்டம் தீட்டியபின், அதைச் செயற்படுத்தும் வகையில் தேவையான நூல், உபகரணங்கள் வாங்குவதும், பணியாளர்களை வேலையில் அமர்த்துவதும் நிறுவனத்தைப் பல துறைகளாகப் பிரிப்பதும் இன்றியமையாதவையாகும். உதாரணமாக, ஒரு நூலகத்தில் பல்வேறு வகையான பிரிவுகள் உண்டு. அவ்வாறே ஊழியர், நூலகக் கவனிப்பாளர், நூலக உதவியாளர், உதவி நூலகர், சிரேஷ்ட உதவி நூலகர் எனப் பலதரப்பட்ட அலுவலர்களும் உள்ளனர். எனவே நூலகத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்தல் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் ஏற்ற வகையில் அலுவலர்களை நியமித்தல் என்ற பல்வேறு பணிகளையெல்லாம் ஒன்று திரட்டிச் சுருக்கமாகக் கூறுதலே ஒழுங்கு அமைப்பாகும்.

## அலுவலர்களை நியமித்தல்

இது அலுவலர்களை நூலகத்திற்குச் சேர்த்துக் கொள்வதனையும் அவர்களை நூலகத்தின் பல்வேறு பிரிவுகளிலும் சேவைக்கு அமர்த்துவதனையும் குறிக்கும். உதாரணமாக, நூலகத்தின் ஒரு பிரிவான பட்டியலாக்கம் பகுப்பாக்கப் பிரிவை எடுத்துக் கொண்டால் அங்கு துறைக்குப் பொறுப்பான உதவி நூலகர் அவரின் கீழ் கடமையாற்றும் நூலக உதவியாளர், நூலகக் கவனிப்பாளர், தொழிலாளர் எனப் பல தரப்பட்ட பிரிவினர் உள்ளனர். இவ் ஒவ்வொரு பிரிவுக்கும் தேவையான பணிகளை வரையறுப்பதும் அவர்;களுக்குரிய பயிற்சியளிப்பதும் அவர்களின் அடிப்படைக் கல்வித்தகைமைகளுக்கு ஏற்ப அவர்களது உத்தியோகத்தை வரையறுப்பதும் நூலக நிர்வாகத்தின் கடமையாக இருப்பதனால் அலுவலர்களை நியமித்தல் என்ற முகாமைத்துவ அடிப்படை கூறு நூலக முகாமைத்துவத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

## இயக்குவித்தல்

இயக்குவித்தல் என்னும் செயல்முறை நூலகருக்குக் கீழ் கடமையாற்றும் அலுவலர்களுக்கு வழிகாட்டுதலையும் அவர்களின் பணிகளை மேற்பார்வை செய்தலையும் குறிக்கின்றது. இது எளிமையானதாகத் தோன்றினாலும் நடைமுறையில் சிக்கல் வாய்ந்ததாகும். ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமையாளரும், தன் கீழ் கடமையாற்றும் அலுவலர்கள் ஒவ்வொருவரும் நிறுவனத்தின் சட்டம், ஒழுங்குமுறை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும் வகையில் வழிகாட்டல் வேண்டும். அலுவலர் ஒவ்வொருவரும், தாம் பணி புரியும் நிறுவனத்தின் அமைப்பு முறையையும், துறைகளுக்கு இடையே உள்ள உறவு முறையையும், ஒவ்வொரு துறையினதும் பணிகளையும், தமது பணிகளையும், ஆணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளையும் நன்கு அறிந்து கொள்வார்களே யானால் முகாமையாளரின் இயக்குவிக்கும் பணி என்பது இலகுவான தாகின்றது.

## ஒருங்கிணைத்தல்

ஒரு செயலுக்கான திட்டத்தை வகுத்து விட்டால் மட்டும் குறிக்கோளை நிச்சயமாக அடைந்து விட முடியும் என்ற உறுதி ஏற்பட்டு விடாது. ஒரு நிறுவனத்தில் உள்ள அலுவலர்களின் கூட்டான ஒருமித்த முயற்சியின் மூலமே குறிக்கோளை அடைய முடியும். தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் முயற்சிகள் ஒருங்கிணைக்கப்படும் போது தான் இவர்கள் ஒவ்வொருவரின் முயற்சியும் மற்றவரின் முயற்சிக்கு ஆதரவாக அமைவதாக இருக்கும். தனி நபர்களின் தனி முயற்சிகள் ஒருங்கிணைக்கப்படாவிடில் இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்ட பணிகளை மட்டுமே கருத்தில் கொண்டு செயலாற்றும் போது தங்களது சக அலுவலர்களின் முயற்சிகளை இழக்கவோ தடுக்கவோ கூடும். ஆகவே ஒவ்வொரு அலுவலரும் ஒரு குழுவாகக் கூட்டார்வத்துடன் செயலாற்றுமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

## அறிக்கை அனுப்புதல்

அறிக்கை அனுப்புதல் என்ற செயல்முறையின் கீழ் நிறுவனத்தின் உரிமையாளருக்கு அவ்வப்போது நிறுவனத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பது பற்றி அறிவித்தல், நிறுவனத்தின் நடவடிக்கைகளை பதிவேடுகள் மூலமும், ஆய்வுகள் மூலமும், தெரியப்படுத்துதல் என்பன அடங்கும். பதிவேடுகளின் மூலம் தலைமை நூலகர் நூலகத்தின் சிறந்த செயல்பாடுகளைத் தனது பொறுப்பதிகாரிக்குத் தெரியப்படுத்த முடியும். அது மட்டுமன்றி இத்தகவல்களைக் கொண்டு நூலக சேவையின் பயன்பாட்டையும் அவரால் மதிப்பிட முடியும்.

## திட்டப்பட்டியல் தயாரித்தல்

திட்டப்பட்டியல் தயாரித்தல் என்பது மிகவும் பயன்பாடுடைய முகாமைத்துவக் கருவியாகும். கவனமாகத் திட்டமிடல், கணக்கியல், கட்டுப்படுத்தல் என்பன திட்டப்பட்டியலில் மிகவும் அவசியமானது. தலைமை நூலகர் என்பவர் நூலகத்தின் தேவைகளைத் தொடர்ச்சியான அடிப்படையில் பரீட்சிக்க வேண்டியிருப்பதுடன் அதற்கேற்ற நிதியையும் பெறுவதற்கு முயற்சி செய்தல் அவசியம்.

## கட்டுப்படுத்தல்

கட்டுப்பாடு செய்தல், திட்டப்படி நடைபெற வழிவகுக்கின்றது. ஒரு முகாமையாளர் இதர பணிகளை உரிய முறையில் செவ்வனே செய்வாரானால், அவரைப் பொறுத்த வரை இப்பணி தேவையற்றது. ஆனால் தவறு செய்வது மனித இயல்பு என்பதற்கேற்ப பணியாட்கள் ஒரு சில தவறுகள் புரியலாம். புணியாளர்களுக்கிடையே உள்ள மன வேற்றுமை காரணமாகத் திட்டம் சரியாகச் செயற்படுத்தப் படாமல் போகலாம். திட்டம் பழைய தன்மை வாய்ந்தாக மாறலாம். இவை யாவும் தடுக்கப்பட்டு ஆரம்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலேயே சரி செய்யப்படாவிடில் நிறுவனம் மிக மோசமாகப் பாதிக்கப்படலாம். எனவே தான் கட்டுப்பாடு ஒவ்வொரு நிறுவனத்தின் ஆரம்பப் பகுதியிலும் மிக அவசியமாகின்றது. கட்டுப்பாட்டின் மூலம் திட்டத்தின் எந்த இடத்தில் தவறு நிகழ்ந்தது என்பதையும் அத்தவறுக்குப் பொறுப்பானவர் யார் என்பதையும் அறிந்து, தவறுகள் திருத்தப்படுகின்றன. இன்றைய நிலையில் கட்டுப்பாடு என்பது இன்றியமையாதது ஆகின்றது.

## செயலூக்கமளித்தல்

மற்றவர்களின் பணியை மேற்பார்வை செய்வதென்பது அதிகாரம் செலுத்துவது என்பதன்று. அவர்களுக்கு உரிய ஒத்தாசை வழங்கி, ஊக்கமளித்து அவர்களின் பிரச்சினைகளில் அக்கறை காட்டி அவற்றை தீர்ப்பதற்கு தக்க ஆலோசனை கூறி வழிகாட்டியாயிருந்து, அவர்களுக்குத் தலைமை ஏற்கும் பணியே நிர்வாகத்தினர் செய்ய வேண்டிய பணிகளிலெல்லாம் தலையாயது. தொழிலாளர் உயிருள்ள இயந்திரங்களல்லர். அவர்களும் மனிதர்கள் தான். அவர்களுக்கும் மனித உணர்ச்சிகளும், ஆசாபாசங்களும் உண்டு என்பதை உணர்ந்து அவற்றுக்கு மதிப்பளித்து, தனக்குக் கீழப் பணிபுரிவோரின் மனதில் அமைதியையும் மகிழ்ச்சியையும் வளர்த்துக் கொண்டு அவர்கள் தங்கள் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுமாறு ஊக்குவித்தால் தான் உயர்ந்த பட்சமான உற்பத்தியைப் பெற இயலும். தொழிலாளர்களின் மிகச் சிறந்த ஆற்றலையும் உழைப்பையும் பெறுவதற்கு ஊக்கம் நிறைந்த குழுக்களாக அவர்களை மாற்றுவது அவசியம். இந்த வகையிலேயே ஊக்குவித்தல் என்பது நூலக முகாமைத்துவத்தின் முக்கியமான ஒன்றாக இருப்பதுடன் சிறந்த ஒரு சேவையை வாசகருக்கு வழங்குவதற்கு மிக உதவியான காரணியாகவும் கருதப்படுகின்றது.

## நூலக முகாமைத்துவத்தின் படி நிலைகள்

ஏனைய நிறுவனங்களைப் போன்றே நூலகத்திலும் மூன்று விதமான முகாமைத்துவப் படிநிலைகளை நாம் காண முடியும். அவை பின்வருமாறு:

1. மேல்நிலை முகாமைத்துவம் Top level management
2. இடைநிலை முகாமைத்துவம் Middle level management
3. கடைநிலை முகாமைத்தவம் Low level management

மேல்நிலை முகாமைத்துவத்தினுள் தலைமை நூலகர், நூலகத்தின் தலைவர், இயக்குநர், முதுநிலை அலுவலர்கள் தரம் ஒன்றிலும், உதவித் தலைமை நூலகர், முதுநிலை உதவி நூலகர்கள் தரம் இரண்டிலும் அடங்குவர். இவர்களது பணி, நிறுவனத்தின் நோக்கங்களை தனக்குக் கீழ் கடமையாற்றும் ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பான உதவி நூலகர்களை கொண்டு இயக்குவித்தல் ஆகும். இடைநிலை முகாமைத்துவத்துக்குள் நூலகத்தில் காணப்படும் ஒவ்வொரு துறைகளுக்கும் பொறுப்பான உதவி நூலகர்கள் அடங்குவர். இவர்களது பணி துறைகளுக்குரிய பணிகளை, தமக்குள் கடமையாற்றும் அலுவலர்களை நேரடியாக மேற்பார்வை செய்வதன் மூலம் பெற்றுக் கொள்வதாகும். கடைநிலை முகாமைத்துவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குள் முதுநிலை நூலக உதவியாளர்கள், நூலக உதவியாளர்கள் என்போர் அடங்குவர்.

## நூலகமும் அதன் நிர்வாகியும்

நூலகம் என்பது குறிக்கப்பட்ட சில எதிர்பார்ப்புகளுடன் கட்டியெழுப்பப்படுகின்ற குறிக்கப்பட்ட சில தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பை வழங்குகின்ற, குறிக்கப்பட்ட உண்மையான உள்ளுறவுள்ள, நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்ற ஒரு நிறுவனமாகக் கருதப்படுகின்றது. நூலகங்கள் செயல்படுபிரிவுகளாக அமைக்கப்படும் போது நூலகர் இச்செயல்படுபிரிவுகளின் தொழிற்பாடுகளுக்கும் அங்கு கடமையாற்றும் அலுவலர்களுக்குமிடையில் ஒரு பாலம் போல் செயல்படுகின்றார். அது மட்டுமன்றி நூலகர் நூலக அமைப்பின் மிக உயர்ந்த அளவிலான குறிக்கோளை அடைவதற்காக தங்களுக்குக் கீழ் கடமையாற்றும் அலுவலர்களுக்கு ஊக்கமும் செயல்திறனும் அளிப்பவர்களாக இருப்பதுடன் அதற்கான உந்து சக்தியை வழங்குபவர் களாகவும் உள்ளனர். எனவே நூலகர் நூலகத்திற்கும் அதன் அலுவலர்களுக்கும் இடையில் ஒரு இணைப்பை உருவாக்குவதன் மூலம் அமைப்பு ரீதியான கடமையில் அவர்கள் தமது சக்தியை செலவு செய்வதற்கு விருப்பப்படும் படி செய்ய முடியும்.

## நூலகமும் அதன் அலுவலரும்

நூலகத்தினை ஒரு கட்டுமான அமைப்பாகவும் அதே நேரம் தனிப்பட்ட ஒவ்வொரு அலுவலரையும் இன்னொரு கட்டுமான அமைப்பாகவும் நாம் கருதுவோமாயின் இந்த இரு வேறுபட்ட அமைப்புக்களையும் ஐக்கியப்படுத்துகின்ற அல்லது ஒருங்கிணைக்கின்ற வேலையை செய்யும் நூலகர் மிகப் பிரதானமான ஒரு இடத்தை வகிக்கின்றார் எனலாம். நூலக அமைப்பானது சில குறிக்கப்பட்ட நோக்கங்களையும் கொள்கைகளையும் குறிக்கோளையும் இலக்காகக் கொண்டது. அது போல் அந்த நூலகத்தில் கடமையாற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட அலுவலரும் தமக்கென்று சில குறிக்கப்பட்ட தேவைகளைக் கொண்டிருக்கின்றார். இந்த வேறுபட்ட இருவகையான கட்டுமான அமைப்புகளும் தங்களது தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் பட்சத்தில் தான் இணைந்த, கூட்டுறவு முறையிலான ஒரு அமைப்பாக தோற்றம் பெறுகின்றன. இவ்வாறு இல்லாவிடில் ஒரு நிறுவனமானது அதன் குறிக்கோள், நோக்கம், இலக்குகளை அடைவதற்கு தனிப்பட்ட ஒருவனது சேவை அவசியம் என்பதற்காக அவனைச் சம்பளத்துக்கு வேலைக்கு அமர்த்துகின்றது என்றோ அதே போல ஒவ்வொரு தனிப்பட்ட அலுவலரும் அவரது சொந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு நிறுவனம் உதவும் பட்சத்தில் தனது சேவையை வழங்கத் தயாராக இருக்கின்றான் என்றோ கொள்ள முடியும். ஒரு நூலகத்துக்கும் அதன் ஒவ்வொரு அலுவலர்களுக்குமிடையிலான இந்த பரஸ்பர உறவுமுறை உளவியல் சார்ந்ததொன்றாகும். நூலகமும் அதன் அலுவலரும் இந்த பரஸ்பர உறவு முறைக்குள் பிரவேசிக்கும் போது, இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புகளும் ஒவ்வொருவரும் எதை வழங்குவார்கள், எதைப் பெற்றுக் கொள்வார்கள் என்ற சில எதிர்பார்ப்புகளை முன்வைத்துக் கொண்டு இந்த உறவுமுறையை அணுகுகின்றனர். இந்த எதிர்பார்ப்புகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ. ஒரு நிறுவனத்தினால் வழங்கப்படக் கூடியதாக இருப்பதும் ஒரு தனிப்பட்ட அலுவலரினால் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுமான எதிர்பார்ப்புகள்.

1. ஊதியம்.
2. சொந்த அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்.
3. சிறந்த சேவையை இனங்காணலும் அதற்கான அங்கீகாரத்தை வெளிப்படுத்தலும்.
4. அத்தியாவசியமான பாதுகாப்பு.
5. சினேகபூர்வமானதும் ஒருவருக்கொருவர் உதவி அளிக்கக் கூடியதுமான சூழல்.
6. நல்ல முறையில் நடாத்தும் தன்மை.
7. கருத்தாழம் மிக்கதும் குறிக்கோளை உடையதுமான சேவை.

ஆ. ஒரு தனிப்பட்ட அலுவலரினால் வழங்கப்படக் கூடியதும் ஒரு நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுமான எதிர்பார்ப்புக்கள்.

1. நேர்மையான நாளாந்த உழைப்பு.
2. அமைப்புக்கு விசுவாசமாக இருத்தல்.
3. தன்முயற்சித்திறன்
4. நிர்வாகத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படல்.
5. வேலைப்பயன்பாடு
6. அலுவலர் புதிதாக ஒன்றைப் பயில்வதற்கும், அதனை அபிவிருத்தி செய்வதற்குமான விருப்பமும் இணக்கமும்.

அரச நிறுவனங்களாயினும், தனியார் நிறுவனங்களாயினும் சமூக சேவை, கல்வி நிறுவனங்களாயினும் அங்கு முகாமைத்துவம் என்பது மிகவும் முக்கியமான ஒரு கருவியாக கையாளப்படுகின்றது. மனித சமூகத்தின் இயற்கையான தொழிற்பாடுகளுடன் இது தொடர்புடையதாக இருப்பதன் காரணமாகவே இது முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இந்த வகையில் சேவையை மட்டும் முக்கிய குறிக்கோளாகக் கொண்ட ஒரு சமூக நிறுவனமாக நூலகமும் கூட அது பொதுசன நூலகமாயினும், பாடசாலை, பல்கலைக்கழக நூலகமாயினும் முகாமைத்துவக் கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் அதனது அளப்பரிய நோக்கமான நூலக சேவையை திறம்பட நடாத்த முடியும். சிக்கலானதும் நுண்முறைகளுடன் கூடியதுமான நூல்களின் தொகை ரீதியானதும், அடிப்படையிலானதுமான வளர்ச்சி நூலக முகாமைத்துவக் கோட்பாடு களிலும் மிகப் பெரிய அளவு மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் விஞ்ஞான முறை சார்ந்த நூலக முகாமைத்துவத்தின் தோற்றத்திற்கு அடி கோலியிருப்பதை வளர்ந்து வரும் எமது நூலக சேவையில் இருந்து நாம் கண்கூடாகக் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்.

1. முத்தையன், இராம. மேலாண்மைத் தத்துவங்கள், சென்னை: தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1976.
2. GARLISLE, Howard M. Management: Concept and situations. Chicago: Science Research Associates, 1976.
3. HARROLD's Librarian's Glossary and Reference Book. Comp.

   by. R. Prythereh. England: Gower Publishing, 1987.
4. Herald of Library Science. Vol. 24, No. 3, 1985,July.
5. KUMAR, Krishan. Library Manual. NowDelhi: Vikas, 1982.
6. MITTAL, R.L. Library Administration: Theory and Practice.

   New Delhi : Metropolitan, 1964.
7. SHARMA, J.S. Library Organization. New Delhi: Vikas, 1978


(நன்றி - இணையம்)

---

"இலக்கியத்தின் லிங்கன்" Lincoln of Literature என்று அழைக்கப்படும் பிரபல எழுத்தாளர் மார்க் ட்வைன் (Mark Twai) அமெரிக்க எழுத்தாளர், இயற்பெயர் - சாமுவேலாங்ஹார்ன் க்ளெமென்ஸ்."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இச் சஞ்சிகை பூநகரி பொதுநூலக சமூகத்தினரால் 2017 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்படுகின்றது.

noolaham.org | aavanaham.org